# சமாதான நோக்கு

மலர் 09 இதழ் 01
செப்டெம்பர் 2012
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை யதார்த்தமாக்க முடியுமா?





சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி, ருக்கீ ஃபெர்ணாண்டோ, சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா, பேராசிரியர் ஜயந்த செனெவிரத்ன, அமைச்சர் திரு. நிமல் சிறிபால டி சில்வா, மஞ்சுள கஜநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ISSN:** 955-1800-0061

முதற்பதிப்பு: 2012 செப்டெம்பர்

அச்சுப் பதிப்பு: க்ளோப் பிரின்டிங் வேர்க்ஸ், தொலைபேசி: +94(11)2689259

Friedrich Naumann STIFTUNG FÜR DIE FREIHEIT

பெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசாரம் வெளியிடப்படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாகா பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்பு செய்கின்றது. இப்பிரசுரத்தின் உள்ளடக்கம் பற்றிய வகைப்பொறுப்பு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தைச் சாரும்.

CPA

Centre for Policy Alternatives

மாற்றுக்கொள்கை நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பொன்றாவதோடு பிரதானமாக அரசாக்கம், முரண்பாடுகளைத் தீர்த்தலும் அதனுடன் இணைந்த முரண்பாடுகளின் பால் அவதானம் செலுத்தும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 1996ம் ஆண்டு அமைக்கப்பட்டதற்கான காரணம் பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாசனைக்கான சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கையைக் கொண்டுள்ளது. பொது மக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இணங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணித்துள்ளது.

விலாசம் : 24/2, 28வது ஒழுங்கை ப்.்.ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : +94(11) 2565304/5/6
்.பக்ஸ் : +94(11) 4714460
இணையதளம் : www.cpalanka.org
மின் அஞ்சல் : info@cpalanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 09 இதழ் 01 ஒக்டோபர் 2012

தொலைபேசி 94-1-2370801/4 தொலைநகல் 94-1-2370802 ஈமெய்ல் cpa@sri.lanka.net இணையத்தளம் www.cpalanka.org

# மகிழ்ச்சி – சமாதானம் – சகோதரத்துவம்

அனைத்து முகங்களிலும் சிரிப்பைக் காணும் ஓர் யுகம் எனக்குத் தேவை. ஏனெனில், பல தசாப்தங்களாக கண்ணீர் மல்க அச்சத்தோடு நாம் ஒதுங்கியிருந்தோம். இப்போது யுத்தம் ஓய்ந்துவிட்டது. அது நல்லது. ஆனால், மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் இருந்தே வருகிறது. அந்த அபாயம் ஓயவில்லை. அன்று சட்டத்தின் ஆட்சி ஆட்டங்கண்டபடியாலேயே யுத்தம் ஏற்பட்டது. சந்தேகம் அன்று சட்டமாக மாறியிருந்தது. இந்நிலமை பகைமை உணர்வையே மேலோங்கச் செய்தது. இதனை எதிர்நோக்க வன்முறை தோன்றியது. வடக்கிலும் தெற்கிலும் வளங்கள் தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டன. வெடி மருந்துகள் விலைக்கு வாங்கப்பட்டன. நாடு பிளவுபடுவதா? இல்லையா? என்பது பற்றி ஒரு மோதல் நிலவியதாக கூறப்பட்டாலும், அது உண்மையில் எமது பூமியையும், வீடு வாசல்களையும் தோட்டங்களையும் கால்நடைகளையும் குடும்ப உறவுகளையும் மனிதர்களையும் அழித்தொழித்தது. இரு தரப்பினரது பகைமை உணர்வின் விளைவு அனைத்து மக்களினது இழப்பாகும்.

நாடு பிளவுபடுவதற்கான காரணிகள் தொடர்கின்றன. சட்டம், மொழி, சமயம் என்ற வகையில் பாரபட்சங்கள் நிலவுவதால் பிரிவினை அதன் மூலவேராக உள்ளது. இன்றும் இப்பாரபட்சங்கள் குறைந்தபாடில்லை. அடுத்து பிளவுக்குக் காரணமாக உள்நாட்டு யுத்தம் அவசியமில்லை. ஏனெனில், தற்போது அது வெளிநாட்டு அரசியல் உபாயமார்க்கமாக மாறியுள்ளது. பாரபட்சங்கள் நிலவினால் பிளவுபடும் அபாயம் எதிர்காலத்திலும் இருக்கும். அதன்மூலம் வடக்குக் கிழக்கு யுத்தத்திற்கு ஏதுவான காரணங்கள் தென்னிலங்கையில் உருவாக்கியமையால் யுத்தம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பயணிப்பதில் சந்தேகம் இல்லை.

அதன் அடிப்படைக் குணாம்சங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

- ஒட்டுமொத்த மக்களின் வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டு ஊழல் மோசடிகள் மூலம் ஒரு சிலரின் கைகளை வந்து சேர்கின்றன.
- ஆட்சி அதிகாரத்தின் உதவியால் சிலர் குற்றச் செயல்களையும், பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுகளையும் பயங்கர கொள்ளைகளையும் நடத்தி சட்டத்திலிருந்து தப்பிவிடுகின்றனர்.
- நாடு சுகாதாரத்திலும், கல்வியிலும் கலாசாரத்திலும் நற்பெயரிலும் மோசமாகச் சீரழிந்து வருகிறது.

இங்கு கூறப்பட்ட கூறப்படாத வியாதிகள், நோய்கள், ஆபத்துக்கள், எதிரிகளின் சதிகள் என்பவற்றிற்கு அரசியல்வாதிகளே பொறுப்புக்கூறல் வேண்டும். உண்மையான எதிரிகள் அவர்களே. எனவே இச்சகல பாதிப்புக்களினதும் பாவங்களைச் சுமப்பவர்கள் பொதுமக்கள் ஆவர். இப்பாவங்கள் அவர்களின் பிள்ளைகளையும் வந்து சேர்கின்றன. பாதிப்புக்களினால் பிறக்கும் சுக வாழ்க்கையை அனுபவிப்பவர்கள் பொது மக்களே. அவர்களின் புண்ணியம் பிள்ளைகளுக்கும் உரித்தாக்கப்படுகின்றது. இவ்வாறாக மீண்டும் யுதத்தத்தை ஆரம்பித்தோ ஆரம்பிக்காமலோ நாட்டைப் பிரிப்பதற்கு ஒருசில அரசியல்வாதிகளே திட்டமிடுகின்றனர். எனவே நாட்டின் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களாகிய நாமே திட்டமிட வேண்டும். எமக்கு சமாதானம் அவசியம் மகிழ்ச்சியும் சகோதரத்துவமும் அவசியம்.

ஆலோசகர்: லயனல் குருகே

பதிப்பாசிரியர்: எஸ்.சிவகுருநாதன், பக்க வடிவமைப்பு: சுகந்தி மணிமாறன்,

அச்சாக்கம் : க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777-315971

"சமாதான நோக்கு" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

"சமாதான நோக்கு" சஞ்சிகை, இலங்கையின் மோதலை தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : "சமாதான நோக்கு"
24/2, 28வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு-7
தொலைபேசி : 011 2565304-6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org இணைய தளம் : www.cpalanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











எல்.எல்.ஆர்.சீ. ஆணைக்குழுவின் பரிந்துரைகளும்
ஜெனீவாப் பிரேரணைகளும் நாட்டின் எதிர்காலமும் 3

LLRC என்றால் என்ன ?
சட்டத்தரணி ஜகத் லியன ஆரச்சி 9

சர்வதேச ரீதியான கால இடைவெளியைக்
கொண்ட மீளாய்வு (UPR) என்றால் என்ன?
ருக்கி பெர்னாண்டோ 12

உண்மைக்கான ஆணைக்குழு
டேவிட்.எல்.பிலிப் 14

LLRC அறிக்கையும் தமிழ் தேசியக்
கூட்டமைப்பின் பிரதிபலிப்பும்
அசங்க வெலிகல 20

நடவடிக்கைச் செயற்திட்டம் அமுலாகுமா?
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா 24

LLRC பரிந்துரைகளை யதார்த்தபூர்வமானதாக
மாற்றிக்கொள்ள முடியுமா?
பேராசிரியர் ஜயந்த செனெவிரத்ன 27

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவை (UNHRC) 31

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு
(LLRC), வகைப்பொறுப்பும், நல்லிணக்கமும் 33

LLRC பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அரசுக்கு
தெளிவான மார்க்கம் உண்டு
அமைச்சர் திரு. நிமல் சிரிபால டி சில்வா 40

இடைக்காலப் பரிந்துரைகளும் அதன் பின்னணியும்
மஞ்சுள கஜநாயக்க 43

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு
தொடர்பாக அரச அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள் 45

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு
பற்றிய வெளிநாட்டுத் தலைவர்களின் கருத்துக்கள் 46

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு
பற்றிய அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் 51

கற்ற பாடங்களும் சித்தியடையாத பாடங்களும் 55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்.எல்.ஆர்.சீ. ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் ஜெனீவாப் பிரேரணைகளும் நாட்டின் எதிர்காலமும்

நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் கேள்விக்குட்படுத்தக்கூடிய ஒரு விடயம் உண்டு. அது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளாகும். மேற்படி (LLRC) பரிந்துரைகள் யாவை? அவற்றை அமுல்படுத்துவதனால் நாட்டுக்குப் பாதகம் விளையுமா? அவற்றை அமுல்படுத்தினால் எமது நாடு சர்வதேச சமூகத்தின் அடிவருடியாக மாறுமா? அமுல்படுத்தப்படாவிட்டால் நாட்டின் ஆட்சியாளர்களுக்கு தண்டனை விதிக்க முடியுமா? என்ற இன்னோரன்ன பல கேள்விகள் எழுந்துள்ளன. மேற்படி பரிந்துரைகளைப் பற்றி அரசாங்கமும் வெகுஜன ஊடகங்களும் முன்வைக்கும் கருத்துக்களிலிருந்து உணரப்படுவது என்ன? முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்திற்குப் பாதகமானவை. இக் குற்றச்சாட்டுக்களோடு அரசாங்கத்திற்கு தொடர்பு இல்லை. அவற்றை எதிர்ப்பது எமது தேசப்பற்றை வெளிப்படுத்தும் ஓர் குணாம்சம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய ஆணைக்குழுவை நியமித்து பரிந்துரைகளைப் பெறுவதும் மேற்படி பரிந்துரைகளை அமுல்படுத்தாமல் இருப்பதன் பெறுபேறுகளையும் பொதுமக்களின் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் விபரங்கள்:**

2009 ஜந்து 19ம் திகதி யுத்தம் முடிவடைந்த பின்பு சர்வதேசப் போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டது பற்றியும் உலகத்தில் பரவலாக பேசப்பட்டது. அதற்கான பல காரணங்கள் முன் வைக்கப்பட்டன. அவற்றுள் சில பின்வருமாறு :

1. கொத்துக்குண்டுகளின் தாக்குதலினால் சிவிலியன்கள் படுகொலை செய்யப்படுதல்.
2. வைத்தியசாலைகளுக்கும் தடைசெய்யப்பட்ட இடங்களுக்கும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் (ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகங்களையும் செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்களையும் தாக்குதல்.)
3. மனித நேய உதவிகளைப் (உணவு மருந்து வகைகள்) புறக்கணித்தல்
4. இடம்பெயர்ந்தவர்களுக்கும் சந்தேக நபர்களுக்கும், மோதலினால் உயிர் பிழைத்தோருக்கும் துன்பங்களை ஏற்படுத்துதல்.
5. போரின் கடைசிக் கட்டத்தில் வெள்ளைக்கொடியேந்தி சரணடைய வந்தோரைப் படுகொலை செய்தல்.
6. அரசாங்கத்தை விமர்சித்தோரும் ஊடகவியலாளரும் மோதல் வலையத்திற்கு வெளியே துன்புறுத்தப்படுதல் - படுகொலை செய்யப்படுதல்

1-5 வரையிலான மேற்படி விடயங்கள் குற்றங்கள் என நிருபிக்கப்பட்டால் அது சர்வதேச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான திரு. பான் கீ மூன் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியுடன் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பாக வகைப்பொறுப்புக் கூறும் நடவடிக்கை இலங்கைக்கு இருத்தல் வேண்டும் என பொதுச் செயலாளர் வலியுறுத்தினார்.

மனிதநேயச் சட்டங்களின் (IHRL) கீழ் குற்றங்களாகும். மேற்கூறிய 6வது விடயமும் வேறு மனித உரிமை மீறல்களும் சர்வதேச மனித உரிமை மீறல்களாகும். (IHRL)

மேற்கூறிய தவறுகள் செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டால், இலங்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு அமைய வகைப்பொறுப்புக் கூறக் கடப்பாடுடையது. இது பற்றி பல்வேறு மார்க்கங்களில் ஐக்கிய நாடுகள் சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்திருக்கக் கூடும்.

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான திரு. பான் கீ மூன் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியுடன் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பாக வகைப்பொறுப்புக் கூறும் நடவடிக்கை இலங்கைக்கு இருத்தல் வேண்டும் என பொதுச் செயலாளர் வலியுறுத்தினார்.

அதற்கு இலங்கை ஜனாதிபதி பின்வருமாறு உடன்பாடு தெரிவித்தார்: எதாவது இழப்பீடுகள் அல்லது மனக் குறைகள் இருப்பின் அவற்றிற்கு தீர்வு காணப்படும்.

ஆனால் எதுவுமே இடம்பெறவில்லை. இந்நிலையிலேயே ஐ.நா.செயலாளர் நாயகம் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு விசேட நிபுணர் குழு ஒன்றை நியமனம் செய்தார். இந் நிபுணர் குழுவின் அறிக்கை தருஷ்மான் அறிக்கை எனப்படும். இவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மனித உரிமைச் சட்டங்களை மீறியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையை அரசாங்கமும் அரசாங்கத்திற்கு சார்பான ஊடகங்களும் இனவாதிகளும் தாறுமாறாக தாக்கத் தொடங்கினர். இவ்வாறு செய்வதன் மூலம் இலங்கை அரசாங்கம் ஒரு செய்தியை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூறியது: வெளிநாட்டு ஆணைக்குழுக்கள் எமக்கு வேண்டாம். “எமது ஆணையாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவொன்றை அமைத்து நாமே விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்போம்”.

இதற்கிணங்க இலங்கையின் 8 அறிஞர்களைக் கொண்ட குழாம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டாம் பிரிவிற்கு அமைய நியமிக்கப்பட்டது. அது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு என அறிவிக்கப்பட்டது. இப்போரின் மூலம் குறிப்பிடப்படுவது போல யுத்தத்தினால் கற்ற பாடங்கள் எவை? தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்ற விடயங்களையிட்டு பரிந்துரைகள் எதிர்பார்க்கப்பட்டன. இவ்வாணைக்குழுவிற்கு விசாரணை செய்ய அதிகாரமளிக்கப்பட்ட விடயங்கள்.

1. 2002-02-21ம் திகதி அமுலாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தோல்வி அடைந்தமைக்கான காரணிகளும் அதன் பின்னர் 2009-05-19 வரை இடம்பெற்ற சம்பவங்களும்
2. மேற்படி சம்பவங்கள் தொடர்பாக ஒரு நபரோ அல்லது குழுமமோ மறைமுகமாக பொறுப்புக்கூற வேண்டுமா?
3. இச்சம்பவங்கள் மூலம் நாம் கற்க வேண்டிய பாடங்களும் இத்தகைய சம்பவங்கள் எதிர் காலத்தில் இடம்பெறாமலும் இருக்கத்தக்கதாக நாம் கண்டறிய வேண்டிய விடயங்கள்.
4. மேற்படி சம்பவங்கள் காரணமாக பாதிப்புக்குள்ளான தனி நபர் அல்லது தங்கி வாழ்வோர் அல்லது உரித்தாளர் இயல்பு நிலைக்கு உட்படுத்த எடுக்க வேண்டிய வழி முறைகள்
5. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் சகல சமூகங்களிடையே ஒற்றுமையையும் தேசிய நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு இவ் ஆணைப்பத்திரத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய விடயங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நிறுவன நிர்வாக சட்ட நடவடிக்கைகள் யாவை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 முதல் 2011 நவம்பர் வரை சாட்சிகளை விசாரணை செய்து ஆணைக்குழு நீண்ட அறிக்கையோடு 285 பரிந்துரைகளைச் செய்துள்ளது. இந்தப் பரிந்துரைகளுக்கிடையே ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படாத எந்த விடயமும் இல்லை. அதிகாரம் இருந்தாலும் சில விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

(LLRC) ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பின்வரும் விடயங்களையிட்டு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- சிவிலியன்களின் பாதுகாப்பு நிமித்தமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவ ஆட்சியிலிருந்து மேற்படிப் பிரதேசங்கள் விடுவிக்கப்படுதல்.
- சட்ட விரோதமாக சுடுகலன்களைப் பயன்படுத்தும் குழுக்களை தடை செய்தல்.
- காணாமற் போதல், கடத்தப்படுதல் ஆகிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்தல்.
- சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்டவர்கள் பற்றி முறையான விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தின் தீர்வுகளை மேற்கொள்ளுதல்.
- இராணுவம் தான்தோன்றித்தனமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் காணிகளை பயன்படுத்துவதை நீக்கி தேசிய காணிக்கொள்கைக்கமைய விசேட காணி ஆணைக்குழு ஒன்றை நிறுவி விசேட காணி ஆணையாளரை நியமித்து காணிகளின் பிணக்குகளைத் தீர்த்தல்.
- கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தையும் தகவல்களை பெறும் சுதந்திரத்தையும் உறுதி செய்தல் வேண்டும்.
- பெண்கள், சிறுவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் வலது குறைந்தோர் ஆகியோருக்காக விசேட வசதிகளையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துதல்.
- சர்வதேச நியமங்களுக்கு அமைய யுத்தத்தினால் இறந்தவர்களுக்காக நஷ்ட ஈடு வழங்குதல். மரணச் சான்றிதழ்களை விநியோகித்தல்.
- தேசிய இனங்களுக்கிடையிலே நட்புறவையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு நீண்டகால வேலைத்திட்டத்தை அமுலாக்குதல்.
- 13வது திருத்தச் சட்டத்தை அமுலாக்கி அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை உருவாக்கி அரசியல் தீர்வொன்றை எட்டுதல்.
- மும்மொழிக் கொள்கையை சகல பாடசாலைகளிலும் அமுலாக்கல்.
- சமாதானக் கல்வியை உத்தரவாதப்படுத்துதல்.
- கல்வியில் சம சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- தேசிய ஐக்கியத்திற்காக கலையையும் கலாசாரத்தையும் பயன்படுத்துதல்.
- மோதல் பிரதேசங்களுக்கு அண்மையில் வாழும் சிங்கள மக்களினதும், முஸ்லிம் மக்களினதும், மலையகத் தமிழர்கள் உட்பட சகல மக்களினதும் விசேடமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
- தேசிய ஐக்கியத்திற்காக சிறந்த பிரதிபலிப்பைக் காட்டும் புலம்பெயர்ந்தோருடன் (Diaspora) சிறந்த ஒத்துழைப்பை அமுலாக்குதல்.
- சட்டம், சட்ட நிறுவனங்கள், நீதிமன்றம் ஆகியன இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய ஒத்துழைப்பைப் பெற வேண்டும். அதே சமயம் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்.

இப்பரிந்துரைகளோடு முக்கியமான அவதானிப்புகளும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டின் நிலைமையைப் பற்றி பின்வரும் அவதானிப்பு உள்ளது. "தற்போது



**"முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இத்தகைய தீர்க்கமான பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறியமையால், அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் பற்றி நாம் புரிந்துகொள்ளக்கூடிய விமர்சனங்கள், சந்தேகங்கள் உண்டு. இந்த ஆணைக்குழுவும் (LLRC) இச்சந்தேகத்திலிருந்து மீள முடியாது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இத்தகைய தீர்க்கமான பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறியமையால், அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் பற்றி நாம் புரிந்துகொள்ளக்கூடிய விமர்சனங்கள் சந்தேகங்கள் உண்டு. இந்த ஆணைக்குழுவும் (LLRC) இச்சந்தேகத்திலிருந்து மீள முடியாது.

உருவாக்கப்பட்டுள்ள அரசியல் கலாசாரம் காரணமாக பொதுமக்கள் பலவீனமான அப்பாவிகளின் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சட்டத்தின் ஆட்சி நிலவ வேண்டுமே ஒழிய தனிநபரின் ஆட்சி நிலவக் கூடாது :

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இதுவரை பிரச்சினைகளை மறப்பதற்கும் பிற்போடுவதற்கும் உதவியுள்ளன. இதனைக் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இத்தகைய தீர்க்கமான பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறியமையால், அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் பற்றி நாம் புரிந்துகொள்ளக்கூடிய விமர்சனங்கள், சந்தேகங்கள் உண்டு. இந்த ஆணைக்குழுவும் (LLRC) இச்சந்தேகத்திலிருந்து மீள முடியாது. LLRC ஆணைக்குழு பரிந்துரைத்த இடைக்கால அறிக்கையைக் கூட அரசாங்கம் செயற்படுத்தாமையை இந்த அவதானிப்பு சிறப்பாக உறுதிப்படுத்தியுள்ளது. ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் சாட்சிகளிடமிருந்து விசாரணைகளை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் "உதயன்" பத்திரிகையின் ஆசிரியர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையால் ஆணைக்குழு தனது கவலையைத் தெரிவிக்கிறது.

அவ்வாறாயினும் LLRC ஆணைக்குழு வகைப்பொறுப்பு பற்றிய சர்வதேச அங்கீகரிப்புக்களுக்கு பொருத்தமற்றது என்றும், போலியான உண்மைத் தேடலை ஆணைக்குழு செயற்படுத்தவில்லை என்றும் தருஸ்மான் அறிக்கையிலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் விடயப்பொருளும், நடைமுறைப்படுத்திய முறைமையும், குற்றம் சம்பந்தமான விடயங்களை விசாரணை செய்தலும் போதுமானதாக அமையவில்லை. போரோடு தொடர்பு கொண்ட இரு தரப்பினரும் மேற்கொண்ட பாரதூரமான உரிமை மீறல்கள் பற்றி முறைசார் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதிக்கும் ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லை" என்று மேற்கூறிய தருஸ்மான் அறிக்கை குற்றம் சுமத்துகிறது.

இக்குற்றச்சாட்டுக்களுக்கு LLRC யின் சில அவதானிப்புகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. அதாவது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்கள் விடுவிக்கப்படும் போது,

- அரச படையினர் மிகக் கவனமாக செயற்பட்டுள்ள அதேவேளை உயிரிழப்புக்களை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்குக் குறைத்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- யுத்தம் நிலவும் போது இராணுவம் வேண்டுமென்றே சிவில் மக்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை என்றும்
- விடுதலைப் புலிகள் மனித உரிமைச் சட்டங்களையும் சர்வதேச மனிதநேயச் சட்டங்களையும் மீறி உள்ளமை, தருஸ்மான் அறிக்கையில் இரு தரப்பினரும் சட்டங்களை மீறியுள்ளமையை குறித்தது.

LLRC அறிக்கை இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து அரசை விடுவித்துள்ளது. இவ்வாறாக விடுவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு வகைப்பொறுப்பு உண்டு என்றும், LLRC ஆணைக்குழு ஏனைய பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்றும் மேற்கத்தைய நாடுகளை முதன்மையாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை கருதுகிறது. இந்த அடிப்படையிலேயே ஜெனீவாவில் அமெரிக்கப் பிரேரணை தயாரிக்கப்பட்டது. அந்தப் பிரேரணையின் உள்ளடக்கம் பின்வருமாறு:

1. இலங்கை சர்வதேச யுத்தச் சட்டங்களையும் பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கைகள் மூலம் கடப்பாடு கொண்ட உரிமைச் சட்டங்களையும் மீறியுள்ளது.

2. ஐக்கிய நாடுகள் இது பற்றி விசேட விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.
3. இதற்குத் தேவையான தொழில்நுட்ப ரீதியானதும் வேறு உதவிகளையும் ஐக்கிய நாடுகள் வழங்கத் தயாராக உள்ளது.
4. இப்பிரேரணை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையிட்டு மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில் ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இப்பிரேரணை மூலம் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மேற்கத்திய நாடுகள் முயற்சிக்கின்றன என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

நாட்டின் பல்வேறு மாகாணங்களுக்குச் சென்று பல்வேறு மனிதர்களைச் சந்தித்து வாய் மொழி மூலம் பெற்ற சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டே LLRC பரிந்துரைகள் அமைந்தன. உண்மையில் நடந்த சம்பவங்களே அங்கு வெளியிடப்பட்டன. நடந்த சம்பவங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கூறப்பட்டிருந்தாலும் சாட்சிகள் மேலதிகமாக கூறப்படவில்லை. அவற்றை ஆணைக்குழு பரிந்துரைகளாக சமர்ப்பித்துள்ளது. இவை அனைத்தையும் செயற்படுத்தினால் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய சகல இன மக்களுக்கும் பேருதவியாக இருக்கும்.

ஆணைக்குழு சட்டத்தின் ஆட்சி இல்லாமல் தனிநபர்களின் ஆட்சியை நீக்க வேண்டியுள்ளது என்று கூறும் அதேவேளை, சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் 18வது திருத்தத்தை நீக்க வேண்டும் எனவும் கூறுகிறது.

ஆனால் அரசாங்கம் இப்பரிந்துரைகளை செயற்படுத்தமாட்டாது என்பது தெளிவு. முன்னைய ஆணைக்குழு பரிந்துரைகளுக்கும் இதுவே நடந்தது. சட்டங்களை மீறும் அரசாங்கங்களுக்கு தண்டனை விதிக்காமல் விடுவிப்பது இலங்கையின் கலாச்சாரமாகும். கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்களை பொறுத்தவரை இப்பரிந்துரைகளை செயற்படுத்துவது தடையாகும். இங்கு உள்நாட்டு கொள்ளைக்கார கோஷ்டி எடுக்கின்ற நடவடிக்கையையே நாம் காண முடிகிறது.

சர்வதேச மனிதநேயச் சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் மீறியதாகவே வெளிநாட்டவர்கள் எம்மீது குற்றம் சுமத்த முடியும். இத்தகைய ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் மீறுவதற்கு இம்முறை ஆளும் வர்க்கம் அதியுயர் அதிகாரத்தை குவிமையப்படுத்துவதற்கு அவசியமான சகல ஆலோசனைகளையும் வசதிகளையும் ஏகாதிபத்தியவாதிகளுக்கே செய்தனர். உள்ளூர் ஆட்சியாளர்கள் உரிமைகளை மீறிவிட்டனர் என வெளிநாட்டவர்கள் குற்றம் சுமத்தும் போது வெளிநாட்டவர்கள் உலகத்தில் செய்யும் தவறுகளையிட்டு ஆட்சியாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இவர்கள் இரு தரப்பினரிடமும் கூறிக்கொள்வது "நாம் செய்த தவறுகளை ஏன் புலனாய்வு செய்கிறீர்கள்? நீங்களும் தவறு செய்கிறீர்கள். இவ்விரு தரப்பினரும் ஒன்றிணைந்து உலக மக்களுக்கு துன்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். அவ்வாறு செய்த வண்ணம் மனித உரிமைகளை மீறியதாக வெளிநாட்டுக் கொள்ளைக்காரர்கள் கூறுகின்றனர். உள்நாட்டுக் கொள்ளைக்காரர்கள் கூறுவது நாட்டிற்காகவும் தேசத்திற்காகவும் அவர்கள் தோன்றுவதாகக் கூறுகின்றனர். ஜெனீவாவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கூறியவாறு மஹிந்த சமரசிங்க அமைச்சர் இவ்வாறு கூறுகின்றார். ஏற்கனவே நம்முன் உள்ள பிரச்சினைகளையும் ஏற்கனவே வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ள சில நடவடிக்கைகள் பின்வருமாறு :

1. இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றல்.
2. மிதி வெடிகளை அகற்றல்.
3. முன்னாள் LTTE போராளிகளுக்கு புனவர்வாழ்வு அளித்தல்.
4. மொழிக்கொள்கையை அமுலாக்குல்.
5 தமிழ் மொழி பேசும் பொலிஸ்



**இலங்கை பற்றிய நல்லபிப்பிராயம் அனேகமான நாடுகளுக்குக் கிடையாது. அபகீர்த்திமிகு ஒரு வரலாறு எமது நாட்டிற்கு எதிராக உருவாகிக் கொண்டிருக்கிறது. அண்டை நாடான இந்தியா ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்களித்ததை நாம் சிறு விடயங்களாக ஏற்றுக் கொள்ள முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்.

6. வடக்கின் சிவில் நிர்வாகத்திலிருந்து ஆயுதப் படைகளை நீக்குதல்.
7. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திய காணிகளை மீளக் குடியேறுவதற்கு விடுவித்தல்.
8. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உத்தியோகபூர்வமான சனத்தொகை பட்டியல் ஒன்றை தயாரித்தல்.

மேற்கூறிய விடயங்களில் ஒரு சில அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பது உண்மை. ஆனால் சொல்லாத ஒரு பகுதியும் உண்டு. அதாவது காணாமற் போகச் செய்தல், கடத்தப்படுதல் உட்பட்ட ஒடுக்குமுறைச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை. அவசரகாலச் சட்டத்தை நீக்கினாலும் ஒடுக்கு முறைக்கு அவசியமான சட்டதிட்டங்கள் அமுலில் உள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமக்குத் தேவையானவை முன்பை விட இரகசியமாகச் செய்யப்படுகின்றன. தனி நபர்களின் ஆட்சியை இல்லாதொழிப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சட்டத்தின் ஆட்சியை அதே நிலையில் முன்னர் பொலிஸ் திணைக்களத்தின் கீழிருந்த சேவை பாதுகாப்பு அமைச்சின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் சேவை இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. முன்னர் நீதி அமைச்சின் கீழ் இயங்கிய சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது ஜனாதிபதிச் செயலாளரின் கீழ் இயங்குமளவிற்கு அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. LLRC பரிந்துரைகளில் முன்வைக்கப்பட்ட சகல தவறுகளும் இவ்வாறாக அதிகாரத்தை குவிமையப்படுத்தும் நிலையில் செயற்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதாயின் 30 ஆண்டுகால யுத்தம் இவற்றினுடைய பெறுபேறாகும். இத்தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கான ஆரம்ப முயற்சி கூட எடுக்கப்படவில்லை.

ஜெனீவாவில் அமைச்சர் உரையாற்றும் போது இலங்கைக்கெதிரான பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சில பின்வருமாறு

1. கற்ற பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கப்படாமை.
2. இனப்பிரச்சினை பற்றி அவ்வளவு தூரம் அக்கறை காட்டாமை.
3. ஆட்கடத்தல், காணாமற் போதல் பற்றி எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமை.

உதாரணம் :

1. இராமகிருஷ்ண பிரபாகரன் வெள்ளவத்தை
2. வேலாயுதம் மத்தாயஸ் புதுக்கடை நீதிமன்ற வளவில்
3. குமார் விராஜ், குகன் முருகநாதன் வடக்கில்
4. பாதுகாப்புத் துறைகள் பாலியல் தொந்தரவுகளும் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல்
5. ஈ.பீ.டீ.பீ அரசியல்வாதி ஒருவர் 13 வயதுச் சிறுமியை பாலியல் வன்முறைக்கு ஆளாக்குதல். இம்முறையீடு சம்பந்தமாக நெடுந்தீவு பொலிஸ் நடவடிக்கை எடுக்காமை. (ஜெனீவா சம்பவங்கள் இடம்பெற்ற போது இது நடந்தது.)
6. வடக்கிலுள்ள சாதாரண மக்கள் வாழும் பிரதேசங்கள் இராணுவ மயமாக்கப்படுதல். தமிழ் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமை மீறப்படுகிறது.
7. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தெருக்களின் பெயர்கள் சிங்கள மயமாக்கப்படுதல் இந்துக்கோவில்களுக்குப் பதிலாக பௌத்த பன்சலைகள் உருவாக்கப்படுகின்றன.

தொடர்ந்தும் காணாமற் போகச் செய்தல்கள் இடம்பெறுகின்றன. முன்னணிக் கட்சியின் குமார் குணரத்னம் மற்றும் திமுது ஆட்டிகல என்போர் கடத்தப்பட்டு விடுவிக்கப்படுதல். இது இலவசமான பிரசாரத்தைப் பெறுவதற்கு மேற்கொண்ட ஒரு செயல் என ஓர் அமைச்சர் குறிப்பிட்டார். இது ஒரு வெளிநாட்டு சதி என இன்னும் ஒரு அமைச்சர் குறிப்பிட்டார். இது ஒரு நாடகம் என அரசாங்கம் குறிப்பிட்டது. இத்தகைய நாடகங்களை நடித்துக்காட்ட முடியும். குற்றவிலக்களிக்கும் விசேட கொலைஞர் குழுக்கள் உள்ள சமூகத்திலேயே இவற்றைக் காண்கின்றோம். இக்குற்றங்களிலிருந்து அரசு தப்பித்துக்கொள்ள முடியாது.

**இவை அனைத்தும் இலங்கைச் சமூகத்தை எவ்வாறு பாதிக்கும்.**

இலங்கை பற்றிய நல்லபிப்பிராயம் அனேகமான நாடுகளுக்குக் கிடையாது. அபகீர்த்தியான ஒரு வரலாறு எமது நாட்டிற்கு எதிராக உருவாகிக் கொண்டிருக்கிறது. அண்டை நாடான இந்தியா ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்களித்ததை நாம் சிறு விடயமாகக் கருத முடியாது. இத்தகைய வெளிநாட்டுச் செல்வாக்குகளிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலமே அரசாங்கம் தனது இருப்பை உறுதி செய்ய முடியும். எவ்வாறாயினும் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன.

தமிழ் புலம்பெயர் சமூகத்தில் நன்நோக்கு கொண்டவர்களின் உறவை மேம்படுத்தி தமிழ் மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது அவசியம். அதேசமயம் தமிழ் நாட்டுடனான உறவை நாம் சீர்செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக தமிழ் நாடு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை நாட முடியும். இறுதியாக நாட்டைப் பிரிக்கும் இடத்திற்கு செல்லக்கூடிய சாத்தியம் இல்லாமல் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




LLRC ஆணைக்குழுக்களில் ஒரு சிலர்

Photo source: Website of Champika Ranawaka

# LLRC என்றால் என்ன ?

"தற்போதைய ஜனாதிபதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தமையால் பெரிதும் பாராட்டப்பட்டார். அவர் அதிகாரத்திற்கு வருவதற்கு வழங்கிய உறுதிமொழிகளில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவது பிரதான உறுதி மொழியாக அமைந்தது"

**சட்டத்தரணி**
**ஜகத் லியன ஆரச்சி**



சாதாரண நடைமுறையில் LLRC என அறிமுகப்படுத்தப்படும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் செயற்பாடு, அதிகாரங்கள் பற்றி இக்கட்டுரை மூலம் ஆராயப்படுகிறது.

**ஜனாதிபதி ஆணைக்குழுக்கள்**

மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய ஓர் சம்பவம் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமனம் செய்வது மூலம் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது

1. 1978 இன் 4ம் இலக்க விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டம்
2. 1981 இன் 8ம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டம் (393ம் உறுப்புரை)

விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டாம் உறுப்புரையின் கீழ் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இச்சட்டம் 1948 செப்டெம்பர் 08ம் திகதி முதன் முதலாக சட்டமாக்கப்பட்டது. பின்னர் 1950, 1953, 1955. 1981 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது. இச்சட்டத்தின் இரண்டாம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியானவர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு தனிநபரோ அல்லது பலரோ உள்ளடங்கிய ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

1. ஒரு திணைக்களத்தில் அல்லது பொது மக்கள் நிறுவனத்தில் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பாக
2. எந்தவொரு அரச உத்தியோகத்தரின் செயற்பாடு பற்றியது
3. பொதுமக்களின் பாதுகாப்பு அல்லது நலன்புரி நடவடிக்கைகளைப் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் கருத்தாக இருக்கும் பட்சத்தில்

இதற்கமைய ஜனாதிபதியானவர் தனது கையொப்பமும் இலட்சினையும் பொறிக்கப்பட்ட ஆணை மூலம் இத்தகைய ஆணைக்குழுவிற்கு ஓர் நியமனக் கடிதம் மூலம் ஆணைக்குழுவை நியமிக்கலாம். விசாரணை செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு அவசியமான அதிகாரங்கள் மேற்படி ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்படும். தேவையான சாட்சிக்காரர்களை அழைப்பதற்கும், அவர்களை விசாரிப்பதற்கும், குறிப்பிட்ட இடங்களை பரிசீலனை செய்வதற்கும், ஏற்புடைய அறிக்கைகளைப் பெறுவதற்கும், சாட்சிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையாத சாட்சிகளைப் பெறுவதற்கும் இத்தகைய ஆணைக்குழுக்களுக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய ஆணைக்குழுவிடமிருந்து ஓர் அழைப்பாணை கிடைக்கும் பட்சத்தில் அதனை தட்டிக்கழித்தால் அது ஒரு குற்றமாகக் கருதப்படும். அவ்வாறு அழைப்பாணையை பொருட்படுத்தாத நபருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றம் மூலம் தண்டனை விதிக்கப்பட முடியும். அதே சமயம் இத்தகைய ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி கூறியமை காரணமாக ஒரு குறிப்பிட்ட சாட்சிக்காரருக்கு எதிராக சிவில் அல்லது குற்றவியல் வழக்குத் தொடர முடியாது. அதே சமயம் ஆணையாளர்களும் மேற்படி விசாரணையை மேற்கொள்ளும் அடிப்படையில் சிவில் அல்லது குற்றவியல் வழக்குத் தொடர்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

LLRC ஆணைக்குழு மேற்கூறிய சட்ட அடிப்படைகளுக்கு அமையவே நியமனம் பெற்றது.

**ஆணையாளர்களின் விபரம்**

இதற்கமைய 2010 நவம்பர் 03ம் திகதி ஜனாதிபதியின் இலட்சினையின் கீழ் பின்வரும் உறுப்பினர்கள் LLRC ஆணைக்குழு உறுப்பினர்களாக நியமனம் பெற்றனர்.

1. ஜனாதிபதி சட்டத்தரணி திருவாளர் சீ.ஆர்.டீ. சில்வா (தவிசாளர்) ஓய்வுபெற்ற சட்டமா அதிபர்
2. ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஏ. ரொஹான் பெரேரா (வெளிநாட்டு அமைச்சின் முன்னை நாள் சட்ட ஆலோசகர்)
3. பேராசிரியர் எம் தாகிர் மொஹமட் ஜி.்.ப்ரி
4. பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த (லாவேகாஸ் நாட்டின் நெவாடா பல்கலைக் கழகத்தின் குற்றவியல் சட்டப் பிரிவின் பேராசிரியர்)
5. திரு. சீ. சண்முகம் முன்னைநாள் திறைசேரி செயலாளர்
6. திரு. எச்.எம்.ஜீ.எஸ் பளிஹக்கார (வெளிநாட்டு அமைச்சின் முன்னை நாள் செயலாளர்)
7. திருமதி. மனோஹரி இராமநாதன் (முன்னைநாள் பிரதி சட்ட வரைஞர்)
8. திரு.எம்.பீ. பரணகம (முன்னை நாள் மேல்நீதிமன்ற நீதிபதி, வரி - ஓம்புட்ஸ்மன்)

இவர்களிடையே பேராசிரியர் தாஹிர் மொஹமட் ஜி.்.ப்ரி உடல் நலமின்மை காரணமாக 2010 ஆகஸ்ட் 31ம் திகதி இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக 2010 செப்டெம்பர் 07ம் திகதி சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ரீ.எம். பா.்.பிக் நியமிக்கப்பட்டார்.

**விடயப்பரப்பெல்லை**

மேற்படி ஆணைக்குழு பரிசீலனை செய்ய வேண்டும் என ஜனாதிபதி அவர்கள் நியமித்த விடயங்கள்

1. 2002ம் ஆண்டு பெப்ரவரி 21ம் திகதி அமுலுக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வி அடைவதற்கான காரணங்களும் சந்தர்ப்ப சூழலும் அதன் பின்னால் 2009 மே மாதம் 19ம் திகதி வரை முறையே இடம்பெற்ற சம்பவங்கள்.
2. யாராவது ஆள் அல்லது குழுவினர் அல்லது நிறுவனம் நேரடியாகவோ மறைமுகமாகவோ இது தொடர்பான பொறுப்புக்களை ஏற்கின்றதா?
3. இத்தகைய சம்பவங்கள் மீள ஏற்படாத வகையில் அதனை உறுதிப்படுத்தக்கூடிய மேற்படி சம்பவங்களிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள்
4. இச்சம்பவங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட ஒரு நபரோ அல்லது அவர்களில் தங்கி வாழ்பவர்களோ அல்லது அவர்களின் பிறப்புரிமை கொண்டோரோ நல்லிணக்கம் செய்யக்கூடிய வழிமுறைகள். "யுத்தத்தை ஏற்படுத்திய நிலைமைகளை தொடர்ந்தும் வைத்துக்கொண்டு உண்மையான சமாதானத்தை கொண்டுவர முடியாது. அதிகாரத்தை தக்க வைப்பது யுத்தத்தின் ஆரம்பக் கட்டமாகும். அதிகாரத்தை மக்களின் விருப்பத்திற்கு அமைய பெற்றுக்கொள்வது நியாயமானது. ஆனால் மேற்படி விருப்பத்தை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது."
5. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை தடுக்கக்கூடிய வகையிலும், சகல சமூகங்களுக்கிடையில் தொடர்ந்தும் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளக்கூடிய நிர்வாக ரீதியிலான, சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் இவ் அதிகாரப் பத்திரத்தின் கட்டளைகளுக்கு அமைய புலனாய்வு செய்யப்பட்ட விடயங்களில் ஏதேனும் ஓர் விடயத்திற்கு ஏற்புடைய வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைகளை செய்தல்.

"இதே முறையைக் கையாண்டு பின்வரும் நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன. அதாவது சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம் பொலிஸ் மா அதிபர், ஒம்புட்ஸ்மன் அல்லது பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகிய பதவிகளும் அரசியலமைப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும் இன்று அரசியலமைப்புச் சபையும் ஜனாதிபதியாகவே மாறியுள்ளது."

**விசாரணை ஆணைக்குழு நியமிப்பதற்கான காரணிகள்**

இவ்விடயங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கு அவசியமான விளக்கங்களை தெளிவுபடுத்தி ஜனாதிபதி அவர்கள் இவ்வாணைக்குழுவை நியமிப்பதற்கான ஆணைப் பத்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இலங்கை எதிர்நோக்கிய மோதல்களின் போது அனுபவித்த துன்பங்கள் துயரங்கள் பற்றி மீள ஞாபகமூட்டலும் அதை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு உரிய சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் நான் கருதுகின்றமையால் எல்லோரது பொது அபிலாசைகள் மீது கவனம் செலுத்துவதற்கு எமது மக்கள் சமாதானமாகவும், சமாதான நடைமுறை மூலமும் சுபீட்சமான எதிர்காலத்தை சந்தேகத்திற்கிடமின்றி உருவாக்குவதற்கு நாம் கூட்டாக திடசங்கற்பம் கொண்டுள்ளமையாலும், பல இனங்கள் வாழும் சமூகம் என்ற வகையில் எம்மத்தியில் ஒத்துழைப்பும் பங்களிப்பும் நற்புறவும் பொது குறிக்கோளாகக் கொண்டு நாம் ஓர் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம். பரஸ்பரம் மோதுகின்ற எந்தவொரு நிலைமையின் கீழும் எதிர்காலத்தில் மோதல்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தி படிப்பினைகளை நாம் பெறவேண்டும்" இவ்விடயங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படும் என கூறப்படுகிறது.

**ஆணைக்குழுவின் விசாரணைகள்**

இந்த ஆணைக்குழு 2010 ஆகஸ்ட் 11ம் திகதி விசாரணைகளை ஆரம்பித்தது. கொழும்பில் அமைந்துள்ள சர்வதேச ரீதியான உறவுகள் மற்றும் தந்திரோபாயக் கற்கை நெறிகள் பற்றிய லக்ஷ்மன் கதிர்காமர் செயலகத்தில் (Lakshman Kadirgamar Institute of International relations and Strategic Studies) நடத்தியது. அங்கிருந்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு பகிரங்க அமர்வுகளை யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, புத்தளம், மன்னார், வெலி ஓய, காலி, மாத்தறை, கண்டி, அம்பாறை ஆகிய இடங்களில் பகிரங்க விசாரணைகள் இடம்பெற்றன. இவ்விசாரணைகளின் போது பங்குபற்றுமாறு பொதுமக்கள் அழைக்கப்பட்டனர். ஆணைக்குழு அத்தியாவசியமெனக் கருதிய சாட்சிக்காரர்களை அழைப்பாணை மூலம் அழைத்தது. 2010 செப்டெம்பர் மாதம் இடைக்காலப் பரிந்துரைகள் உள்ளடக்கிய அறிக்கையொன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் 2011 நவம்பர் மாதம் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. 2011 டிசம்பர் 17ம் திகதி சபை முதல்வர் திரு. நிமல் சிரிபால டி சில்வா இவ்வறிக்கையை சபா பீடத்தில் சமர்ப்பித்தார். 2012 பெப்ரவரி 27 முதல் மார்ச் 23 வரை ஜெனீவாவில் நடைபெற்ற 19வது அமர்வில் ஐக்கிய அமெரிக்கா இலங்கை பற்றிய ஒரு தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவை முன்வைத்தது. LLRC ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துமாறும் கோரப்பட்டது.



"யுத்தத்தை ஏற்படுத்திய நிலைமைகளை தொடர்ந்தும் வைத்துக்கொண்டு உண்மையான சமாதானத்தை கொண்டுவர முடியாது. அதிகாரத்தை தக்க வைப்பது யுத்தத்தின் ஆரம்ப கட்டமாகும். அதிகாரத்தை மக்களின் விருப்பத்திற்கு அமைய பெற்றுக்கொள்வது நியாயமானது. ஆனால் மேற்படி விருப்பத்தை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



http://thesantosrepublic.com

# சர்வதேச ரீதியான கால இடைவெளியைக் கொண்ட மீளாய்வு (UPR) என்றால் என்ன?

சர்வதேச ரீதியான கால இடைவெளியைக் கொண்ட மீளாய்வு, ஐநா மனித உரிமைப்பேரவையின் ஒரு புதிய பொறிமுறையாகும். இந்தப் பொறிமுறையின் கீழ் 4 வருடத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு ஐநா அங்கத்துவ அரசினதும் மனித உரிமை நிலைமை ஏனைய அங்கத்துவ அரசுகளால் மீளாய்வு செய்யப்படுகிறது.

வழமையாக ஜனவரி/பெப்ரவரி, மே/ஜுன், ஒக்டோபர்/நவம்பரில் மூன்று அமர்வுகள் நடாத்தப்படுகின்றன. ஒவ்வொரு அமர்விலும் 14 நாடுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன உண்மையான அமர்வின் போது தனது அறிக்கைகளையும் இறுதிக் கருத்துரைகளையும் சமர்ப்பிப்பதற்கு ஒரு நாட்டிற்கு அண்ணளவாக 1/3 காலப்பகுதி ஒதுக்கப்படும். அதேவேளை விமர்சனங்களை மேற்கொள்ளவும் கேள்விகளை எழுப்பவும், சிபாரிசுகளை செய்யவும் ஏனைய அரசுகளுக்கு நேரத்தில் 2/3 பகுதி ஒதுக்கப்படுகிறது. மீளாய்வு செய்யப்படும் நாட்டிற்கு எழுத்து மூலமாகவும் நாடுகள் கேள்விகளை அனுப்ப முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள் அவதானிகளாக சமூகமளிக்க முடியும். ஆனால் தலையிட முடியாது. ஒவ்வொரு மீளாய்வினதும் பெறுபேறு ஒரு "விளைவு அறிக்கை"யில் பிரதிபலிக்கப்படுகிறது, இது மீளாய்வின் போது அரசுகளினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளினது தொகுப்பை உள்ளடக்குகிறது. ஆனால், மிகவும் முக்கியமான பகுதிகள் பின்வருவனவாகும் :

1. மீளாய்விற்குட்படும் அரசு ஏற்றுக்கொள்ளும் பரிந்துரைகள்
2. மீளாய்விற்குட்படும் நாடு தான் விரும்பி செய்யும் பற்றுறுதிகள் (commitments)

நான்கு வருடங்களின் பின்னர், மேற்படி 2 விடயங்களினது அமுலாக்கம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. மீளாய்விற்குட்படும் அரசு நிராகரிக்கும் பரிந்துரைகளையும் விளைவு அறிக்கை உள்ளடக்குகிறது.

வேறு 3 அரசுகள் ஒவ்வொரு அரசினதும் செயன்முறையை வசதிப்படுத்துவதற்கு/ஒருங்கிணைப்பதற்கு தெரிவு செய்யப்படுகின்றன. அவற்றினுடைய மிகவும் முக்கியமானதும் செல்வாக்கு செலுத்துகின்றதுமான பணி விளைவு அறிக்கையை எழுதுவதாகும். இந்த மூன்று அரசுகளின் குழு "மூவர் குழு"(Troika) என அழைக்கப்படும். மீளாய்வு பின்வரும் 3 அறிக்கைகளை அடிப்படையாக கொண்டதாகும்

1. வழமையாக மீளாய்விற்கு சுமார்



ருக்கி பெர்னாண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மாதங்களிற்கு முன்னர் மீளாய்விற்குள்ளாகும் நாட்டினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை(சுமார் 20பக்கங்கள்)

2. வேறுபட்ட ஐநா அமைப்புக்களிடமிருந்து கிடைக்கும் தகவலை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரது ஐநா அலுவலகத்தினால் தயாரிக்கப்படும் ஒரு அறிக்கை (சுமார் 10 பக்கங்கள்)
3. அரச சார்பற்ற நிறுவனங்கள் தேசிய மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களால் செய்யப்படும் சமர்ப்பணங்களை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரது ஐநா அலுவலகத்தினால் தயாரிக்கப்படும் ஒரு அறிக்கை (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புக்களாயின் சுமார் 10 பக்கங்கள் அல்லது ஒரு தனியமைப்பாயின் சுமார் ஐந்து பக்கங்கள்) மீளாய்விற்கு சுமார் 3 மாதங்களிற்கு முன்னர் OHCHR இற்கு சமர்ப்பணங்கள் அனுப்பப்பட வேண்டும்.

மேல்குறிப்பிட்ட மூன்று ஆவணங்களும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட சமர்ப்பணங்களும் பகிரங்கப்படுத்தப்படும். விளைவு அறிக்கையும் பகிரங்கமானது. வழமையாக கூட்டு அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் அரச சார்பற்ற நிறுவன சமர்ப்பணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

சர்வதேச ரீதியான கால இடைவெளியைக் கொண்ட மீளாய்வு எந்தவொரு தொனிப்பொருளையோ அல்லது விவகாரத்தைப் பற்றியதாகவோ அமையலாம். நாடுகளுக்கிடையிலான ஒப்பந்த அமைப்பின் (treaty body) சிபாரிசுகளைக் கைச்சாத்திடுதலும் பொதுவாக சர்வதேச ரீதியான கால இடைவெளியைக் கொண்ட மீளாய்வின் சிபாரிசுகளில் முக்கியமான பகுதியாக உள்ளடக்கப்படுகின்ற போதிலும் ஒரு அரசு கைச்சாத்திட்டிருக்கக் கூடிய அல்லது கைச்சாத்திடாமல் விட்டிருக்கக்கூடிய நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களினால் மீளாய்வு மட்டுப்படுத்தப்படுவதில்லை.

இலங்கை 2008 மே மாதம் மீளாய்வு செய்யப்பட்டது. அது மீண்டும் 2012 ஒக்டோபர் முடிவில் மீளாய்வு செய்யப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பின்வருவனவற்றைச் செய்யமுடியும்

- சமர்ப்பணங்களை மேற்கொள்ளுதல்
- சிபாரிசுகளையும் தான் முன்வந்து மேற்கொள்ளும் பற்றுறுதிகளையும் அமுல்படுத்துமாறும், முன்வந்து மேற்கொள்ளும் குறிப்பான பற்றுறுதிகளை வழங்குமாறும் மீளாய்விற்குள்ளாகும் அரசினைத் தூண்டுதல்
- குறிப்பான விமர்சனங்களை மேற்கொள்ளுமாறும், குறிப்பான கேள்விகளைக் கேட்குமாறும் குறிப்பான சிபாரிசுகளை வழங்குமாறும் ஏனைய நாடுகளைத் தூண்டுதல்
- அனைத்து சமர்ப்பணங்கள் மற்றும் உண்மையான மீளாய்வு உள்ளிட்ட செயன்முறையைக் கண்காணித்தல்
- விளைவு அறிக்கையையும் ஒட்டுமொத்தமான செயல்முறையையும் பகிரங்கப்படுத்துதல்

2012 ஆகஸ்ட் 4ஆந் திகதி மீளாய்வு செய்து இற்றை நாள்படுத்தப்பட்டது.




**நாடுகளுக்கிடையிலான ஒப்பந்த அமைப்பின் சிபாரிசுகளைக் கைச்சாத்திடுதலும் பொதுவாக சர்வதேச ரீதியான கால இடைவெளியைக் கொண்ட மீளாய்வின் சிபாரிசுகளில் முக்கியமான பகுதியாக உள்ளடக்கப்படுகின்ற போதிலும் ஒரு அரசு கைச்சாத்திட்டிருக்கக் கூடிய அல்லது கைச்சாத்திடாமல் விட்டிருக்கக்கூடிய நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களினால் மீளாய்வு மட்டுப்படுத்தப்படுவதில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கூடிய சந்தர்ப்பம் : தென் ஆபிரிக்கா

Photo source : http://qu301southafrica.com

# உண்மைக்கான ஆணைக்குழு

"

உண்மைக்கான ஆணைக்குழுக்கள் கடந்த கால துஷ்பிரயோகங்கள் பற்றி பரிசீலித்து, குறித்த காலப் பகுதியில் இடம் பெற்ற துஷ்பிரயோகங்களின் பங்குகளைப் பற்றி இனம் கண்டு, குறித்த சம்பவத்தில் இடம்பெற்றவற்றிலிருந்து எவ்வாறு அவை வேறுபடுகின்றன என்பதனையும் இனம் காணுமாறு எதிர்பார்க்கப்படும்.

"

1983ஆம் ஆண்டோடு ஆர்ஜன்ரீனாவில் சனநாயகம் நோக்கி ஏற்பட்ட நிலைமாற்றத்துடன் உலகின் பல நாடுகளில் உண்மைக்கான ஆணைக்குழுக்கள் தோற்றம் பெற்றன. ஆயினும் உண்மைக்கான ஆணைக்குழுக்களின் அளவு, பணவரவு செலவு, குறிக்கோள்கள், அபிலாசைகள், கட்டளை துணை என்பன பொறுத்து அவை வேறுபடுகின்ற போதிலும் பொதுவான சில குணாதிசயங்களையும் கொண்டுள்ளன. உண்மைக்கான ஆணைக்குழுக்கள் கடந்த கால துஷ்பிரயோகங்கள் பற்றி பரிசீலித்து, குறித்த காலப் பகுதியில் இடம் பெற்ற துஷ்பிரயோகங்களின் பங்குகளைப் பற்றி இனம் கண்டு, குறித்த சம்பவத்தில் இடம்பெற்றவற்றிலிருந்து எவ்வாறு அவை வேறுபடுகின்றன என்பதனையும் இனம் காணுமாறு எதிர்பார்க்கப்படும். வரலாற்றுக் காலத்தின் நிலவரங்கள் பற்றி மேலோட்டமாக விபரித்து, அவற்றில் வன் செயல்களுக்கான காரணங்கள் மற்றும் விசாரணைகள் பற்றிய விபரங்களையும் உள்ளடக்கி இருத்தல் அவசியம். உண்மைக்கான ஆணைக்குழுக்கள் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களை மையமாக கொண்டிருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் யாரென்பது வரைவிலக்கணப்படுத்தலும், நன்மைபெற வேண்டியவர்கள் யாரென்பது சரியாக இனம் காணப்படுதலும் அவசியமாகும். உண்மைக்கான ஆணைக்குழுக்களுக்கு அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டு இருந்தாலும் அவற்றிற்கு நீதி, சட்டம் மற்றும் சுதந்திரம் என்பன தேவை. குற்ற வழக்கு தொடர்வதற்கு உண்மைக்கான ஆணைக்குழு நேரடியாக ஆதரவு (ஆர்ஜன்ரீனா, சிலி, லைபீரியா) வழங்கலாம். அல்லது வழக்கு தொடர்வதற்கு மற்றும் ஏற்பாடுகளை செய்யலாம். (உ-ம் தென்னாபிரிக்கா) உண்மை ஆணைக்குழுக்கள் இறுதியானதும், முழுமையானதுமான அறிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றன.

சில அரசாங்கங்கள் உண்மைக்கு ஒளியூட்டுவதற்காக உண்மை - ஆணைக்குழுக்களை உருவாக்குகின்றன. ஆனால் வேறு சில அரசாங்கங்கள் நடவடிக்கைகளில் இருந்து செய்ய வேண்டியதை மாற்றி செயற்படுவதற்காக அல்லது தம்மீதான விமர்சனங்களை மாற்றுப்பாதையில் திருப்பி விட அல்லது நீதியை நலிவுறச் செய்வதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையையும் இனம் காணப்பட்டுள்ளன.

- வரலாற்று காலமாக உள்ள நீதியின் அடிப்படையிலான பொறுப்புக்களை மூன்றாம் தரப்பினரிடம் தள்ளி விடுதல்
- செய்முறைகளை சாட்டாக குறித்துக்காட்டி காலம் கடந்த அவகாசம் எடுக்க, நேரத்தை எடுக்க முயற்சித்தல்
- ஆணைக்குழுவின் புலனாய்வு செய்முறையில் குறைபாடுகள் உள்ளதாக கூறி அரசாங்கம் மீது குறையில்லை என கூற முயற்சித்தல்.
- சரியான முடிவுகளுக்கு பிரதியீடாக தம்மை குறைவாக அச்சுறுத்தலும், விசாரணைகளுக்கு உட்படுத்தாததுமான மாற்றுக்களை வெளியிடுவதும், நட்டஈடாக கொடுக்க வேண்டிய பெரிய தொகையை கொடுக்காது சிறிய தொகையினை கொடுத்து சமாளிக்க முயலுவதுமான மாற்று ஏற்பாடுகளை சமர்ப்பித்தல்.
- அரசியல் மற்றும் சட்ட ரீதியான பெறுப்புக் கூறுதல் மீது பொது மக்களது அக்கறையினை பெருமளவுக்கு இல்லாதாக்குதல்.

**"நினைவுகள் செயற்படல்"**

பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை நினைவு கூறப்படல் வேண்டும் என்பதில் ஆர்வம் இருப்பது யதார்த்தமாகும். இதனை அடைய வேண்டும் என்பதற்கான "நினைவுகள் செயற்படல்" கடந்த கால நினைவுகள் மீது கவனத்தை குவியச் செய்வதுடன் பொது மக்களின் உரையாடல்களையும் குடி மக்கள் உரையாடல்களையும் முக்கியப் படுத்துகின்றன. உண்மைக்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் கூறப்படும் சிபாரிசுகளிலிருந்து "நினைவுகள் செயற்படல்" தோன்றுகின்றன. உதாரணமாக சியாரோ லியோன் நாட்டின் "தேசிய நோக்குதிறன் திட்டம்" (National Vision Project) பொது மக்கள் எழுத்து மூலமாகவும் சித்திரங்கள் வாயிலாகவும் நாட்டின் எதிர்காலம் பற்றிய அவர்களது நோக்குதிறன் (Vision) காணுமாறு கேட்டுக் கொண்டது. "நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியவை" பாரிய பேரு நாட்டின் திட்டத்தில் பெரியளவிலான புகைப்படங்களின் கண்காட்சி இடம் பெற்றது. மொராக்கோவில் உண்மை அரசின்முறை அரசியல் வழக்கு விசாரணை, சிறைச்சாலை தகவல் நூல்கள் என்பன பற்றிய விவாதம் பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. இவற்றை விட வேறுபல "நினைவுகள் செயற்படல்" தொடர்பான நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஈராக்கின் நினைவுத் திட்டம் உள்ளடங்கும். அதில் தொன் கணக்கிலான "முக்பாரத்" தொடர்பான ஆவணங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. ஈராக்கிய கோஷ்டி மக்களுக்கு எதிரான அன்பால் பிரச்சாரம் தொடர்பிலான தகவல்களடங்கியவை அவற்றில் இடம் பெற்றிருந்தன. கம்போடியாவில் இடம் பெற்ற இனப்படுகொலை தொடர்பான அரும்காட்சியகத்தில் கூரையின் சீலிங்வரையில் மனித தலையோடுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

**உத்தியோக பூர்வமற்ற பொறிமுறைகள்**

சமயக் குழுக்கள், கல்வி நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன வன்முறைகள் பற்றி ஆவணப்படுத்தலுக்கும், அறிக்கை வெளியிடுவதற்கும் ஆதாரங்களை வழங்கியதன் காரணமாக சனநாயக அரசாங்கங்கள் அவை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. இவ்வாறான நடவடிக்கைகள் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் 1980 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்தன. உண்மைக்கான ஆணைக்குழுக்களது நலம் மற்றும் நோக்கங்களை ஒத்த வகையிலான அறிக்கைகள் உத்தியோகபூர்வமற்ற உண்மைத் திட்டங்களும்

> **உண்மை நினைவு கூறப்படல் வேண்டும் என்பதில் ஆர்வம் இருப்பது யதார்த்தமாகும். இதனை அடைய வேண்டும் என்பதற்கான "நினைவுகள் செயற்படல்" கடந்த கால நினைவுகள் மீது கவனத்தை குவியச் செய்வதுடன் பொது மக்களின் உரையாடல்களையும் குடி மக்கள் உரையாடல்களையும் முக்கியப் படுத்துகின்றன.**

துஷ்பிரயோகம் தொடர்பிலான ஆவணங்கள் தயார் செய்யக் கூடியதன் "விசேட மாற்று வகையான வழக்கு விசாரணைகளையும்" மேற்கொள்கின்றன.

- "தொல்லைகள்" என்றால் பாதிக்கப்பட்ட மக்களின் பார்வையில் இருந்து விளக்க வட அயர்லாந்தின் அர்டோய்ன் சமூகத்திட்டத்தில் பல ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி க்லக்ஸ் க்ளேன் எனும் பிரிவினில் பொது மக்கள் உரிமைகளுக்கான ஐந்து ஆர்வலர்கள் கொல்லப்பட்டமை பற்றி க்ரீன்ஸ்பொரோ உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான திட்டம் ஆவணங்களை தயாரித்துள்ளது.
- கௌத்தமாலாவின் "இயல்பு நிலைக்கு திரும்புதலுக்கான வரலாற்று நினைவுத்திட்டம்" மூன்று வருடகாலப்பகுதியில் 6500 பேரிடமிருந்து சாட்சியங்களை சேகரித்தது. இது ஐ.நா சபையின் முகவர் பங்களிப்புடன் நடைபெற்றது. அதன் மூலம் பாதுகாப்புப் படையினரால் சுதேச மக்களை கொல்லுதல் முடிவுக்கு வந்தது. இத்திட்டம் ஒரு நியாயமானதும், உறுதியானதுமான உத்தியோகபூர்வமான துணைக்குழுவினை உருவாக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மை" மற்றும் நல்லிணக்கம் ஆகிய பதங்கள் நிச்சயமாக ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவனவா? எல்லா உண்மை ஆணைக்குழுக்களும் நல்லிணக்கம் என்னும் பதத்தினை பயன்படுத்துவதில்லை. உதாரணமாக கௌத்தமாலா நாட்டின் வரலாற்று பரிசீலனை ஆணைக்குழு நல்லிணக்கம் எனும் கருத்தை வெளிப்படையாகவே தவிர்த்து விட்டு வேறு வழியில் சென்றிருந்தது.

வாய்ப்பினை ஏற்படுத்தியது.

- பிரதேசத்தின் "நன்கா மாய்ஸ்" (Nanca Mais) என்பது கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து தலைவர்களது, அனைத்துலக திருச்சபையினது முயற்சியால் ஏற்பட்ட அமைப்பாகும். 1964-1979 ஆம் வரை பிறேசிலை ஆண்ட இராணுவக் குழுவினால் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் பாதி ஆவணங்களை பாதுகாப்புப் பிரிவினரது ஆவண காப்பகத்தில் இருந்து இவர்கள் பெற்றுக் கொண்டனர். இந் நிறுவனத்தின் முயற்சிகள் காரணமாக நகரத்தினை அடிப்படையாகக் கொண்ட விசாரணைகள் புதைக்கப்பட்டவர்களை மீண்டும் தோண்டி எடுத்தல், இழந்தவர்களுக்கு இழப்பீடு செய்தல் என்பன இடம்பெற முடிந்தது.
- கொலம்பியாவின் நீதி மாளிகை உண்மை ஆணைக்குழு முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் தலைமையில் இடம்பெற்றது. அவ்வாணைக்குழு உயர் நீதிமன்றத்தின் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி கொரில்லா படையினர் கைப்பற்றியபோது பாதுகாப்புப் படையினர் தாக்கியமை பற்றி ஆராய்ந்தனர். அச்சம்பவத்தில் அனைத்து நீதிபதிகளும் உட்பட 100 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

அரசுசாரா நிறுவனங்களினது உத்தியோகபூர்வமற்ற உண்மை (காண்) திட்டங்களும் "நினைவுகள் செயற்படும் பணிகளைப்" புரிகின்றன. (உதாரணமாக: திரையரங்கம், கலை, வீடியோ மற்றும் இலக்கியத் திட்டங்கள் கடந்த காலம், நினைவு நாட்கள், அரும் காட்சியகம், அசையும் காட்சியகம் என்பன)

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பது ஆணையாண்மையுள்ள ஆட்சியினை அடுத்து வரும் காலப்பகுதியினைப் பற்றியதல்ல. அது முரண்பாடு முடிவுற்ற காலத்தின் பின்னர் வரும் காலம் மீதே குவியம் கொண்டிருக்கும். ஜொஹான் ஹல்டஸ் என்பவர் வேறுபட்ட பண்பினதான நல்லிணக்கம் பற்றிய மாதிரிகள் மற்றும் நல்லிணக்கத்திற்கும் "சார்பான (Positive) சமாதானத்திற்குமிடையேயான தொடர்புகள் பற்றி "வன்முறையின் பின்னர்: புனருத்தாரணம் நல்லிணக்கத் தீர்மானம் : காட்சிக்கு தென்படுவதும் காணமுடியாததுமான யுத்தத்தினதும் வன்முறைகள் அவர்களிடையேயான தொடர்புகளும்" என்னும் தனது கட்டுரையில் விரிவாகக் கூறியுள்ளார்.

**நல்லிணக்கம்**

"உண்மை" மற்றும் நல்லிணக்கம் ஆகிய பதங்கள் நிச்சயமாக ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவனவா? எல்லா உண்மை ஆணைக்குழுக்களும் நல்லிணக்கம் என்னும் பதத்தினை பயன்படுத்துவதில்லை. உதாரணமாக கௌத்தமாலா நாட்டின் வரலாற்று பரிசீலனை ஆணைக்குழு நல்லிணக்கம் எனும் கருத்தை வெளிப்படையாகவே தவிர்த்து விட்டு வேறு வழியில் சென்றிருந்தது.

சிலி நாட்டு அரசாங்கம் 1990 ஆம் ஆண்டு உலகின் முதலாவது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை நிறுவியிருந்தது. அந்நாட்டின் நல்லிணக்கம் அரசியல் வகுப்பின் மீது தன் குவியத்தினை செலுத்தி பின்வருவனவற்றுடன் தொடர்புபட்டிருந்தது.

- பொது மன்னிப்பு வழங்குதலும் தண்டனைகளை ஒழுங்கு படுத்தலும்
- அரசியல், அஞ்ஞான வாசம் சென்றவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கான நிலைமைகளை உருவாக்குதல்
- இரு சாராருக்கும் ஓய்வூதியம் அல்லது இழப்பீடுகளை வழங்குதல்
- நினைவுச் சின்னங்கள் போன்ற அடையாள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- இழந்தவர்களை அமைச்சரவை, மற்றும் காங்கிரஸ் போன்றவற்றில் இணைத்துக்கொள்ளல்
- யாப்பு, தேர்தல், சட்ட சீர்திருத்தங்களை ஏற்படுத்தல் எனவே நல்லிணக்கம் என்பதற்கான பொருள் வேறுபட்ட சூழல்களுக்கு ஏற்றதாகவும் வேறுபட்டதாகவும் இருக்கும்
- சமூகங்களிடையே பரஸ்பர மரியாதையும் சமாதானமும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகள் தொடர்பில் ஒரு முடிவு ஏற்பட்டதன் பின்னர் ஒருவருக்கொருவர் எதிராகப் போரிட்ட போராளிகள் (இருதரப்பினரும்) கூடி வாழக் கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமனதாகும். அவ்வாறான கூடி வாழ்தல் என்பது ஒரு வகையில் வேறுபாடுகளை மதிப்பதாகவும் அமையும்.

- தெரிந்தெடுத்த வகையில் மறந்து விடுதல் : கம்போடியாவில் காமர் ரோ (Khamer Rouge) நல்லிணக்கத்திற்கு அழைப்பு விடுத்து, "கடந்த காலத்தில் நடந்ததை கடந்த காலத்தினதாகவே இருந்து விடட்டும்" என்றும் கடந்த காலம் பற்றிய கடும் நினைவுகளைக் கொண்டிருக்க வேண்டாம் என்றும் கூறினார்கள்.
- தேசத்தைக் கட்டியெழுப்புதல் சில சூழல்களில் உதாரணமாக தென்னாபிரிக்கா உட்பட பல நாடுகளில் தனி ஒரு அரசாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை நல்லிணக்கம் வற்புறுத்துகின்றது. அதில் வேறுபட்ட இனத்தவர்களும், மொழிப் பிரிவினர்களும் ஒன்றாக வாழாமை தொழில் புரியாமை சம்மதம் தெரிவித்ததுடன் தம்மை ஒரு தனி அரசின் அங்கங்களாகவும் கருத்திற் கொண்டனர்.
- அரசியல் ரீதியான ஒத்துழைப்பு: இது இன்னொரு வகையான நல்லிணக்கம் ஆகும். இவ்வகையான நல்லிணக்கம் சிலி, மியான்மார் ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ளது. அவற்றில் ஒரு அரசியல் அமைப்பு முறையில் பங்கேற்பவர்கள் (அரசியல் பங்காளிகள்) இணைந்து செயற்படுவர்.
- முரண்பாடுகள் தீர்ந்த பின்னரான மீள்நிர்மாணம் முரண்பாடுகள் முடிவுக்கு வந்த பின்னர் மீள்நிர்மாணம் செய்வதற்கு சட்டத்தின் வாயிலான ஆட்சி, சனநாயக முறையில் அல்லது தீர்மானங்களை செய்யும் அமைப்புக்கள் என்பன அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன.

தென்னாபிரிக்காவில் 1995 ஆம் ஆண்டு "தேசிய ஐக்கியத்தை ஊக்குவிப்பதற்கும் நல்லிணக்கத்திற்குமான சட்டம்" உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றினை ஸ்தாபித்தது. தென்னாபிரிக்காவில் கடந்த காலத்தில் முரண்பாடுகள், பூசல்கள், சொல்ல முடியாத துன்பங்கள், அநீதி என்பனவற்றால் பெருமளவுக்கு பிணைபட்டிருந்த சமூகத்திற்கு ஏற்றவகையிலான தீர்வுகளை காணவும், நிறம் இனம், வர்க்கம், நம்பிக்கைகள், பாலியல் போன்ற எந்தவிதமான பேதங்களுமின்றி அனைத்து தென்னாபிரிக்கர்களுக்கும் அவர்களது மனித உரிமைகள், சனநாயகம் மற்றும் சமாதான சக வாழ்வு வாழ்வதற்கான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற அபிலாசையினை அவ்வாணைக்குழு கோரி நின்றது. குற்றமிழைக்காதவர்கள் கூறுவனவற்றை செவிமடுக்கவும், குற்றமிழைத்தவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கவும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டு இருந்தது.

**தொழில்நுட்பப் பிரச்சினைகள்**

உண்மை விளம்பும் செய்முறைகளின் அபிவிருத்தியானது மேலே விபரிக்கப்பட்டபல்வேறு வகைப்பட்ட அரசியல் பிரச்சினைகள் மற்றும் உபாயங்கள் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் இவற்றை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**நோக்கங்கள்**

- உண்மைகளை ஸ்தாபித்தல்
- உண்மைகளை விளங்குதல்
- முரண்பாட்டின் அனைத்து தரப்பிலிருந்து பாதிப்புக்கு உள்ளாகியவர்களது அனுபவங்களை அங்கிகரிப்பதன் மூலம் அவர்களுடைய மதிப்பு அல்லது அவர்களது
- கௌரவத்தைப் பேண வேண்டும்.
- இரு தரப்பினரையும் பங்கெடுக்கச்

> சமூகங்களிடையே பரஸ்பர மரியாதையும் சமாதானமும் : முரண்பாடுகள் தொடர்பில் ஒரு முடிவு ஏற்பட்டதன் பின்னர் ஒருவருக்கொருவர் எதிராக போரிட்ட போராளிகள் (இருதரப்பினரும்) கூடி வாழக் கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமனதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலம் பக்கம் சாராமையை வற்புறுத்தி உறுதி செய்ய வேண்டும்.

- ஏனைய நிலை மாற்றக் காலக் கொள்கைக்கும் பங்காற்றுதல் வேண்டும்.

**அதிகாரம்**

நிறைவேற்று அதிகாரங்கள் (உதாரணம் அர்ஜன்ரீனா, சிலி, பேரு, லொரான்டுரஸ் ஆகிய நாடுகளில் வழங்கப்பட்ட சனாதிபதியின் தீர்ப்புகள் (கட்டளை),

- சட்டங்கள் உருவாக்கும் கிளை (உதாரணம் தென்னாபிரிக்கா, லைபீரியா, கென்யா)
- நிறைவேற்றுனர் மற்றும் சட்டமியற்றுபவர்கள் இரு சாராரதும் பங்களிப்புடனான உயர் மட்ட அதிகாரம் (உதாரணம் நைஜீரியா)
- முடியாட்சி (உதாரணம்) மொராக்கோ
- நீதித்துறை (உதாரணம்) கனடா கொலம்பியா
- ஐக்கிய நாடுகள் சபை (உதாரணம்) தீமூர், லெஸ்தே

(குறிப்பு: தீர்ப்பாணை மூலமாக உருவாக்கப்படும் ஏற்பாடு விரைவுடனும் திறமையுடனும் செயற்படக் கூடியது. அதற்கு பிரதியீடாக சட்டத்தின் வாயிலாக செய்யப்படும் பல்கட்சி பேரம்பேசுதலுடன் தொடர்பானதாகக் காணப்படுவதுடன் கூடியளவும் சட்ட ரீதியானதாகவும் இருக்கும். சட்ட மன்றங்கள் உண்மை - ஆணைக்குழுவை நீதித்துறை சார்ந்ததாக உள்ள அதிகாரங்களுடன் அனுமதிக்கலாம். ஆனால் நிறைவேற்றுனரால் முடியாதிருக்கும்.)

**பணிகள்**

- ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் (உ-ம்) சாட்சிகளை பரிசீலித்தல், தகவல்களை அணுகுதல், அமைவிடங்களை சோதித்தல், சட்டங்கள் சார் தடயங்களை பெறுதல்)
- சிறப்பு அதிகாரங்களை பயன்படுத்தல் (சட்டமன்றிற்கு வருமாறு அழைப்பாணை விடுத்தல், ஒத்துழைப்பிற்கு ஊக்கமளித்தல்)
- விசாரணைகளுக்கான ஏற்பாடுகளையும் மற்றும் தேவையானவற்றை செய்து கொள்வதற்குமான ஏற்பாடுகளைச் செய்தல்.
- அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் பிரசைகளுக்கும் விபரங்களை அறியத் தருதல்
- தகவல் தொடர்பான சுதந்திரம் போன்ற ஏனைய உண்மை தேடும் பொறிமுறைகளின் அனுபவங்களையும் மேலதிகமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பாதுகாப்பு படையினரது அறிக்கைகள் கொண்ட பதிவுகள் அல்லது சட்டங்களை அணுகிப் பயன்படுத்தல்.

**தகுதி**

- மனித உரிமைகள் மீறல் அல்லது ஏனைய குற்றங்களை வரைவிலக்கணம் செய்தல் (உ-ம் லைபீரியாவின் இரண்டாவது விதி பயன்படுத்தப்பட்டது. மீறலை வரைவிலக்கணம் செய்ய சர்வதேச மனிதாபிமான சட்டத்தைப் பயன்படுத்தலாம். பேருவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 3வது விதி/சரத்து உதாரணத்திற்கு சுருக்கமான அட்டவணையினைத் தருகின்றது.
- குறித்த ஒரு காலப்பகுதியினையும் ஆட்சி எல்லைப் பகுதியினையும் கவனத்திற் கொள்ளுதலும் வேண்டும். (உ-ம் நீண்ட காலத்திற்கு மொராக்கோ 1956-99)
- தென்னாபிரிக்கா (1960-94) இலக்கு குழுக்களை அடையாளம் செய்தல் (உ-ம்) அரசாங்க அதிகாரிகள் / பாதுகாப்புப் படை, ஆயுதம் தாங்கிய புரட்சி என எடுத்துக்காட்டப்பட்டது.

**ஜனாதிபதியின் கட்டளைகள் மூலம் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முடியும். மாற்றீடாக சட்டத்தின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகையில் பல கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்த வேண்டி ஏற்படும். ஆனால், அவை சட்டரீதியானவையாகும். சட்டவாக்கச் சபை பொதுவாக உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிற்கு பகுதியான நீதிமன்ற அதிகாரங்களை ஒப்படைக்கும். பொதுவாக நிறைவேற்றுத்துறை இதனைச் செய்ய மாட்டாது.**

**அதிகாரங்கள்**

- ஒத்துழைப்பைக் கோருதல்
- தனியார்களையும் பொதுத்துறையைச் சேர்ந்தவர்களையும் விசாரணைக்கு அழைப்பாணை விடுத்தல் மற்றும் தகவல்களுக்கு அழைப்பாணை விடுத்தல்.
- சாட்சிகள் பாதுகாப்பு
- சட்ட ரீதியான நலன்களை நிருவகித்தல் (உ-ம்) தண்டனைகளில் இருந்து பாதுகாத்தல், பொது மன்னிப்புக்கள், ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு இரக்கமனு)

**அமைப்பு**

- நாட்டின் தலைவரால் நேரடியாக நியமித்தல் (உ-ம்) பனமா: சட்டசபையினால் உ-ம் (ஜேர்மனி) இணை நிறைவேற்றுனரால் சட்டமன்றத்தால் (உ-ம் சியாராலியோன் மற்றும் தென்னாபிரிக்கா)
- அனைத்து தேசியங்களும் (உ-ம் யுகண்டா)
- அனைத்து வெளிநாட்டவர்களும் (உ-ம் எல்சல்வடோர்), ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனைப்படி (சியோரா லியோன்) அல்லது சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைப்படி (தீமூர் லெஸ்தே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்புதிறன்**

- சர்வதேச அங்கத்தினர்
- வழங்கப்பட்ட கட்டளையாணை / பணிகள் சுதந்திரமாக செய்து முடிப்பதற்கான திறன்
- பொது மக்களுடன் கலந்தாலோசனை செய்தல் / அணுகி ஆராய்தல் (உ-ம் கட்டளை ஆணை மற்றும் அமைப்பு)
- பன்முகப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் (இனப்பிரிவுகள், சமயப்பிரிவுகள், பாலியல்)
- பங்களிப்போர் (உயர் நீதி ஒழுக்கம், குறிக்கோள்களுக்கு முக்கியத்துவம் தருவது தொடர்பாக மதிக்கப்படுபவர்கள் அல்லது முரண்பாடுகளினால் நேரடியாக பாதுகாப்புக்குள்ளாகிய தேர்தல் தொகுதிகளை பிரதிநித்துவப்படுத்துபவர்கள்)

**நிதி வழங்கல்**

- தேசிய அரசாங்கம் (உ-ம் ஆர்ஜன்ரீனா)
- சர்வதேச மூலம் (உ-ம் எல்சல்வடோர்)
- தேசிய மற்றும் சர்வதேச மூலங்கள் மூலமாக (உ-ம் பேரு)
- தனிப்பட்ட வெளிநாட்டு நிதி வழங்குபவர்கள் (உ-ம் நைஜீரியா)
- இதற்கான வரவு செலவுத்திட்டம் வருடமொன்றுக்கு 5 முதல் 10 மில்லியன் அமெரிக்க டொலர் வரைத் தேவைப்படலாம்.

**செயற்படும் முறைகள்**

- தொகுதி (பேட்டி காணல்)
- தரவுத் தளம் (பிரதேச ரீதியான கூட்டுத் தொகை, பாதிக்கப்பட்டவர்களது பின்னணி, நடாத்தும் வகை பாங்குகள்)
- காலப்பகுதி (குறிப்பு - பொதுமக்களிடம் விசாரிக்காத உண்மை - ஆணைக்குழுக்கள் ஒரு வருடத்திற்கு குறைவான காலப்பகுதியையே கொண்டிருக்கும். ஆனால் பொது மக்களிடம் விசாரிப்பதானால் அது 1-2 வருடங்களிற்கு நீடிக்க முடியும். யுகண்டாவில் உண்மைக்கான ஆணைக்குழு 8 வருடங்கள் வரையான அதி நீண்ட காலப்பகுதியை கொண்டிருந்தது.
- உத்தியோகத்தர்கள் (சமூக விஞ்ஞானத் துறை, சட்டத்துறை நிபுணர்கள், புள்ளி விபரவியலாளர்கள் போன்றோரே வழக்கமாக பணி புரிவர். சிலி நாட்டு உண்மை - ஆணைக்குழுவே ஆகக் கூடிய தேசிய மட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு (500பேர்) செயற்பட்டிருந்தது.

**முடிவுரை**

வன்முறையிலான முரண்பாடுகளுக்குப் பின்னர் உண்மை விளம்புதல் நிலைக்கு தள்ளப்பட்டது என்பதற்கு இலங்கைதான் முதலாவது நாடென்று கூறுவதற்கில்லை. எவ்வாறாயினும் "அனல் தகடு" அணுகுமுறை தேவையில்லை சம்பவங்கள் காரணமாக நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களது இன்றைய நிலைமை, அவர்களுடைய கலாசாரம், தனிப்பட்ட வரலாறு என்பனவற்றை மனதிற் கொண்ட வகையிலேயே ஏற்பாடுகள் தெரிவு செய்து பின்பற்றப்படுதல் வேண்டும். இலங்கையர்கள் அவர்கள் கற்றுக் கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான துணைக்குழுவின் அறிக்கையினை அடுத்து மேற்கொண்டு செய்ய வேண்டியவற்றிற்காகவும் இக்கட்டுரையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள உபாயங்களையும், அணுகுமுறைகளையும் அவர்களுக்கு மிகவும் கௌரவத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

**தயாரிப்பு**

கொலம்பிய பல்கலைக்கழகத்தின் உரிமைகள் பற்றிய கல்விக்கான நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் உரிமைகளுக்கான நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் டேவிட்.எல்.பிலிப்

**அனுசரணை**

இலங்கை தேசிய சமாதனப் பேரவை

"சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பது ஆணையாண்மையுள்ள ஆட்சியினை அடுத்து வரும் காலப்பகுதியினைப் பற்றியதல்ல. அது முரண்பாடு முடிவுற்ற காலத்தின் பின்னர் வரும் காலம் மீதே குவியம் கொண்டிருக்கும். ஜொஹான் ஹல்டஸ் என்பவர் வேறுபட்ட பண்பினதான நல்லிணக்கம் பற்றிய மாதிரிகள் மற்றும் நல்லிணக்கத்திற்கும் "சார்பான (Positive) சமாதானத்திற்குமிடையேயான தொடர்புகள் பற்றி "வன்முறையின் பின்னர்: புனருத்தாரணம் நல்லிணக்கத் தீர்மானம் : காட்சிக்கு தென்படுவதும் காணமுடியாததுமான யுத்தத்தினதும் வன்முறைகள் அவர்களிடையேயான தொடர்புகளும்" என்னும் தனது கட்டுரையில் விரிவாகக் கூறியுள்ளார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாளர்கள் ஆர். சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவும்

# LLRC அறிக்கையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிபலிப்பும்

(இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்கம் பற்றிய விவாதம் அரசியலமைப்புக் கோணத்தில்)



அசங்க வெலிகல

> LLRC ஆணைக்குழுவின் வரலாற்று செயற்பணி திருப்தியற்றது எனக் கருதி அதனை புறக்கணிக்கவும் சிலர் முற்படுகின்றன. இவ்வறிக்கையை வாசித்துப் பார்க்கையில் அவ்வாறு முன் வைக்கப்பட்ட குறைபாடுகள் உடன்பாடின்மை என்பன நியாயமானவை.

போருக்குப் பின்னர் நல்லிணக்க வழிமுறையைப் பரிந்துரை செய்வதற்கு இலங்கை அரசு கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவை (LLRC) நியமித்தது. அனேகமானோர்

எதிர்பார்த்திருந்த LLRC அறிக்கை 2011 டிசம்பர் மாதத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டது. இவ்வாணைக்குழுவின் உத்தியோகபூர்வ பணிப்பாணை, இயல்பு அதன் செயற்பாடு, சட்ட ரீதியான கட்டமைப்பு என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த ஆணைக்குழுவை ஒத்த கடந்த கால கட்டமைப்புகள் மூலம் எதிர்பார்த்தவை நிறைவேறவில்லை என்ற அனுபவங்களுடன் இதனை நோக்குவது முக்கியத்துவம் வாய்ந்தது. அதே சமயம் LLRC ஆணைக்குழு அதன் வரலாற்று செயற்பணி திருப்தியற்றது எனக் கருதி அதனை புறக்கணிக்கவும் முற்படுகின்றன. இவ்வறிக்கையை வாசித்துப் பார்க்கையில் அவ்வாறு முன்வைக்கப்பட்ட குறைபாடுகள் உடன்பாடின்மை என்பன நியாயமானவை. இலங்கையின் பாதுகாப்புப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினருக்கும் எதிராக சர்வதேச ரீதியில் பாரதூரமான மனித நேயச் சட்டங்களும் மனித உரிமைச் சட்டங்களும் மீறப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் குற்றவாளிகள் மற்றும் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது வகைப்பொறுப்பை உறுதிப்படுத்துவதில்

தெளிவான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டவில்லை. ஜனநாயகம், பிரஜா உரிமை, அடிப்படை உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, என்பன படிப்படியாக வீழ்ச்சியடைந்த வண்ணம் உள்ளன. இராணுவ மயமாக்கல் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் குற்றச் செயல்கள் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதுபற்றி LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனேகருடைய ஆச்சரியத்திற்கும் காரணமாக

அமைந்தது. ஆணைக்குழுவின் வியாக்கியானங்களும், பரிந்துரைகளும், ஆய்வுகளுக்கும் விமர்சனங்களுக்கும் அப்பாற் செல்லவில்லை என்றாலும் மேற்படி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பற்றிய இறுக்கமான தன்மையும் பலரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே, உள்நாட்டு சிவில் சமூகமும், சர்வதேச சமூகமும் மிகவும் கவனமாக இவ்வறிக்கையை வரவேற்றுள்ளன. பாரதூரமான குற்றச்செயல்கள் பற்றிய வகைப்பொறுப்பை இட்டு LLRC ஆணைக்குழு போதியளவு இறுக்கத்தை கடைப்பிடிக்காமையால் பலருடைய நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டன. LLRC ஆணைக்குழுவைப் பின்பற்றாமல் இருப்பதற்கு தேர்ந்தெடுத்த கொள்கைகள் மாற்றீடுகள் என்பன பற்றி விழிப்புணர்வோடு இருந்துகொண்டு அவர்கள் காட்டிய பிரதிபலிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. நல்லிணக்க செயற்பாடுகளின் வெற்றியே இப்பரிந்துரைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் வலியுறுத்தப்பட்டன. இலங்கை அரசு இப்பரிந்துரைகளை அமுலாக்குவதற்குக் காட்டும் நேர்மைத் தன்மையிலேயே இப்பரிந்துரைகள் தங்கியுள்ளன.

LLRC அறிக்கை பற்றிய தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பிரதிபலிப்புக்கள் 2012 ஜனவரி மாதத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டன. அதன் கருத்துக்கள் கடும் விமர்சன ரீதியாகவே அமைந்துள்ளன. யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற சில விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் பாராமுகத்தையொட்டியே அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். குறைபாடுகள் உடைய சர்வதேசச் சட்டத்திற்கு ஏற்புடைய உடன்பாடுகளை ஆணைக்குழு தவறான முறையில் பயன்படுத்தியுள்ளது என்ற விமர்சனங்களும் உண்டு. இலங்கையில் இடம்பெற்ற மோதல்களைப் பொறுத்தவரையில் அரசியலமைப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கண்டறிந்து LLRC ஆணைக்குழு தனது பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இது பற்றி தமிழர் தேசியக் கூட்டமைப்பு ஆழமாக தனது கவனத்தை செலுத்தவில்லை. போதியளவு கவனம் செலுத்தாமை மாகாணப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு ஆணைக்குழுவின் பரிந்துரைகளையிட்டே அவர்கள் திருப்தியடையாமல் இருக்கின்றனர். அதேசமயம் ஆணைக்குழு இரண்டாவது சபையையும் பிரேரித்துள்ளது. இத்தகைய பரிந்துரைகளை புறக்கணிப்பதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் புறக்கணிப்பதாகவே இறுதியில் அமையும். இம்முயற்சிகள் வெற்றியளித்தால் மாத்திரமே அவற்றை அவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பார்கள்.

LLRC ஆணைக்குழுவின் மிகப் பலவீனமான அம்சத்தை கடுமையாக விமர்சிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை உண்டு. ஆனால் தனித்த ஒரு சில விடயங்களை மாத்திரம் கருத்திற்கொண்டு இறுக்கமான சட்டவாதங்களையும் விளக்கங்களையும் முன்வைப்பது பிரச்சினைக்குரியது என நாம் கூற முடியாது. இதற்கமைய ஐக்கிய முன்னணி அரசாங்கமும் விசால எண்ணிக்கையினரான சிறுபான்மையினங்களும் பன்மைத்துவத்திற்கு ஒத்திசைவான அரச முறைமை அரசியலமைப்புக் கட்டமைப்பு மூலம் பரிகாரம் காண முடியும். இதற்கு ஏற்புடைய ஆழமான அரசியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் பார்க்க வேண்டிய விடயமாகவே அது அமையும். அதேசமயம் நடைமுறையில் செயற்படவிருந்த ஒரு சந்தர்ப்பத்தை இவ்வாறு இழந்துள்ளனர் என விவாதிப்பதற்கும் இடமுண்டு.

அரசியலமைப்புக்கான திருத்தங்களும் LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அரசியல் அமைப்புக்கான சீரமைப்புக்களை மேற்படி LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் போது தமிழர் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கருத்துக்களையே ஆணைக்குழுவும் வலியுறுத்தியுள்ளது. இவ்வறிக்கையை "மிகத் தெளிவற்ற அனேகமாக அரசியல் அலங்கார வார்த்தைகள்" அங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இதைப் புரிந்துகொள்ள வேண்டும். போருக்குப் பின்னரான யுத்த அரசியலமைப்புத் தீர்வொன்றையே அவர்கள் முன்வைத்துள்ளனர். இத்தகைய ஒன்றை LLRC ஆணைக்குழுவிடமிருந்து எதிர்பார்க்கமுடியாது. அதே சமயம் ஆணைக்குழு இத்தகையதொன்றை சமர்ப்பிப்பது உசிதமானது அல்ல. எனவே, போருக்குப் பின்னரான இலங்கையையும் இனத்துவ, மத, கலாசார பன்மைத்துவத்திற்கு அரசியலமைப்பு ரீதியில் இடமளிப்பது முக்கியமாகும். இதன் பரஸ்பர குணாம்சங்களை வழங்கவேண்டியதன் அவசியத்தை LLRC அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பரந்துபட்ட பொது மாதிரியாக நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக LLRC ஆணைக்குழு போருக்குப் பின்னரான இலங்கைக்கென சமர்ப்பித்துள்ள பரந்துபட்ட அரசியலமைப்புத் தொலைநோக்கு பற்றி பாரதூரமான விமர்சனத்தையும் முன்வைக்கின்றன. தமிழர் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தாமை பெரும் ஆச்சரியத்திற்குரியதாகும். இத்தொலைநோக்கு பிரஜைகளின் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் பன்மைத்துவத்தையும் ஒற்றுமையையும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது என தேசிய அரசு பிரதிபலிக்கிறது.

LLRC அறிக்கையின் மூலம் போருக்குப் பின்னரான இலங்கையின் அரசு எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என நாம் சுதந்திரமடைவதற்கு முன்னர். சோல்பரி ஆணைக்குழு தேசிய அரசு, இனத்துவம், பன்மைத்துவம் ஆகிய முக்கிய எண்ணக்கருக்களை புரிந்துகொண்டிருந்ததை நாம் காணமுடிகிறது.



LLRC ஆணைக்குழுவின் மிகப் பலவீனமான அம்சத்தை கடுமையாக விமர்சிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை உண்டு. ஆனால் தனித்த ஒரு சில விடயங்களை மாத்திரம் கருத்திற்கொண்டு இறுக்கமான சட்டவாதங்களையும் விளக்கங்களையும் முன்வைப்பது பிரச்சினைக்குரியது என நாம் கூற முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அரசியலமைப்புக்கான திருத்தங்களும் LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அரசியல் அமைப்புக்கான சீரமைப்புக்களை மேற்படி LLRC ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் போது தமிழர் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கருத்துக்களையே ஆணைக்குழுவும் வலியுறுத்தியுள்ளது. இவ்வறிக்கையை "மிகத் தெளிவற்ற அனேகமாக அரசியல் அலங்கார வார்த்தைகள்" அங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

LLRC அறிக்கை, தேசிய அரசு பற்றி மரபு ரீதியான வெஸ்ட்ஃபேலியன் மாதிரியை அரவணைத்துக்கொள்கிறது. அதற்கமைய அதுவரை சோல்பரி ஆணைக்குழு தயாரித்த முன்மாதிரியையே பின்பற்றியுள்ளது. இம்முன்மாதிரிக்கு அமைய தேசிய இனம் என்பது எல்லைகள், காணிகள் என்பவற்றை வசப்படுத்தியுள்ளது. அரசு என்பது தேசத்தின் இறைமை உரிமையையும் பொறுப்புக்கூறலின் சட்ட வடிவம் பாதுகாப்பானது எனவும் அர்த்தம் கற்பிக்கப்பட்டது. மேலும் ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் பிரஜைகளின் உரிமைகளைப் பொதுவாக அனுபவிப்பதன் மூலமே அடைய முடிந்தது. இலங்கையர்களைப் பொறுத்தவரையில் கூட்டு அடையாளம் பற்றிய உணர்வு தெளிவாகக் கூறப்படுவதாயின் சமூக ஒருமைப்பாடு, பிரஜாவுரிமை மற்றும் சிவில் அரசியல் உரிமைகள் என்பவை கருத்திற்கொள்ளப்படவில்லை. மொழி, மதம், கலாசாரம் ஏனைய அமைப்புக்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையலாம். இக்கருத்தையிட்டு சோல்பரி ஆணைக்குழுவின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த கருத்தையிட்டு சோல்பரி ஆணைக்குழு அரசியல் அமைப்பு ரீதியான செயல்முறைகளின் பின்னரே கவனம் ஈர்க்கப்பட்டது. இனங்களை பாரபட்சமாக நடத்துவதை தடை செய்யும் குறிக்கோள் திட்டவட்டமான அரசியலமைப்பை உருவாக்கும் இயந்திரத்தின் மூலமே செயற்படுத்த முடியும்.

அனுமானித்த வகையில் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் அரசியல் வளர்ச்சியிலும் எல்லா இனங்களும் உள்ளடக்கப்படுகின்றன. நவீன சமூகம் இலங்கையின் தேசிய குணாம்சங்களையும் கொண்டிருக்க வேண்டும். நவீன மொழி, மதம், கலாச்சாரம் என்பன அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே இது அமைகிறது.

நவீன இலங்கைச் சமூகத்தில் தேசிய அடையாளத்தை சிருஷ்டிக்க வேண்டும். அதனைச் செய்வதற்கு மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் சமூகத்தைப் பிரிக்க முடியாது. பொருந்தா வகையில் முகாமைத்துவம் செய்த இனத்துவ பன்மைத்துவமும் வன்முறை மோதல்களும் கொண்ட அரசாகவே இலங்கையை நாம் கருத முடியும். இலங்கையின் காலனித்துவத்திற்குப் பின்னரான வரலாறு அரச கட்டமைப்புப் பற்றிய மாதிரியை தெளிவாகவும் போதிய அளவின்றியும் உடனடியாக சுட்டிக்காட்டுகிறது. ஜனநாயகப் பன்மைத்துவம், சிறுபான்மையினரின் உரிமைகளும் பெரும்பான்மையினத்திற்கு எதிரானதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு இம்மாதிரி வடிவத்தில் சிறந்த அபிலாஷைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது இலங்கையைப் போன்ற எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அரசியலமைப்பின் தேவையை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். இலங்கையின் அரசியல் கட்டமைப்பினுள் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதும் பல சமூகங்கள் இருக்கும் சூழ்நிலையில் அவற்றினிடையே ஒரு மதத்திற்கோ ஒரு இனத்திற்கோ முன்னுரிமை வழங்க முடியாது. சிங்கள பௌத்த சமூகத்தின் எண்ணிக்கை அதிக உன்னதத் தன்மையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதே சமயம் மனப்பாங்குகள் மூலம் வரலாற்று ஆவணத்தில் ஒரு விருப்பத்தை பெறக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய வரலாற்று ஆவணம் அரசுக்கும் அதற்குரித்தான பூமிக்கும் உரிமை கொண்டாடுகின்றது. இது இவ்வாறு இடம்பெற வேண்டும் என சிங்கள பௌத்தர்கள் கோரி நிற்கின்றனர். இத்தகைய ஆதிபத்தியம் நிலவுகையில் தேசியவாதத்தின் சூழமைவில் ஜனநாயகம் முழுமையாக இனவாத அடிப்படையில் பெரும்பான்மை இனத்தின் ஆதிபத்தியத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இதன் விளைவாக வன்முறையும் துன்பியலும் பெருகுகின்றன. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் போருக்குப் பின்னரான இலங்கை பெரு விருப்பத்துடன் எதிர்பார்த்த மாதிரியை பாதுகாக்க முற்படுகிறது. இத்தகைய தத்துவத்தையே இன்றைய அரசு முன்னெடுக்கிறது. சிங்கள பௌத்த தேசியவாதம், தேசிய அதிகாரத்துவம் விழிப்புணர்வு பெற்ற நிலையில் முன்னேறுகிறது. எவ்வாறாயினும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் என்ற மாதிரிக்கு அமைய இலங்கைக்குள் தற்போது நிலவும் இன ரீதியானதும் தேசிய ரீதியானதுமான பன்மைத்துவத்திற்கு நாம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்குவோம். கோட்பாட்டு ரீதியாக தாமதமின்றி அரசியலமைப்பு ரீதியான சிந்தனையை உடனடியாக உருவாக்க முடியாவிட்டாலும் அதனை பகுப்பாய்வு செய்தல் அவசியமாகும். தாராளவாத ஜனநாயக மேற்கு நாடுகளைப் போலவே உலகத்தின் தென் பகுதியில் உள்ள நாடுகளில் தேசிய பன்மைத்துவம் அரசியலமைப்பு ரீதியிலும் ஆட்கொண்டுள்ளது. தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மைத்துவம் அரசியலமைப்பு ரீதியாக இடமளிக்கப்பட்டாலும் இக்கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும். சார்பு ரீதியான கோட்பாடுகளும் நடைமுறையும் சமகால அரசியலமைப்புச் சட்டத்திலும் அரச அறிவியல் கோட்பாட்டையும் மிகவும் உற்சாகத்தை ஏற்படுத்தக்கூடியன. இந்த வளர்ச்சிகளில் மையக்குணாம்சங்களில் ஒன்று தேசியத்துவத்தை அரசிலிருந்து பிரிக்க முடியாமையே ஆகும். தேசிய அரசிலிருந்து இவற்றை அப்புறப்படுத்த முடிந்தாலும் ஐக்கியப்பட்ட ஓர் அரசின் சட்டகத்துக்குள் ஒரு தேசிய இனத்திற்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சமாதானமாக வாழ்வதற்கு இடமளிக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. புதிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை தயாரிக்கக் கூடிய கோட்பாட்டு ரீதியான தன்மை இதுவே. இது தேசிய இனங்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்துவதற்கு தனி அரசுகளை நிறுவ முன்னெடுக்கும் முயற்சிகளை தடை செய்கிறது. சுய ஆட்சியினதும் அதிகாரப் பகிர்வினதும் ஆரம்ப வேறுபாடுகளை இது வேண்டி நிற்கிறது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் இவ்வளர்ச்சியை நாம் காண முடியும்.

ஆனால், அதற்குப் பதிலாக அரசியலமைப்பு ரீதியில் தோல்வியடைந்த அனுபவத்திடமிருந்து அது உதவியை நாடுகிறது. குறைந்த பட்சம் விவாதத்திற்குரிய பிரச்சினைகளை சுட்டிக்காட்டுகையில் பிரபலமான அபிலாஷை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இருந்திருக்கக் கூடும் என எதிர்பார்க்கின்றோம். அரசியலமைப்பு ரீதியான விடயப் பொருளை புறக்கணிப்பது பற்றிய விடயத்திற்குப் பதிலாக, வகைப்பொறுப்புக் கூறும் விடயத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவது மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை. உண்மையில் இவ்வாறாக ராஜபக்ஷ ஆட்சி இயந்திரம் செயற்படுவதற்குக் காரணம் மையப்படுத்தப்பட்ட அதிகாரம் குவிமையப்படுத்தப்படும் போக்கை தமிழ் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைவாத இயக்கமாக அதை சித்தரிப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் பலனற்றவை. இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு நியாயமற்ற முறையில் சர்வதேசம் தலையிடுவது பற்றி புலம்பெயர் தமிழர்கள் (Diaspora) மற்றும் மேலைத்தேய நாடுகளின் அரசாங்கங்கள் அளவுகடந்த கவனத்தைச் செலுத்துகிறது. இலங்கைத் தீவின் தமிழ் தேர்தல் தொகுதிகளின் சமூகப் பொருளாதாரத் தேவைகளையும் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் பற்றி குறைந்த கவனம் செலுத்தும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் ஒரு வால் என மஹிந்த அரசு இலகுவாகச் சித்தரிக்கின்றது.


சில சமயங்களில் ஆழமாகக் கவனிக்கும் போது LLRC அறிக்கைக்கு துணைபோகும் மைய அரசியலமைப்புக் கருத்துக்கள் பற்றி விமர்சன ரீதியான கலந்துரையாடலில் ஈடுபடுவது முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பை புறக்கணிப்பதோ அல்லது அதன் இயலாமையை தான் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கோ உப அரச தேசியம் பற்றி அதற்கு சுயாதீன அரசியலமைப்பு ரீதியான தொலைநோக்கு இல்லாமையையே இது எடுத்துக்காட்டுகிறது. இது 2009 இல் போர் முடிந்தது முதல் தமிழ் தேசியத்தை ஒடுக்குவதற்கு முன்வைக்கப்படும் கருத்துகளின் ஒரு நெருக்கடி நிலையாகும். உப அரச தமிழ் தேசியம் பற்றி எந்தவொரு கருத்தையும் இறுதியாக ஏற்பதற்கு அல்லது எதிர்கால அரசியல் அமைப்புத் தீர்வாக பிரகடனப்படுத்துவது அவசியமாகும். எனவே இந்நெருக்கடிக்கு திமர் கவனம் செலுத்தப்பட வேண்டும். தமிழ் தேசியத்துவத்தை அரசியல் ரீதியாக எவ்வாறு பிரகடனப்படுத்துவது எப்படி என்பது பற்றிய பல சிக்கல்கள் இருக்கின்றன. அதேசமயம், அதனை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் சுயாதீன அரசியலமைப்பிற்கு உரித்தான இடம் பற்றியும் எதிர்கால அரசியலமைப்பிற்கான தீர்வில் பிரகடனப்படுத்துவது அவசியமாகும். இந்த நெருக்கடியின் மீது அவசரமான கவனத்தை செலுத்த வேண்டும். தமிழ்த் தேசியவாதத்தை அரசியல் ரீதியாக தெளிவாக எவ்வாறு பிரகடனப்படுத்துவது என்பது பற்றி பல பிரச்சினைகள் உண்டு. அதேசமயம், இதை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் சுயாதீனமான அரசியலமைப்பு உரிமைகள் தொடர்பாக எண்ணக்கரு ரீதியில் விளக்கமளிக்காமலேயே இவ்வாறு கூறப்படுகிறது. குறிப்பாக கொழும்பிலுள்ள வெற்றிவாகை சூடிய அரச இயந்திரத்தோடு கொடுக்கல் வாங்கல் செய்யும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் மூலோபாயங்களும், நடைமுறைகளும் சிக்கலானதாக அமைந்தால் அது சிதறிப்போவதற்கான வாய்ப்புக்களே உண்டு.



**இலங்கையின் காலனித்துவத்திற்குப் பின்னரான வரலாறு அரச கட்டமைப்புப் பற்றிய மாதிரியை தெளிவாகவும் போதிய அளவின்றியும் உடனடியாக சுட்டிக்காட்டுகிறது. ஜனநாயகப் பன்மைத்துவம், சிறுபான்மையினரின் உரிமைகளும் பெரும்பான்மையினத்திற்கு எதிரானதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு இம்மாதிரி வடிவத்தில் சிறந்த அபிலாஷைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதியின் செயலாளர் திரு. லலித் வீரதுங்கவும் வெளிநாட்டு அமைச்சர் திரு.ஜீ.எல்.பீரிசும் Photo soiurce: http://srilankapost.blogspot.com

# நடவடிக்கைச் செயற்திட்டம் அமுலாகுமா?



சட்டத்தரணி
எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

ஆணைக்குழுக்கள், மாநாடுகள், கலந்துரையாடல்கள், பரிந்துரைகள், நடவடிக்கைத் திட்டங்கள் என்பவற்றிற்கு இலங்கை பெயர்போன ஒரு நாடு. ஆனால், அவை ஒன்றும் அமுல்படுத்தப்படுவதில்லை.

அவ்வாறாயினும் இக்கருத்து தவறானது என்பதை நிரூபித்துக் காட்டி, கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய, ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிச் செயலாளரின் நடவடிக்கைச் செயற்திட்டம் மூலம் அமுலாக்கப்படுமென தற்போது கூறப்படுகிறது. இக்கூற்று அவ்வாறே நிறைவேறுமென நம்பிக்கை கொண்டுள்ளோம். ஏனெனில், எதிர்காலத்தில் யுத்தத்தை அல்லது நாடு பிளவுபடுவதை தவிர்ப்பதற்கு இது ஓர் சிறந்த நடவடிக்கையாகவே அமையும்.

ஒரு விஷயத்தை ஆரம்பிக்கின்ற போதே அபசகுனமான வார்த்தைகளைப் பேசுகின்றார்களே என ஒரு சிலர் எண்ணலாம். ஆனால் இப்பரிந்துரைகளைக் கூற முற்படுகையில் முதலிலேயே அபசகுன வார்த்தைகளை இந்த LLRC ஆணைக்குழுவே வெளியிட்டது என்பதை பின்வரும் மேற்கோள் சான்று பகர்கின்றது.

"நாட்டின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ள காணாமற் போதல் பற்றிய தகவல்கள் கடந்த கால சம்பவங்களையும் ஆய்வுகளையும் கவனத்திற்கொள்ளும் போது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கும் விசேட பொறிமுறை அவசியமென ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. மனித உரிமைகள் என்ற சூழமைவில், முறையே அரசாங்கங்கள் செயற்படுத்தாத இப்பரிந்துரைகளை உடனடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்துவது அவசியம். முன்னைய ஆணைக்குழுக்கள் மேற்கொண்ட இத்தகைய தீர்மானகரமான அவதானிப்புகள் செயற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் பற்றி நியாயமான விமர்சனமும் சந்தேகமும் எழுந்துள்ளது. இவ்வாணைக்குழுவிற்கும் LLRC இதிலிருந்து தப்ப முடியாது". LLRC அறிக்கையின் 339வது பக்கம் பரிந்துரை 9.48

எவ்வளவு சந்தேகித்தாலும் சந்தேகத்திற்கு அஞ்சி இச்செயற்பாட்டை செய்யாமல் தட்டிக்கழிக்க முடியாது. எனினும், இவற்றைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு கடப்பாடு ஒன்று உண்டு. 2012 மார்ச் 22ம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் அதிகப்படியான நாடுகள் அங்கீகரித்த ஒரு தீர்மானம் உண்டு. அத்தீர்மானத்தில் ஓர் நடவடிக்கைத் திட்டத்தை முன்வைக்குமாறும் அதனை செயற்படுத்துமாறும் மேற்படி பிரேரணை கூறுகின்றது. அதற்கான நடவடிக்கைத் திட்டத்தை முன்வைக்குமாறும், அந்நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் கூறியது. இதற்கமைய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் சாராம்சம் பின்வருமாறு:

1. கற்ற பாடங்கள் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தி அதன் மூலம் ஏற்படும் சட்டக் கடப்பாடுகளை நிறைவேற்றுமாறும் சகல இலங்கையருக்கும் நீதி, சமத்துவம், வகைப்பொறுப்பு, நல்லிணக்கம் ஏற்படுத்துமாறும் கோருகிறது.
2. மேற்படி பரிந்துரைகளை அமுல்படுத்தும் முறையைப் பற்றி நடவடிக்கைச் செயற்திட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்குமாறும் சர்வதேச சட்ட மீறல்களைக் கண்டறியுமாறும் கூறுகிறது.
3. மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் ஐக்கிய நாடுகள் சபை மூலம் பெற்றுத் தருமாறும் கோருகிறது.

இதற்கமைய இலங்கையின் கடப்பாடுகள் மிகவும் தெளிவானது. பொது மக்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தி இதிலிருந்து தப்ப முடியாது. இந்நடவடிக்கைகளை கட்டாயமாக செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைச் செயற்திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டாலும் இது நேர்மையாக அமுல்படுத்தப்படுகின்றதா என்பதை பரப்புரைக்கும் ஏமாறுதல்களுக்கும் வசப்படாமல் கண்டறிய வேண்டும். அதற்கான ஒரு சில விடயங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

**சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துதல்**

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பல பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. அடிப்படையில் நீதித்துறையும் பொலிஸ்துறையும் சுதந்திரமாக செயற்படக்கூடிய ஒரு ஆற்றல் உருவாக்கப்பட வேண்டும். அதே சமயம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்ப்புக்களை அமுல்படுத்தும் அதிகாரம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சட்டத்தின் ஆட்சி அதாவது சட்டத்திற்கு உயர்வாக எந்தவொரு நபரும் இருக்க முடியாது என்ற விடயத்தை உண்மையில் அனுசரிக்க வேண்டுமாயின் ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதாவது நீதி அமைச்சின் கீழ் நிலவிய சட்டமா அதிபரின் அலுவலகமும் பணிகளும் ஜனாதிபதி செயலாளரின் கீழ் செயற்படுவது என்பது சட்டமா அதிபர் திணைக்களம் ஜனாதிபதியின் கீழ் செயற்படுவதற்குச் சமம். இந்நிலையில் வழக்குத் தொடர்தல், வழக்குத் தொடராமை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுதல் என்பன அரசியல் தலையீடுகளுக்கு அமைய இடம்பெறுகின்றன. கடந்த காலத்தில் கொலை வழக்குகள், களவுகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசியல் தலையீடு காரணமாக நீக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் சுதந்திரமாக செயற்பட முடியாமையே இதற்குக் காரணமாகும். மற்றைய விடயம் என்னவென்றால் பொலிஸ் திணைக்களம் சுயாதீன ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் செயற்படவில்லை. முன்னர் உள்நாட்டு அமைச்சின் கீழ் இயங்கிய பொலிஸ் திணைக்களம் தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இதன் அர்த்தம் பொலிஸ் திணைக்களம் அரசியல் தலையீடுகளுக்கு உட்பட்டது என்பதாகும்.

பாரத லக்ஷ்மன் படுகொலை, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வீ.பீ) பகிரங்கக் கூட்டமொன்றுக்கு தாக்குதல் நடத்தி இருவரைக் கொலை செய்தமை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கோ பொலிஸ் திணைக்களத்திற்கோ சுதந்திரமாக செயற்பட முடியாமையாகும். மேற்படி திணைக்களங்கள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய வாய்ப்பு இருந்திருப்பின் நிலைமை மாறியிருக்கும். இத்தகைய பல உதாரணங்கள் உண்டு. சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் என்பன விடுவிக்கப்பட வேண்டும்.

**இங்கு நடைபெறவேண்டியது யாது?**

செய்வதாகக் கூறிக்கொள்ளும் பல வேலைகள் செய்யப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு பல காரணிகள் உண்டு. அதே சமயம் இவை பல ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டு உண்மை மூடி மறைக்கப்படக் கூடும். சட்டத்தை அரசியல் தலையீட்டிலிருந்து விடுவிப்பதாயின் 18வது அரசியலமைப்புத் திருத்தம் மீண்டும் திருத்தப்பட வேண்டும். அல்லது அரசியலமைப்பிற்கான 20வது திருத்தம் அவசியமாகிறது. அரசாங்கம் இவ்வாறாக செயற்படும் என கனவிலும் கருத முடியாது.


அவ்வாறு செயற்படுவதில்லை என உலகிற்கு எடுத்துக்கூற தயாரிக்கப்பட்ட ஜனாதிபதிச் செயலாளரின் அறிக்கை இதை நிரூபிக்கின்றது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு சுயாதீனமான ஒரு பொலிஸ் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே பரிந்துரை செய்துள்ளது. (9.215) ஆனால் ஜனாதிபதியின் செயலாளரின் நடவடிக்கைச் செயற்திட்டத்தில் உலகிற்கு காட்டப்படுவது யாது? "சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது" இக்கூற்றின் மூலம் உலகத்தை ஏமாற்றுவது எவ்வாறு இருப்பினும் வெவ்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. துமிந்த சில்வா, ஜூலம்பிட்டியே அமரே, மர்வின் சில்வா, ரிசாட் பதியுதீன் ஆகியோரின் நடவடிக்கைகள் மூலம் பொலிஸ் திணைக்களம் எவ்வளவு சுயாதீனமானது என்பது புலனாகிறது. இதற்கு மேலதிகமாக அமைதியைக் காக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியிடம், "நீங்கள் சுயாதீனமானவரா?" எனக் கேட்டால் ஒன்றில் அவர் பதில் கூறாமலேயே இருப்பார். அல்லது சிரித்துவிட்டுப் பேசாமல் இருப்பார். இந்த விடை போதாதா என்ன. "சுயாதீனம்" என்ற சொல்லின் பொருளை ஜனாதிபதிச் செயலாளருக்குப் புரிய வைக்கக்கூடிய ஒரு நபர் இவ்வுலகில் இருப்பாரா?

எல்.எல்.ஆர்.சீ ஆணைக்குழு சுயாதீனமான அரச சேவை ஆணைக்குழுவை நிறுவ வேண்டுமென பரிந்துரை செய்கிறது. (9.226) நடவடிக்கைச் செயற்திட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "ஏற்கனவே சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது." அவ்வாறாயின், நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், தண்டனை வழங்கல் அரசியல் செல்வாக்குகள் என்பவற்றிற்கேற்ப இடம்பெறவில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் தான் விரும்பும் ஒரு சில ஆட்களை நியமித்து அதற்கு அரச சேவைகள் ஆணைக்குழு என பெயரிடுவதன் மூலம் அது சுயாதீனமான ஆணைக்குழுவாக அமையுமா? "சுயாதீனமானது" என்பது தற்போது பயன்படுத்தப்படும் பொருளில் "நியமனம் வழங்குதல், இடமாற்றம் செய்தல் பதவி உயர்த்துதல்" போன்றவற்றை அமைச்சர்கள் விரும்பியவாறு செய்வதற்கு இடமளித்து சுதந்திரமாக இருப்பது ஆகும்.

LLRC ஆணைக்குழுவின் 9.206 முதல் 9.209 வரையான பரிந்துரைகளின் போது பாரதி, கருணா, ஈ.பீ.டீ.பீ மற்றும் மேஜர் சீலனின் கோஷ்டி என்பன நடைமுறைப்படுத்தியுள்ள சட்ட விரோத நடவடிக்கைகளைப் பற்றி புலனாய்வு செய்வதற்கு இதுவரை பொலிஸ் திணைக்களம் ஈடுபடுத்தப்படவில்லை எனத் தோன்றுகிறது என்று கூறப்படுகிறது. சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு ஒன்று நடைமுறையில் இருந்தால் இந்நிலைமை ஏற்படுமா?


Photo source: Daily News Pix By Nalin Hewapathirana

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - பாரத லக்ஷ்மனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்.

மேலும் பரிந்துரை 9.204 மூலம் அங்கீகாரமற்ற சுடுகலன்கள் பயன்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறும் அதேவேளை அத்தகைய ஆயுதங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்படுகின்றது. எனினும் இதுவரை மேற்படிக் குழுக்களின் ஆயுதங்கள் களைக்கப்பட்டமைக்கான தகவல்கள் இல்லை. ஈ.பீ.டீ.பீ, ப்லொட், ரெலோ ஊர்காவற்படை, சிவில் பாதுகாப்புப் படை என்பன தொடந்தும் ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றன. LLRC ஆணைக்குழு அங்கீகரிக்கப்படாத (Un authorised) ஆயுதங்கள் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தியுள்ளது. இச்சொற்பதத்தின் மூலம் கிடைக்கும் அனுமதியைப் பயன்படுத்தி அவர்களுக்கு இவ்வனுமதியை வழங்குவதன் மூலம் இக்குற்றச்சாட்டிலிருந்து மீள முடியும்.

இவ்வாறாக இந்த அங்கீகாரம் அல்லது அனுமதி இல்லாத சுடுகலன்களை வைத்திருக்கிறார்களா என்பதை பரிசீலனை செய்வதற்கு சட்டமா அதிபரும் பொலிஸ் திணைக்களமும் சுயாதீனமானவர்களா? அவ்வாறாயின் தொடர்ந்தும் அவர்கள் ஏன் சுடுகலன்களை பயன்படுத்துகிறார்கள்.

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைத் திட்டம், காணாமற் போதல், படுகொலை என்பவற்றை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் பொறுப்பை பாதுகாப்பு அமைச்சிடமும் பொலிசாரிடமும் ஒப்படைத்துள்ளது.

நடவடிக்கைத்திட்டத்தின் பரிந்துரைகளைப் பற்றி அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச நிறுவனங்களிடம் ஒப்படைத்து மூன்று மாதம் முதல் மூன்று ஆண்டுகள் வரை கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. நடவடிக்கைத் திட்டம் அவ்வளவா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பது பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களையும் உலக மக்களையும் ஏமாற்றாது சொல்வதைச் செய்வதாயின் அதனை போற்றுவதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மின்சக்தி துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையில்

# LLRC பரிந்துரைகளை யதார்த்தபூர்வமானதாக மாற்றிக்கொள்ள முடியுமா?



பேராசிரியர்
ஜயந்த செனெவிரத்ன

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கும் மனித உரிமை மீறல்களை ஆராய்ந்து அவற்றுக்கான பரிந்துரைகளை முன்வைத்து மோதல் தரப்பினருக்கிடையில் மீளிணக்கத்தை ஏற்படுத்தத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட்ட நாடுகள் நீதிமன்ற மற்றும் நீதிமன்றமல்லா வழிமுறைகளை மேற்கொள்வதை நாம் அறிவோம். இலங்கையின் ஜனாதிபதியும் அந்த நோக்கத்திற்காகவே 2010 மே மாதம் 15ம் திகதி நீதிமன்றமல்லா LLRC ஆணைக்குழுவை நிறுவியதாக உலகத்தின் முன்னிலையில் தெரிவித்தார். (வேறு நாடுகளில் இவை உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுக்கள் -Truth Commissions என்றே அழைக்கப்பட்டன) எவ்வாறாயினும் இவ் ஆணைக்குழுவானது உண்மையான மனப்பாங்குடன் நியமிக்கப்பட்டதா என்ற கேள்வி பலரின் மனதிலும் நிலவியது. அதற்கான பல காரணிகள் இருக்கின்ற போதிலும் அதில் பிரதானமானது ஆணைக்குழு நியமிக்கப்பட்ட வழிமுறையாகும். யுத்தம் முடிவடைந்ததும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்து யுத்தத்தின் போது சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பன மீறப்பட்டதா என ஆராய வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியின் உடன்பாட்டுடன் கருத்தொன்றை வெளியிட்டார். ஆயினும் அவ்வாறான ஆராய்வொன்றை மேற்கொள்வது தொடர்பில் அரசின் சார்பில் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படாத நிலையில் ஐ.நா செயலாளர் நாயகத்தினால் இவ் விடயங்கள் தொடர்பில் விசேட ஆலோசனைகளைப் பெறுவதற்கென நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இலங்கையினுள் “தருஸ்மான் குழு” என சிலரால் அழைக்கப்பட்ட குழு இதுவே. இக் குழுவை நியமித்ததன் மூலமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் நிறைவேற்று தலைமைப்பீடம், அது தொடர்பில் உள்நாட்டினுள் விசாரணையொன்றை நடத்தத் தேவையான பரிந்துரைகளை பெறுவதற்காகவே LLRC ஆணைக்குழு நியமிக்கப்பட்டதென்பது மறைக்க முடியாத உண்மையாகும். இதன் மூலம் நாம் அறியும் விடயம் என்னவெனில் சர்வதேச ரீதியில் ஏற்படும் அழுத்தங்களில் இருந்து மீள்வதற்காகவே யுத்தத்தை வழிநடத்திய நிறைவேற்று தலைமைப் பீடமே இவ்வாறான குழுவை அமைத்தது.

ஏற்படக்கூடிய பின் விளைவுகளை அறிந்து கொண்ட இலங்கையின் நிறைவேற்று தலைமைப்பீடம், அது தொடர்பில் உள்நாட்டினுள் விசாரணையொன்றை நடத்தத் தேவையான பரிந்துரைகளை பெறுவதற்காகவே LLRC ஆணைக்குழு நியமிக்கப்பட்டதென்பது மறைக்க முடியாத உண்மையாகும். இதன் மூலம் நாம் அறியும் விடயம் என்னவெனில் சர்வதேச ரீதியில் ஏற்படும் அழுத்தங்களில் இருந்து மீள்வதற்காகவே யுத்தத்தை வழிநடத்திய நிறைவேற்று தலைமைப் பீடமே இவ்வாறான குழுவை அமைத்தது.

பிரிசில்லா பீ. ஹெய்னர் (Heyner) என்னும் அறிஞர் "unspeakable Truths: Transitional Justice and the Challenge of Truth Commissions" என்ற நூலில் இவ்வாறான ஆணைக்குழுவொன்றில் காணப்படுகின்றதும் விரிவானதும் குணவியல்புகள் நான்கைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

1. அதன் இலக்கானது நடந்து முடித்த சம்பவங்களின் கடந்த காலமாகும்.
2. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இடம்பெற்ற சம்பவங்கள் சர்வதேச மனித உரிமை சட்டத்திற்கும் மனித நேயச் சட்டத்திற்கும் முரணாக இடம்பெற்றவையா என பரிசீலனை செய்தல்.
3. ஆணைக்குழுவானது குறிப்பிட்ட காலவரையினுள் செயற்படும் அதேவேளை இறுதியில் அறிக்கையொன்றையும் வெளியிடும்.
4. மிகக்கூருணர்வு கொண்ட தகவல்களைப் பெறுகின்றபோது, அதற்குத் தேவையான பாதுகாப்பு ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் அதேவேளை அத்தகவல்கள் மற்றும் தரவுகள் அரசியல் மாற்றங்களினால் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்லும் அரசைப் போலவே ஆட்சிக்கு வரும் புதிய அரசிற்கும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை கிடைக்கின்றது.

இதன்படி நோக்கும் போது மேற்குறிப்பிட்ட விடயங்களில் இரண்டாவது மற்றும் நான்காவது விடயங்களை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் LLRC ஆணைக்குழுவிற்கு இருக்கவில்லை என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. முதலிலே குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் அரசியல் மாற்றத்தின் போது அதிகாரத்திலிருந்து விலகிச் செல்லும் அரசு எமக்கு இருக்கவில்லை. மாறாக யுத்தத்தை வழிநடத்திய, யுத்தத்தின் தரப்பினராகிய யுத்தத்தின் நிறைவில் மேலும் வலுவடைந்த ஒரு அரசே எமக்கு இருந்தது. உலகின் முதலாவது உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவாக கருதப்படுகின்ற தென் ஆபிரிக்க ஆணைக்குழுவை, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) நியமித்தது. (உண்மையிலே அங்கு இரண்டு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன) ANC யானது மோதலின் போது பாதிக்கப்பட்ட தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்திய தரப்பினர் என்பதை நாம் அறிவோம். இவ் ஆணைக்குழு நியமிக்கப்படும் போது ANC ஆட்சியில் இருந்தது ஆயினும் அப்போது ஜனாதிபதியாகவிருந்த நெல்சன் மன்டேலாவின் முழுமையான ஒத்துழைப்பு இவ் ஆணைக்குழுவிற்குக் கிடைத்திருந்தது. ஆணைக்குழுவின் பக்கச் சார்பின்மை மற்றும் செயற்திறன் தொடர்பில் எவருக்கும் பிரச்சினை ஏற்படவில்லை. இதன் காரணமாக தகவல் மற்றும் தரவுகளை எவ்வித ஒழிவு மறைவுமின்றி பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமும் அதேபோல் அவற்றை விசாரணை செய்வதற்குமான சந்தர்ப்பமும் ஆணைக்குழுவிற்கு இருந்தது. மன்னித்தல் மற்றும் நல்லிணக்கம் (Forgiveness & Reconciliation) என்பன ஆணைக்குழுவின் அடிப்படை இலக்குகள் ஆயின.

அது அவ்வாறாயினும் யுத்தத்தை வழிநடத்திய, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இலங்கையின் அரசு தொடர்பிலான தகவல்கள் மற்றும் தரவுகளைப் பெறுவதில் முழுமையான சுதந்திரம் LLRC ஆணைக்குழுவிற்கு இருக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அதேபோல் சிவில் சமூகத்திடமிருந்து தகவல்களை பெறுவதிலும் ஆணைக்குழு தயக்கம் காட்டியது. எனவே இதன் காரணமாக அறிக்கையின் சட்டபூர்வத்தன்மை தொடர்பில் எழுகின்ற சந்தேகங்கள் நியாயமானதாக இருக்கின்றன. இவ்வாறான ஆணைக்குழுக்களின் வெற்றியானது பாதிக்கப்பட்டவரிடமிருந்தும் குற்றவாளியிடமிருந்தும் ஒட்டுமொத்த சமூகத்திடமிருந்தும் கிடைக்கப் பெறுகின்ற ஒத்துழைப்பின் மூலமே தங்கியுள்ளது. ஆயினும் தம்மை நியமித்த அரசியல் தலைமைகளின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படும் ஆணைக்குழுவொன்றினால் ஒட்டுமொத்த மக்களின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும்?

இவ்வாறான சூழ்நிலையிலும் கூட



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிக்கையில் சாதகமான சில விடயங்கள் இருப்பதை காண முடியும். முதலாவது விடயம் பொறுப்புக் கூறல் தொடர்பானது. சிவில் மக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடாத்தி அவர்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தியிருந்தால் அது தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு குற்றம் புரிந்தோருக்கு தண்டனை வழங்கவேண்டுமென்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயினும் யுத்தத்தின் உச்சகட்டத்தின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் போதுமான சாட்சிகள் இருந்தும் பாதிக்கப்பட்டவர்களை ஆணைக்குழு முன்னிலையில் வரவழைத்து உண்மையான மனப்பாங்குடன் அவர்களுடைய கருத்துக்களை செவிமடுத்தலையோ ஆராய்தலோ மேற்கொள்ளாது பொறுப்புக் கூறல் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்வது எந்தளவு பிரதிபலன்மிக்கதென எண்ணத் தோன்றுகின்றது. ஆணைக்குழுவானது அக்காலப்பகுதியில் நடந்துகொண்ட விதத்தின் பின்னணியில் பாதிக்கப்பட்டவர்கள் சுயமாக முன்வந்து ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை. அவ்வேளையில் காணப்பட்ட பாதுகாப்பற்ற சூழலைப் போலவே மனரீதியான ஆயத்தமும் காணப்படாமையே அதற்கான காரணங்கள் ஆகும். தென் ஆபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. குற்றவாளிகளின் வாக்குமூலங்களை தொலைக்காட்சியினூடாக பார்வையிடுவதன் மூலமும் கேட்பதன் மூலமும் மன்னிக்கும் செயற்பாட்டின் அடிப்படையில் ஆற்றுப்படுத்துகை வரை விருத்தியடையச் செய்வதற்கான ஆற்றல் ஆணைக்குழுவிடம் இருந்தது. குற்றவாளிகளுக்கு தமது வன்முறை செயற்பாட்டின் விளைவாக பாதிக்கப்பட்ட நபர்களுடன் கூட்டிணைவதென்பது இலகுவான விடயமாக இருக்கவில்லை. அதற்கென இரு தரப்பினருக்கும் மனரீதியான பயம் இருத்தல் அவசியம். குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல் மாத்திரமின்றி அவர்களை புனர்வாழ்வு செய்யும் நடைமுறையும் அவசியமானதே.

இவ்வாறான வன்முறைகளை மேற்கொண்டவர்கள் பிற்காலத்தில் இடர்களுக்கு பின்னரான மனநிலை பாதிப்பிற்கு (PTSD) ஆளாகுவார்கள் என்பதை நாம் அறிவோம். இன்று சமூகத்தில் கொடூரமான சம்பவங்கள் அதிகரிப்பதற்கு இதுவும் ஓர் காரணம் என்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை. எனவே பதிலுக்குப் பதிலடி கொடுக்கும் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளும் நியாயம் (Retributive Justice) ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பிலும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். ஆயினும் ஆணைக்குழுவானது இவ்விடயம் தொடர்பில் எதுவித உணர்வுமின்றி தமது கவனத்தைச் செலுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆணைக்குழுவின் உள்ளடக்கமானது "சட்டத்தின் ஆட்சியை" மீள நிறுவுவது தொடர்பில் முன்வைக்கும் யோசனைகள் வரவேற்கத்தக்கது. பிரதானமாக பொலிஸ், அரச சேவை, நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் அரசியல் வலைக்குள் இருந்து மீட்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றை சுயாதீனமாக இயங்க விட வேண்டும் என்ற இந்த பரிந்துரையை தமிழ் தேசிய அமைப்புக்கள் வரவேற்றுள்ளன. ஆயினும் அச் சுயாதீனமானது அரசியலமைப்பில் அண்மையில் இணைத்துக்கொள்ளப்பட 18வது சீர்திருத்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியாக நாம் காண்பது அரசியலமைப்பை மையப்படுத்திய ஓர் அரசு உருவாக்கம் பெறுவதையே ஆகும். அதாவது, ஆட்சி புரியும் நபர்களினதும், குழுக்களினதும், நிறுவனங்களினதும் அதிகாரமானது அரசியலமைப்பின் மூலமாக கட்டுப்படுத்துவதையே இது குறிக்கிறது. இப்போதைய சூழ்நிலையில் அரசியலமைப்பையும் மீறிச் செல்லும் மாபெரும் அதிகாரமானது ஒட்டுமொத்த அரசினதும் கட்டுப்பாட்டை ஒரு சிறிய குழுவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் அரச சீர்திருத்தமானது புதியதோர் அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும். இருப்பினும் நடந்தவைகளும் நடப்பவைகளும் மென்மேலும் மையப்படுத்தப்பட்ட அரசியல் அதிகார



**முதலிலே குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் அரசியல் மாற்றத்தின் போது அதிகாரத்திலிருந்து விலகிச் செல்லும் அரசு எமக்கு இருக்கவில்லை. மாறாக யுத்தத்தை வழிநடத்திய, யுத்தத்தின் தரப்பினராகிய யுத்தத்தின் நிறைவில் மேலும் வலுவடைந்த ஒரு அரசே எமக்கு இருந்தது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவில் மக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடாத்தி அவர்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தியிருந்தால் அது தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு குற்றம் புரிந்தோருக்கு தண்டனை வழங்கவேண்டுமென்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயினும் யுத்தத்தின் உச்சகட்டத்தின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் போதுமான சாட்சிகள் இருந்தும் பாதிக்கப்பட்டவர்களை ஆணைக்குழு முன்னிலையில் வரவழைத்து உண்மையான மனப்பாங்குடன் அவர்களுடைய கருத்துக்களை செவிமடுத்தலையோ ஆராய்தலே மேற்கொள்ளாது பொறுப்புக் கூறல் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்வது எந்தளவு பிரதிபலன்மிக்கதென எண்ணத் தோன்றுகின்றது.**

வலைக்குள் அரசை வழிநடத்துவதாகவே அமைகின்றது.

புதியதோர் யோசனையாக இல்லாத போதிலும் LLRC யானது அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமது அவதானத்தை செலுத்தியிருப்பதானது மகிழ்ச்சி தரக்கூடிய விடயமே. அதிகாரமானது மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியதும், அதேவேளை மக்களுடன் நெருக்கமானதாக இருத்தல் வேண்டும் என்பதையும், அதன் மூலம் எடுத்துக் காட்டுகின்றது. இருப்பினும் நாம் அனைவரும் அறிந்த வகையில் அதிகாரத்தை தமக்கு நெருக்கமானதாகவும் உதவியாகவும், தெளிவானதாகவும் வைத்து பயன்படுத்துவதையே முஸ்லிம் தமிழ் சிங்களம் ஆகிய இனத்தவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் காரணமாகவே மாகாண சபை முறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்ததே தவிர சுயாட்சி அபிலாஷைகளை அடைந்துகொள்வது தொடர்பிலான கட்டமைப்பு மாற்றம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்கவில்லை. இவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்துவதாயின் அரசின் ஒற்றையாட்சி (Unitary) வடிவத்தையும் நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் மாற்றுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டியுள்ளது. அதிகப்படியாக மையப்படுத்தப்பட்ட இரண்டாவது குடியரசு 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை இணைத்ததன் காரணமாக பல பிரச்சினைகள் இப்போதும் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் காணுகின்றோம். எனவே இன்றிருக்கின்ற அதிகாரப்பகிர்வு தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைய ஒன்றும் இல்லை. 13வது சீர்திருத்தத்திற்கு அப்பாலான அதிகாரப் பகிர்வு தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த 25 வருட காலப்பகுதி முழுவதும் இடம்பெற்றது. ஆணைக்குழு குறிப்பிடுகின்றதன் அடிப்படையில் ஜனநாயக ரீதியான அரசியல் தீர்விற்கு தடையாகவிருந்த LTTE அமைப்பு தற்போது அழிக்கப்பட்டுவிட்டது. எனவே உரிய தரப்பினரோடு மீளிணக்கத்தை ஏற்படுத்தத் தேவையான அரசியல் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதில் தடையேதும் இப்போது இல்லை. ஆயினும் அரசு தமது தவறுகளை திருத்திக்கொள்ளும் நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்ளும் என்பது கேள்விக்குறியே. தவறுகளை திருத்திக்கொள்ளல் (Reparation) என்பது தனிநபர்களுக்கு மட்டுமல்ல அரசிற்கும் உரித்தான காரணியாகும். வரலாற்று ரீதியாக தம்மால் இழைக்கப்பட்ட அரசியல் தவறுகள் தொடர்பில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளல், தவறுகளை திருத்திக்கொள்ளல் மற்றும் குற்றத்திலிருந்து விடுதலையாதல் போன்ற காரணிகள் மீளிணக்கத்திற்கு தேவைப்படும் அடிப்படை விடயங்களாகும். அப்படியான ஒரு விடயத்தை மேற்கொள்ளும் போது பாதிக்கப்பட்டவர்களால் "கடந்த காலங்களை மறக்க முடியாதவர்களாயினும் மன்னிக்கக்கூடியவர்கள்" என்ற நிலைக்கு வர முடியும். அவ்வாறான சூழ்நிலையில் மிளிணக்கத்திற்கான சூழல் உருவாகக் கூடும். நாம் அனைவரும் அறிந்த வகையில் இப்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் கேட்பது நியாயமான ஷ அரசியல் தீர்வொன்றையே ஆகும்.

கடந்த 32 வருட காலப்பகுதியை நியாயமான அரசியல் தீர்வு ஒன்று தொடர்பாக மேற்கொண்ட வட்ட மேசைக் கலந்துரையாடல்கள், பாராளுமன்ற தெரிவுக் குழுக்களின் கூட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் முன்மொழிவுகள் பலவற்றை உருவாக்குவதினூடாகக் கழித்துள்ளோம். ஒரு சந்தர்ப்பத்தில் பிரதான கட்சிகள் இரண்டினதும் உடன்பாட்டுடன் உருவாக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவானது 13வது திருத்தத்தையும் தாண்டிச் செல்லும் ஷஅதிகாரப் பகிர்வொன்றை முன் மொழிந்தது. 2000ம் ஆண்டில் விரிவான மக்களது கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட முன் மொழிவொன்றையும் நாம் கண்டோம். அடுத்ததாக சுமார் 130 கூட்டத் தொடர்களை நடாத்திய சர்வகட்சிக் குழு அறிக்கையும் காணப்படுகின்றது. அவ்வறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை எனினும் குறிப்பிட்டளவு கவர்ச்சிகரமான ஒன்று என அது கருதப்படுகின்றது. தற்போது மேலுமொரு சர்வகட்சிக் குழுவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் வேறு என்ன வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் விமர்சனங்கள் எந்தளவு நியாயமானது எனச் சிந்திக்க வேண்டும். அதேபோல் LLRC பரிந்துரைகள் தொடர்பிலும் இவ்வாறானதோர் நிலைமை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் அவர்கள் இந்தியாவிடமோ மேலைத்தேய நாடுகளிடமோ உதவி கோருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவித காரணியும் இல்லை என்பதே எனது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் பங்குபற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க குழுவினர் Photo source: Jean-Marc Ferre

# ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவை (UNHRC)

## 2012.03.22 ஆம் திகதி நிறைவேற்றிய பிரேரணை

ஐக்கிய நாடுகளின் சாசனத்தினதும், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினதும், சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களினதும், ஏனைய பொருத்தமான பொறிமுறைகளினதும் வழிகாட்டலின் கீழ் இலங்கையில் நல்லிணக்கத்தையும் வகைப்பொறுப்பபுக்கூறலையும் இலங்கை மேம்படுத்த வேண்டும் (3/6/12) அரசுகள் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுகையில், சர்வதேசச் சட்டத்தின் கீழ் பொருத்தமுடைய வகையில், குறிப்பாகச் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும், அகதிகள் மற்றும் மனித நேயச் சட்டங்களுக்கும், உடன்பாடாகவும் கட்டுப்பாட்டுடனும், நடந்து கொள்ள வேண்டும் என மீள உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின்(LLRC) கண்டுபிடிப்புகளையும் பரிந்துரைகளையும் கவனத்திற் கொள்ளும் அதே வேளை, இலங்கையில் தேசிய நல்லிணக்க வழிமுறைக்கு ஆற்றக்கூடிய பங்களிப்பையும் ஏற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றது.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை வரவேற்கின்றோம். அதேவேளை நீதித்துறைக்கு அப்பால் இடம் பெற்றதாக மிகப்பரந்துபட்ட முறையில் குற்றஞ்சாட்டப்படும் கொலைகள் பற்றியும், பலவந்தமான காணமற்போதல் பற்றியும், புலனாய்வு செய்யப்பட வேண்டும். இலங்கையில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவமயமாக்கலை நீக்க வேண்டும். காணித்தகராறுகளைத் தீர்ப்பதற்கான பக்கச் சார்பற்ற பொறிமுறைகள் அமுலாக்கப்பட வேண்டும். ஆட்கள் தடுத்துவைக்கப்படும் கொள்கைகளை மீள மதிப்பாய்வு செய்தல் வேண்டும். முறைசார் சுதந்திரச் சிவில் நிறுவனங்கள் வலுவூட்டப்பட வேண்டும். மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடிய வகையில் அரசியல் தீர்வை எட்டுதல் வேண்டும், அனைவரது கருத்துச் சுதந்திர உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். சட்டச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டங்களை இயற்றுதல் வேண்டும் என கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைத்தபோதிலும், சர்வதேசச் சட்டங்கள் பாரதூரமாக மீறப்பட்டமை குறித்து மேற்படி ஆணைக்குழு அறிக்கை போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அக்கறையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

1. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசைக் கோரும் அதேவேளை பொருத்தமான சட்டரீதியான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து இலங்கையருக்கும் நீதி, சமத்துவம், என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து மேலதிக நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.
2. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சர்வதேசச் சட்டம் மீறப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதோடு ஒட்டுமொத்தமான நடவடிக்கைத் திட்டத்தை இலங்கை அரசு சமர்ப்பிக்க வேண்டும்.
3. மேற்படி நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கும் வகையிலும், அதற்கு ஆலோசனை வழங்கும் வகையிலும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை ஊக்குவிக்கும் அதேவேளை பொருத்தமான விசேட வழிமுறைகளை பின்பற்றவும் ஆதரவு வழங்க வேண்டும். அதேசமயம் மனித உரிமைகள் பேரவையின் 22வது அமர்விற்கு மேற்படி ஏற்பாடுகளைப் பற்றிய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை வேண்டுகின்றோம்.

> "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு இலங்கை அரசைக் கோரும் அதேவேளை பொருத்தமான சட்டரீதியான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து இலங்கையருக்கும் நீதி, சமத்துவம், என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து மேலதிக நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



http://www.tamilnewsnetwork.com/2012/04/08/hr-battle-from-geneva-to-washington-now/

LLRC ஆணைக்குழுவின் தவிசாளர் சீ.ஆர்.டி. சில்வா LLRC அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கின்றார்.

# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு (LLRC), வகைப்பொறுப்பும், நல்லிணக்கமும்

ருக்கி பெர்னாண்டோ



**1. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் (LLRC), பின்னணி:**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் (LLRC) இறுதி அறிக்கை ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டு எட்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. LLRC ஆணைக்குழு 2010 மே 15 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியால் தாபிக்கப்பட்டது. 2010 செப்டம்பர் 13 ஆம் திகதி LLRC தனது இடைக்காலப் பரிந்துரைகளை வழங்கியது. 2011 நவம்பர் 15ஆம் திகதி LLRC தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. 2011 டிசம்பர் 10ஆம் திகதி LLRCயின் இறுதி அறிக்கை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அது பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டது.

ஏனைய பல வேளைக்குகந்த விசாரணை ஆணைக்குழுக்களைப் போலவே LLRCயும் அதிகரிக்கும் சர்வதேச அழுத்தத்துக்குப் பதில் நடவடிக்கையாகவே ஏற்படுத்தப்பட்டதாகத் தோன்றுகின்றதென்று நான் நம்புகின்றேன். இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான யுத்தத்தின் கடைசிக் கட்டத்தின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் சர்வதேசச் சட்டம் என்பவற்றின் மீறல்கள் சம்பந்தமான சார்த்துதல்களைக் கையாளுவதற்கே இந்த அழுத்தம் ஏற்பட்டது. பிரத்தியேகமாக LLRCயை நியமித்ததன் நோக்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"
2006 ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட வகையில், இதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட பல ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வில் அதிகளவிலான ஆக்கபூர்வமான மாற்றமெதனையும் ஏற்படுத்தவில்லை. இந்த அறிக்கைகள் பாதிப்புற்றோருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், சாட்சியமளித்தோருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கப்படவுமில்லை.
"

நாயகம் வகைப்பொறுப்பு பிரச்சினைகளைக் கையாளுவதற்கும், இலங்கை மீது ஏதாவது சர்வதேச நடவடிக்கையைத் தாமதப்படுத்துவதற்கும் அவருக்கு மதியுரை வழங்கும் விடயத்தில் நிபுணர்கள் குழாம் ஒன்றை நியமிக்கும் முயற்சிக்கு எதிர் நடவடிக்கையாகவே தோன்றியது. 2011 மார்ச்சில் ஐ.நா.செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் குழாம் தமது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்ததோடு, அது LTTE அமைப்பும், இலங்கை அரசாங்கமும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியுள்ளமைக்கான நம்பத்தகுந்த சார்த்துதல்கள் உள்ளதாகவும், அனேகமான சிவிலியன்கள் அரசாங்கத்தினாலேயே கொல்லப்பட்டனர் என்றும் தெரிவித்தது.

**2. LLRC தனது பணியைத் தொடங்குவதற்கு முன்னராக நிலவிய நம்பிக்கையீனங்கள்:**

2006 ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட வகையில், இதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட பல ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வில் அதிகளவிலான ஆக்கபூர்வமான மாற்றமெதனையும் ஏற்படுத்தவில்லை. இந்த அறிக்கைகள் பாதிப்புற்றோருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், சாட்சியமளித்தோருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கப்படவுமில்லை. இந்த ஆணைக்குழுக்கள் செய்திருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவுமில்லை. தேடல் முடிவுகளின் அடிப்படையிலான வழக்குத்தொடரல்களோ, குற்றத்தீர்ப்புகளோ இடம்பெறவில்லை. இவ்வாறாக LLRC தனது பணியை ஆரம்பிக்கும் முன்னரே அதன் தாக்கம்குறித்துப் பெருமளவிலான நம்பிக்கையீனம் நிலவியது. எவ்வாறாயினும், LLRCயின் இறுதி அறிக்கை பிரசுரிக்கப்பட்டு, பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாயிருக்கின்றது என்னும் நிகழ்வுண்மை ஓர் ஆக்கபூர்வமான படியாகும்.

**3. கட்டமைப்பிலும், அமைவாக்கத்திலும் மற்றும் பணிப்பாணையிலும் இருந்த பலவீனங்கள்:**

LLRCயின் கட்டமைப்பு, அமைவாக்கம் மற்றும் பணிப்பாணை என்பவையும் அனைத்துமடங்கும் வகையில் அது LTTE அமைப்பு, மற்றும் (தற்போதைய எதிர்க்கட்சிக்கும், LTTE அமைப்புக்கும் இடையிலான) 2002ஆம் ஆண்டின் போர் நிறுத்த உடன்படிக்கை என்பவற்றின் மீது குற்றஞ்சுமத்தி, தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியே என்னும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியது. LLRCயின் தவிசாளர் ஒரு முன்னாள் சட்ட மாஅதிபர் ஆவார். 2007-2009 காலப்பகுதியில் முக்கியமான சர்வதேசக் கூட்டங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டமை சம்பந்தமான சார்த்துதல்களை ஜனாதிபதியும், அரசாங்கமும் எதிர்நோக்கிய வேளையில் அவர்களைத் தீவிரமாக ஆதரித்து வாதிட்டவராவார். இந்த ஆணையாளர்களுள் எவருக்குமே வலுவான மனித உரிமைகள் பாதுகாப்புச் சான்றுப் பத்திரங்கள் எதுவும் இருக்கவில்லை. பணிப்பாணையின் ஒரு பாரதூரமான மட்டுப்பாடு யுத்த நிறுத்த உடன்படிக்கையையும், போரின் முடிவையும் உள்ளடக்கும் காலப்பகுதியாகிய 2002 - 2009 காலப்பகுதியை மாத்திரமே ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டமையாகும். (எவ்வாறாயினும், LLRCக்குச் செய்யப்பட்ட எண்ணிறந்த சமர்ப்பணங்களின் அடிப்படையில் LLRC 2002க்கு முந்தியதும், 2011 வரையிலான போருக்குப் பிந்தியதுமான சூழமைவுகளையும் கவனத்திற் கொண்டது.) இன்னுமொரு மட்டுப்பாடு பாதிப்புற்றோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு வழிமுறையமைப்பு எதுவும் இல்லாமையாகும். நீதிமன்றங்கள் மற்றும் இதற்கு முந்திய விசாரணை ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட வகையிலான இலங்கையின் சட்ட நிறுவனங்களுடன் ஒத்துழைத்த பல பாதிப்புற்ற நபர்களும், அவர்களின் குடும்பங்களும், மற்றும் சாட்சிகளும் கொல்லப்பட்டும், மிரட்டப்பட்டும், தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டும் உள்ளனர். வகைப்பொறுப்பு சம்பந்தமாக ஆய்வு செய்வதற்கான எவ்விதமான குறித்துரைத்த பணிப்பாணையும் இருக்கவில்லை. ஆணையாளர்கள் இத்தீர்மானகரமான பரிமாணத்தில் தமது செயலின்மைக்கான காரணம் இதுவே என்று தெரிவித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. LLRCயின் நடைமுறை:

LLRC வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட வகையில் கொழும்புக்கு வெளியே விசாரணைகளை மேற்கொண்ட போதிலும், LLRCயின் அனேகமான விசாரணைகள் கொழும்பிலேயே இடம்பெற்றன. கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே விசாரணைகள் இடம்பெற்றதை வரவேற்க வேண்டுமென்றபோதிலும், வடக்கு கிழக்கில் செலவிடப்பட்ட பற்றாக்குறையான நேரம் ஏமாற்றமளிப்பதாக இருந்ததோடு, சாட்சியமளிக்க முன்வந்திருந்த பல பெண்களுக்கும், ஆண்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டாமலேயே போய்விட்டது. கொழும்பில் அரசாங்க அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் போன்றோர் சாட்சியமளிக்கையில், அவர்களுக்கு 30-60 நிமிடங்கள் வரை நேரம் வழங்கப்பட்டது. இவற்றோடு ஒப்பிடுகையில் வடக்கு, கிழக்கில் சந்தர்ப்பம் கிடைத்தவர்களுக்கு ஒரு சில நிமிடங்களே வழங்கப்பட்டன. கொழும்பிலும், வடக்கு - கிழக்கிலும் இடம்பெற்ற விசாரணைகளை நெருக்கமாகக் கண்காணிப்புச் செய்தவர்களுக்கு அரசாங்க அதிகாரிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும், மதத் தலைவர்கள் போன்றோருக்கும் வழங்கப்பட்ட மரியாதையும், கௌரவமும், காணாமற்போன, கொல்லப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குக் கிட்டவில்லையென்பது தெளிவாகியது. வடக்கில் பகிரங்கமாக இடம்பெறுமென்று தெரிவிக்கப்பட்ட விசாரணைகளுக்குச் சென்றிருந்த எனது சகபாடிகள் கேள்விகள் கேட்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டு, நுண்ணாய்வுகளுக்குட்படுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, சர்வதேச சமூகத்துடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாமென்று மிரட்டப்பட்டனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட ஊடக அணியினர் பகிரங்க விசாரணைகள் குறித்து செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை. யுத்த காலப்பகுதியில், விசேடமாக இறுதி ஐந்து மாதங்களில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சார்த்துதல்களைப் பொறுத்தவரையில், ஆணையாளர்கள் கேட்ட அனேகமான கேள்விகள் புறநிலை யதார்த்த உண்மையைத் தாபிப்பதைவிட, LTTE அமைப்பின் குற்றச்செயல்களைத் தாபிப்பவையாகவே இருந்தது போல் தோற்றமளித்தன. உரைபெயர்ப்பிலும் மிகவும் மோசமான வகையில் விடுபாடுகள் இடம்பெற்றன. ஒரு சந்தர்ப்பத்தில் தமிழில் சாட்சியமளித்த அரசாங்க அமைச்சரொருவர் உரைபெயர்ப்பைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

### 5. LLRC யின் தேடல் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளைப் பகுப்பாய்வு செய்தல்:

5.1 பிரச்சினையின் மூலகாரணங்களுக்குத் தீர்வு தேடுதல் மற்றும் அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான அரசியல் தீர்வு LLRC "முரண்பாட்டின் காரணங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு ஓர் அரசியல் தீர்வு அவசியம்" என்பதை இனங்கண்டதோடு, "அதிகாரப்பகிர்வுப் பிரச்சினையில் அனைவரும் காணக்கூடிய முன்னேற்றமொன்றை ஈட்டிக்கொள்வதன் தீர்மானகரமான முக்கியத்துவத்தையும் ஏதாவது நிரந்தரமான, நிலைபேறான மீளிணக்கச் செயல்முறையின் வெற்றியை உறுதிசெய்வதற்கும்" இது அவசியமென்பதை வலியுறுத்தியது. அது "இயன்றளவுக்கு அதிகூடுதலான அதிகாரப் பகிர்வை" பரிந்துரைப்பதோடு, "அதிகாரப்பகிர்வு அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வுக்கு அரசாங்கம் தலைமைத்துவத்தை வழங்கவேண்டும்" என்றும் தெரிவிக்கின்றது.

5.2 யுத்தத்தின் போது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்த சார்த்துதல்கள், பலவந்தமாக ஆட்களைக் காணாமற் போகச்செய்தல், நீதிமுறைக்கப்பாற்பட்ட மரண தண்டனைகள், குற்றப்பத்திரம் கையளிக்கப்படாமல் நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டிருத்தல், சிவிலியன்கள் மீதான "ஷெல்" தாக்குதல், துப்பாக்கிச் சூடு மற்றும் அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்ட யுத்த சூனிய வலயங்கள் உள்ளிட்ட இடங்கள் மீதான தாக்குதல், வைத்தியசாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் மீதான "ஷெல்" வீச்சு போன்ற அரசுக்கு எதிரான முறைப்பாடுகள் LLRCயிடம் சமர்ப்பிக்கப்பட்டன. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், சிவிலியன்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிரான கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள், சிறுவர்கள் உள்ளிட்ட வகையில் பலவந்தமான ஆட்சேர்ப்பு, சிவிலியன்கள் நடமாடும் இடங்களிலிருந்து போரிடுதல், சிவிலியன்களுக்கு அனுப்பப்பட்ட உணவை அபகரித்தல், யுத்த வலயத்தைவிட்டு நீங்கவிடாமல் சிவிலியன்களைத் தடுத்தல், தப்பியோட முற்பட்ட சிவிலியன்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தல் போன்ற சார்த்துதல்கள் LTTE அமைப்புக்கெதிராக முன்வைக்கப்பட்டன. இவற்றுள் சில கல்விமான்கள், சிவில் சமூக மற்றும் மதத் தலைவர்கள் என்போரின் சமர்ப்பணங்களின் ஒரு பகுதியாகவும், ஏனையவை மீறல்களால் பாதிப்புற்றோராலும், நேரடியாகப் பாதிப்புற்றோராலும் அவர்களின் குடும்பங்கள் மற்றும் நேரில் கண்ட சாட்சிகளாலும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளாக இருந்தன. இத்தனிப்பட்ட முறைப்பாடுகள் குறித்து ஆய்வுசெய்வதாக LLRC வாக்குறுதியளித்திருந்தபோதிலும், இவ்வாறு பாதிப்புற்றோரும், அவர்களின் குடும்பங்களும் LLRCயிடமிருந்து இதுவரை எதையுமே கேள்விப்படவில்லை. இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழாம், யாழ்ப்பாணம் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, மனித உரிமைகள் காவல் அமைப்பு மற்றும் சர்வதேச நெருக்கடிகள் குழு போன்றவை வெளியிட்ட அறிக்கைகளினூடாக விபரங்கள் ஏற்கெனவே பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த வேளையிலும், LLRC ஏற்கனவே அதுகுறித்துக் கேள்வியுற்றிருந்த வேளையிலும் இச்சார்த்துதல்களுள் பல இருதரப்பினருக்கும் எதிராகச் செய்யப்பட்டதாகும்.

LLRC தனது இறுதி அறிக்கையில் பின்வரும் விடயத்தை ஏற்றுக்கொண்டது: "ஆணைக்குழு அதன்முன் சமர்ப்பிக்கப்பட்ட நேரடியான கூற்றுக்கள் மற்றும் பிரசுரிக்கப்பட்ட அறிக்கைகளின் ஒளியில் அது கையாண்ட ஒரு முக்கிய விடயம் விசேடமாக மோதலின் இறுதிக்கட்டமாகிய 2009 ஜனவரி முதல் மே வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சிவிலியன் மக்களின் மரணங்களின் அளவு ஆகும். அவ்வேளையில் ஊடக அறிக்கைகள் உள்ளிட்ட வகையில் பல்வேறு நபர்களது கூற்றுக்களின் முரண்பாடான தன்மையை நோக்கி ஆணைக்குழு இந்த விடயத்துக்கு மிகவும் உயர்ந்த மட்டத்திலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் போது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்த சார்த்துதல்கள், பலவந்தமாக ஆட்களைக் காணாமற் போகச்செய்தல், நீதிமுறைக்கப்பாற்பட்ட மரண தண்டனைகள், குற்றப்பத்திரம் கையளிக்கப்படாமல் நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டிருத்தல், சிவிலியன்கள் மீதான "ஷெல்" தாக்குதல், துப்பாக்கிச் சூடு மற்றும் அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்ட யுத்த சூனிய வலயங்கள் உள்ளிட்ட இடங்கள் மீதான தாக்குதல், வைத்தியசாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் மீதான "ஷெல்" வீச்சு போன்ற அரசுக்கு எதிரான முறைப்பாடுகள் LLRCயிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னுரிமையை வழங்கியது." அத்தோடு "நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றின்படியும், ஆணைக் குழுவுக்குக் கிடைக்கக்கூடிய ஏனைய தகவல்களின் பிரகாரமும் மோதலின் இறுதிக் கட்டத்தின்போது இடம்பெற்ற சிவிலியன் மரணங்கள் மிகக் கணிசமானவை என்பதும் தெளிவாகின்றது."

எவ்வாறாயினும், மிகவும் முக்கியமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையிலும் ஆணைக்குழு சிவிலியன் மரணங்கள் சம்பந்தமாகப் பாரதூரமாகச் சிந்தித்ததாகத் தோன்றவில்லை. இது விடயத்தில் LLRCக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளுள் அரசாங்கப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் (பிரதேச செயலகங்களிலிருந்து கிடைத்த ஆவணங்கள் மற்றும் ஓர் அரசாங்க அதிபரின் வாக்குமூலம்) ஒக்டோபர் 2008 முதல் 19 மே 2009 வரையான காலப்பகுதியில் 146,679 சிவிலியன்களுக்கும், 22 ஜனவரி முதல் 19 மே 2009 வரையான காலப்பகுதியில் 77,620 சிவிலியன்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. ஒக்டோபர் 2008 - மே 2009 காலப்பகுதியில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சென்ற மக்களின் எண்ணிக்கை 282,380 ஆகும். செப்டம்பர் 2008 - ஒக்டோபர் 2008 ஆரம்பத்தில் இருந்த ஜனத்தொகை 429,059 ஆகும். 22 ஜனவரி 2009 இல் ஜனத்தொகை 360,000 ஆகும்.

இன்னுமோர் உதாரணம், 2009 இல் வன்னியில் இருந்த ஜனத்தொகைப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமாகக் கொழும்பிலிருந்த அரசாங்க அதிகாரிகள் கூறிய மோசமான பொய்கள் குறித்த சான்றுகளைப் பரிசீலனை செய்வதற்கு LLRC மறுப்புத் தெரிவித்தமையாகும். இந்தப் புள்ளிவிபரங்கள் அரசாங்கம் இவர்களுக்குப் போதிய உணவு, மருந்துப் பொருட்கள், மற்றும் ஏனைய அத்தியாவசிய உதவிகளை அனுப்பிவைக்காமை சம்பந்தமாக அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துபவையாக உள்ளன. 2009 ஜனவரி 30 ஆம் திகதி அரசாங்கம் யுத்த வலயத்தில் உள்ள மக்களின் சனத்தொகை 75,000 - 100,000 எனத் தெரிவித்தது. மீண்டும் 2009 பெப்ரவரி 26 ஆம் திகதி அரசாங்கம் யுத்த வலயத்திலுள்ள மக்களின் எண்ணிக்கை 70,000 என்று கூறியது. அதன் பின்னர் 202,000 க்கு மேற்பட்ட மக்கள் யுத்த வலயத்திலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்துள்ளனரென்று ஓர் அரசாங்க அறிக்கை தெரிவித்தது.

5.3 யுத்தத்துக்குப் பின்னரான கரிசனை விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு விடயங்களின் அடிப்படையில் ஆணைக்குழு அதன் அறிக்கை பிரசுரிக்கப்பட்ட 2011 நவம்பர் காலப்பகுதி வரை நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட, யுத்தத்துக்குப் பிந்திய காலம் சம்பந்தமான கரிசனை விடயங்களுக்குக் கணிசமான கவனத்தைச் செலுத்தியது. அது சில முக்கியமான பிரச்சினைகளை இனங்கண்டு, யுத்தத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் இடம்பெற்ற தீவிரமான மீறல்கள் மற்றும் நல்லிணக்கத்துக்குத் தடையான நடைமுறைகள் சம்பந்தமான சில ஆக்கபூர்வமான பரிந்துரைகளைச் செய்துள்ளது. முக்கியமான பரிந்துரைகளுள் ஒன்று, வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைத்து அங்கு சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநாட்டுவதாகும்.

5.4 நல்லாட்சிமுறையும், சட்டத்தின் ஆட்சியும்:

LLRC இனப்பிரச்சினை மற்றும் யுத்தம் தொடர்பிலான விவகாரங்களைக் கையாளுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தவேளையிலும், அது நல்லாட்சிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பிலான பரந்த பிரச்சினைகளையும் கையாண்டது. செய்யப்பட்ட முக்கிய பரிந்துரைகளுள் சட்ட வரைபுகள் குறித்த நீதிமுறை மீளாய்வுக்குக் கூடிய காலம் ஒதுக்குதல், தகவல் உரிமைச் சட்டம், ஆயுதப்படைகளின் விடயங்களைக் கையாளும் நிறுவனங்களிலிருந்து பொலிஸ் திணைக்களத்தைப் பிரித்தல், தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல், காணாமற்போதல் சம்பவங்களைக் குற்றவியற் படுத்துதல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் தண்டனைப் பயமின்மைக்குத் தீர்வு காணுதல் என்பவையும் உள்ளடங்குகின்றன.

## 6. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்:

2010 செப்டம்பர் 13 ஆம் திகதி LLRC இடைக்கால பரிந்துரைகளைச் செய்து, "இந்த விடயங்களிலான உடனடி நடவடிக்கை மோதலினால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி, அவர்கள் மத்தியில் ஓர் நம்பிக்கையுணர்வை ஏற்படுத்தி, நல்லிணக்கச் செயல்முறைக்கும் ஓர் உத்வேகத்தை வழங்கும்" என்றும் தெரிவித்தது. எவ்வாறாயினும், இடைக்காலப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாததோடு, அரசாங்கம் இந்த இடைக்கால பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதது குறித்து LLRC தனது கவலையையும் வெளியிட்டது.

இப்பொழுது LLRC இறுதி அறிக்கை ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்துவிட்டன. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது ஒருபுறமிருக்க, இன்றுவரை எந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும், அவை எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும், நடைமுறையாக்கத்துக்குப் பொறுப்பானவர் யார், இவை எவ்வாறு கண்காணிக்கப்படும் என்பவற்றைக் குறிப்பிடும் வகையில் எவ்விதமான செயற்திட்டத்தையும் வெளியிடவில்லை. அரசாங்கம் எந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு விரும்பவில்லை என்பது சம்பந்தமாகவும் எதுவித பிரகடனமும் இல்லை. எதிர்க்கட்சிகள், சிவில் சமூகம், தொழில்சார் நிபுணர்கள், மதத் தலைவர்கள் என்போர் LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் எவ்வாறு சம்பந்தமுறுவர் என்பது சம்பந்தமாகவும் எவ்விதமான குறித்துரைப்பான தகவலும் வழங்கப்படவில்லை.

### 7. LLRC க்குப் பிந்திய காட்சி நிலையும், கண்ணோட்டங்களும்:

அரசாங்கம் LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமான ஈடுபாடெதனையும் காட்டாத நிலையில், இப்பொழுது இடம்பெறும் சில சம்பவங்கள் அரசாங்கம் LLRCயின் தேடல் முடிவுகளையும், பரிந்துரைகளையும் பாரதூரமாகக் கொள்ளவில்லை என்பதைக் காட்டுவது போலத் தோன்றுகின்றது. LLRCயின் ஓர் எளிமையான, ஆயினும் முக்கியமான பரிந்துரை தேசிய கீதத்தை இரு மொழிகளிலும் இசைப்பதாகும். ஆயினும், LLRCயின் அறிக்கைக்குப் பின்னர் இடம்பெற்ற முதலாவது தேசிய தினக் கொண்டாட்டத்தில் தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் பாடப்பட்டது. யுத்தத்தில் கொல்லப்பட்டோரைத் தேசிய தினத்தில் நினைவுகூரும் வகையில் சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பரிந்துரையும் உதாசீனம் செய்யப்பட்டது. மறுபுறத்தில் மே 2012 இல் இடம்பெற்ற போர் முடிவின் மூன்றாவது ஆண்டு நினைவுக் கொண்டாட்டங்களின் போது, யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவுகூர்ந்து அவர்களுக்காகப் பிரார்த்திக்கும் நிகழ்வுகளை வடக்கில் ஏற்பாடு செய்திருந்த கத்தோலிக்கக் குருமார் உள்ளிட்டவர்கள் மீது இராணுவம் மிரட்டல்களை மேற்கொள்ள முயற்சி செய்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவத் தலைவர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். LLRC அறிக்கை நடமாட்ட சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்திய போதிலும், வடக்கில் மக்களின் மதச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தி, கிரமமான மத ஆராதனைகளை இரத்துச் செய்து, தேவாலயங்களிலும், கோவில்களிலும் விளக்குகளை அணைத்து, மணிகள் ஒலிப்பதை நிறுத்துமாறு இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். LLRC பலவந்தமாக ஆட்கள் காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பில் கரிசனைகளை வெளியிட்டு, இவ்விடயத்தில் பெருமளவிலான பரிந்துரைகளைச் செய்திருந்த போதிலும், நவம்பர் 2011 - மார்ச் 2012 காலப்பகுதியில் (கடத்தல் முயற்சிகள் உள்ளிட்டவகையில்) 45 கடத்தல் சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. LLRC ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்துக் கவலை தெரிவித்து, ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய போதிலும், ஊடகவியலாளர்களும், மனித உரிமைப் பாதுகாவலர்களும் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு, ஏளனப்படுத்தப்பட்டு, மிரட்டப்பட்டு, கைது செய்யப்படுவதோடு, கூடுதலான இணையதளங்கள் நிறைவேற்றுத் துறையினரால் முடக்கப்படுகின்றன.

### 8. ஜெனீவா தீர்மானமும், LLRC யும்:

மீண்டும் மீண்டும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் மீறப்பட்டமை சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சார்த்துதல்கள் மேற்கொள்ளப்பட்டு, ஒரு சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமென்று கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசாங்கம்

> இப்பொழுது LLRC இறுதி அறிக்கை ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்துவிட்டன. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது ஒருபுறமிருக்க, இன்றுவரை எந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும், அவை எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும், நடைமுறையாக்கத்துக்குப் பொறுப்பானவையாக, இவை எவ்வாறு கண்காணிக்கப்படும் என்பவற்றைக் குறிப்பிடும் வகையில் எவ்விதமான செயற்திட்டத்தையும் வெளியிடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

LLRCயின் ஓர் எளிமையான, ஆயினும் முக்கியமான பரிந்துரை தேசிய கீதத்தை இரு மொழிகளிலும் இசைப்பதாகும். ஆயினும், LLRCயின் அறிக்கைக்குப் பின்னர் இடம்பெற்ற முதலாவது தேசிய தினக் கொண்டாட்டத்தில் தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் பாடப்பட்டது. யுத்தத்தில் கொல்லப்பட்டோரைத் தேசிய தினத்தில் நினைவுகூரும் வகையில் சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பரிந்துரையும் உதாசீனம் செய்யப்பட்டது.

"

வழங்கிய பதில் "LLRC அறிக்கை வரட்டும்" என்பதாகும். ஆகவே, 2012 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19வது அமர்வில் LLRCமீது கவனம் செலுத்தி இலங்கை சம்பந்தமான ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டமை ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல. இத்தீர்மானம் LLRC யின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை வரவேற்றதோடு, நல்லிணக்கத்துக்கான சாத்திய வளங்களையும் வரவேற்று, சர்வதேசச் சட்டம் மீறப்பட்டமை குறித்த சார்த்துதல்கள் சம்பந்தமான வகைப்பொறுப்புப் பிரச்சினையைக் கையாளமுடியாமை சம்பந்தமாக வருத்தம் தெரிவித்தது. இலங்கை அரசாங்கம் LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்றும், LLRC பரிந்துரைகளை அது எவ்வாறு நடைமுறைப்படுத்தவுள்ளது என்பது சம்பந்தமான செயற்திட்டமொன்றைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும், LLRC கையாளாத சர்வதேசச் சட்டத்தின் மீறல்களை எவ்வாறு கையாளவுள்ளது என்பது சம்பந்தமாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் தீர்மானம் கோரிக்கை விடுத்தது. தனிநாடு ஒன்றுக்கோ அல்லது LTTE அமைப்புக்கு அனுதாபம் வேண்டியோ எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை. பொருளாதாரத் தடைகள், பிரயாண மட்டுப்பாடுகள், சர்வதேச விசாரணை அல்லது உண்மையறியும் பணிக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புதல், விசேட அறிக்கையாளர் ஒருவரை நியமித்தல் அல்லது ஐ.நா. மனித உரிமை அலுவலகம் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துதல் சம்பந்தமான எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை.

2012 மார்ச்சில் இடம்பெற்ற தீர்மானத்தின் ஒரு முக்கியமான அம்சம் இந்தியா மற்றும் பல ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் இலங்கை சம்பந்தமாக 2009 இல் மேற்கொண்ட நிலைப்பாட்டுக்கு ஒப்பீடாகத் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமையாகும். 2009 இல் மனித உரிமைகள் பேரவையின் ஒரு விசேட அமர்வில் இலங்கை சம்பந்தமான தீர்மானத்தில் 29 நாடுகள் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்தன" 12 நாடுகள் அதற்கெதிராக வாக்களித்தன. 2012 இல் இலங்கை குறித்த தீர்மானத்தின்போது இலங்கை அரசாங்கத்துக்கான ஆதரவு அனேகமாக அரைப்பங்காக வீழ்ச்சியுற்றுள்ளது. 15 நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாக வாக்களித்தன. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியது. அவை 12 இல் இருந்து 24 ஆக அதிகரித்தன. இவற்றுள் அரைவாசித் தேசங்கள் மேற்கு நாடுகளைச் சேராதவையாகும்.

இந்தியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா உள்ளிட்ட வகையிலான சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் வகைப்பொறுப்புப் பிரச்சினைகள், தொடரும் மீறல்கள், மாற்றுக் கருத்தை அடக்குதல் மற்றும் பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு உள்ளிட்ட வகையில் நல்லிணக்கத்தை நோக்கிச் செல்வதில் பொதுவான முன்னேற்றம் இல்லாமை ஆகிய விடயங்களைக் கையாளுவதில் இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலின்மை அல்லது விருப்பின்மைகுறித்துப் பொறுமையிழந்து வருவது தெளிவாக உள்ளது.

## 9. LLRC யும், திருச்சபைகளும்:

LLRC விசாரணைகளின் போது பல திருச்சபைத் தலைவர்கள் மோதலின் அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காணப்படவேண்டிய தேவை, யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான சார்த்துதல்களை விசாரித்தல், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சிமுறை போன்ற பிரச்சினைகளைக் குறிப்பிட்டுக் கணிசமானளவு சாட்சியங்களை அளித்துள்ளனர். காணாமற்போன மதகுருமார்களின் குறித்துரைப்பான விடய நிகழ்வுகள், கொல்லப்பட்ட மதகுருமாரின் விடயங்கள், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட திருச்சபை நிலங்கள் போன்ற விடயங்களும் LLRCயின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. திருச்சபைக் குழுக்களின் சமர்ப்பணங்களுள் தனிப்பட்ட மதகுருமாரின் சமர்ப்பணங்கள், மன்னார் கத்தோலிக்க ஆதீனம், யாழ்ப்பாண பொதுநிலையாளர் மன்றம், இலங்கைத் திருச்சபை, தேசிய திருச்சபை மன்றம் மற்றும் கத்தோலிக்கப் பேராயர்கள் மாநாடு என்பவற்றால் செய்யப்பட்ட மேலும் விதி முறையான சமர்ப்பணங்கள் என்பனவும் உள்ளடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் ஆதீனத்தால் செய்யப்பட்ட சமர்ப்பணம் விவரமானதாகவும் பல பின்னிணைப்புகளைக் கொண்டதாகவும், கொல்லப்பட்ட, காணாமற்போன மற்றும் தடுத்துவைக்கப்பட்ட சுமார் 500 விடய நிகழ்வுகளைக் குறிப்பிடுவதாகவும் அமைந்திருந்ததுடன், போரின் கடைசி 8 மாத காலப்பகுதியில் மர்மமான முறையில் இல்லாமற்போன 146,679 பேர் சம்பந்தமான ஆவண அடிப்படையிலான சான்றுகளையும் வழங்கியது.

மன்னார் மாவட்டம் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுள் ஒன்றாகும். LLRCயின் விசாரணைகள் மன்னாரில் இடம்பெறுவது சந்தேகமாக இருந்த வேளையில், மன்னார் ஆயர் முன்முயற்சி மேற்கொண்டு, LLRC தனது விசாரணைகளை மன்னாரிலும் மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். இதன்பேரில் மன்னாரில் இரண்டு தினங்களாக 3 விசாரணை அமர்வுகள் இடம்பெற்றன. திருச்சபை LLRC விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்பதுகுறித்து மக்களுக்கு அறிவித்ததோடு, முறைப்பாட்டுப் படிவங்களை நேரகாலத்தோடு புகைப்படப் பிரதி செய்து வழங்கி, சமர்ப்பணங்களைச் செய்யுமாறு மக்களை ஊக்குவித்தது.

LLRC அறிக்கை முடிவாக்கப்பட்ட பின்னர் திருச்சபைத் தலைவர்கள் அதன் பரிந்துரைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று பகிரங்கமாக வலியுறுத்தினர். நாடு முழுவதும் பல்வேறு திருச்சபைக் குழுக்கள் மதகுருமாருக்கும், பொதுநிலையாளர்களுக்கும், கிறிஸ்தவர் அல்லாதோருக்கும் LLRC குறித்த பெரும் எண்ணிக்கையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

எவ்வாறாயினும், அனேகமான திருச்சபைத் தலைவர்கள் LLRC அறிக்கையை விமர்சன ரீதியாக ஆய்வு செய்யவும், விசேடமாக உண்மையைக் கூறுதல் மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றைக் கையாள்வதில் அதிலுள்ள குறைபாடுகள், 8 மாதங்கள் கழிந்த நிலையிலும் அறிக்கை சிங்களத்திலும், தமிழிலும் கிடைக்காமை, பரிந்துரைகள் சம்பந்தமான அறிவீனம், அவற்றை நடைமுறைக்கிடாமை மற்றும் மோசமான மீறல்கள் என்பவை சம்பந்தமாக நோக்கத் தவறிவிட்டனர் போலத் தோன்றுகின்றது. இது விடயத்தில் மன்னார் மாவட்டத்தின் கத்தோலிக்க ஆயர் மற்றும் ஓய்வுபெற்ற இரண்டு அங்கிலிக்கன் ஆயர்மார் குறிப்பிடத்தக்க புறநடைகளாக உள்ளனர். இவர்கள் ஏனைய பல மதகுருமார்களுடனும், பொதுநிலையாளர்களுடனும் இணைந்து பகிரங்கமாக இவற்றுட் சிலவற்றைச் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை.

வடக்கிலுள்ள தமிழ் மதகுரு ஒருவர் ஆட்கள் காணாமற்போதல்கள் குறித்து LLRCக்கு சாட்சியமளித்த மறுதினம் அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதும், மன்னார் ஆயர் LLRCக்குத் தமது சமர்ப்பணங்களை வழங்கி 16 மாதங்கள் கழிந்தநிலையில் அவர் இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் 2 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக விசாரணை செய்யப்பட்டதும் முக்கியமான சம்பவங்களாகும். உயர்மட்டத் திருச்சபைத் தலைவர்கள் LLRC அறிக்கைக்குப் பிரதிவிளைவு காண்பிக்கும் வகையில் இந்த விடயங்களுக்குக் குறிப்பிடத்தக்க மட்டத்தில் எவ்வித கவலையையும் வெளிப்படுத்தவில்லை.

ஆக்கபூர்வமான தேடல் முடிவுகள், பரிந்துரைப்புகள் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான அழைப்பு என்பவற்றை வரவேற்கும் அதேவேளையில் திருச்சபைகளும் LLRC கவனம் செலுத்தாத உண்மையைக் கூறுதல் மற்றும் வகைப்பொறுப்பு போன்ற விடயப்பரப்புகளில் சிவில் சமூகத்துடனும், அரசியல் எதிர்க்கட்சிகளுடனும், தொழில்சார் நிபுணர்களுடனும் மற்றும் சர்வதேச சமூகத்துடனும் ஒன்றிணைந்து விடயங்களை ஆய்வு செய்வது மிகவும் தீர்மானகரமானதாகும். திருச்சபை பரிந்துரைப்புகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பூரண அறிக்கையும், அதன் பின்னிணைப்புகளும் சிங்களத்திலும், தமிழிலும் அனைவருக்கும் வழங்கப்படுதல் குறித்த செயற்றிட்டத்துக்காக மேலும் தீவிரமாக வலியுறுத்துவது அவசியமாகும்.

" எவ்வாறாயினும், அனேகமான திருச்சபைத் தலைவர்கள் LLRC அறிக்கையை விமர்சன ரீதியாக ஆய்வு செய்யவும், விசேடமாக உண்மையைக் கூறுதல் மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றைக் கையாள்வதில் அதிலுள்ள குறைபாடுகள், 8 மாதங்கள் கழிந்த நிலையிலும் அறிக்கை சிங்களத்திலும், தமிழிலும் கிடைக்காமை, பரிந்துரைகள் சம்பந்தமான அறிவீனம், அவற்றை நடைமுறைக்கிடாமை மற்றும் மோசமான மீறல்கள் என்பவை சம்பந்தமாக நோக்கத் தவறிவிட்டனர் போலத் தோன்றுகின்றது. "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபை முதல்வரும் அமைச்சருமான திரு. நிமல் சிரிபால டி சில்வா

# LLRC பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அரசுக்கு தெளிவான மார்க்கம் உண்டு

கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ வெளிநாட்டு அமைச்சர் நாட்டில் இல்லாத போதும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க சமர்ப்பித்த விடயம் தொடர்பாக, ஒரு பூரணமான பிரகடனத்தை வெளிநாட்டு அமைச்சர் முன்வைத்துள்ளார். அதனை நான் சமர்ப்பிக்கின்றேன்.

நிலையியல் கட்டளைச் சட்டம் 23(2) க்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுர திஸாநாயக்க அவர்கள் முன்வைத்த பிரச்சினை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்பட்டுள்ளது என நான் ஆரம்பத்திலேயே கூறி வைக்க விரும்புகிறேன்.

கௌரவ நிமல் சிரிபால டி சில்வா அவர்கள் :

உள்நாட்டுப் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துள்ளது என நான் இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இது எமது நிரந்தரமான நிலைப்பாடாகும். எமது தேசிய பிரச்சினைகளுக்கு இடையீடு செய்யும் எந்தவொரு சர்வதேச நடைமுறைக்கும் இலங்கை தனது கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்துள்ளது. மனித உரிமைகள் பேரவை தனது 19ஆவது அமர்வின் போது, அமெரிக்கா முன் வைத்த தீர்மானம் தொடர்பாக இலங்கைக்கு ஆதரவைத் தேடி பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், முழுமையாக உள்நாட்டு பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினரின் தண்டனை வழங்கும் வழிமுறையை ஏற்றுக்கொள்வதை விட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நட்டம் அடைவது புத்திசாலித் தனமானது என்பது இலங்கையின் அபிமானத்தைக் காக்கும் தீர்மானமாக அமைந்தது.

> சில பரிந்துரைகள் பாராளுமன்றத்தின் விசேடத் தெரிவுக் குழுக்கள் மூலமும் சில பரிந்துரைகள் அவற்றிற்கு ஏற்ற நிறுவனங்கள் மூலமும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவு. அதே சமயம் மே தகு ஜனாதிபதியினதும் செயலாளரினதும் கண்காணிப்பின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினூடாகச் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் இலங்கை எதிர்கொண்ட எதிர்ப்பு அலைகளின் அளவை உற்று நோக்குகையில், இறுதிப் பெறுபேறுகள் மூலம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு முழுமையாக பிளவுபட்ட நிலையை கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதுவும் இலங்கைக்குச் சாதகமாகவே அமைந்தது. அது இலங்கை மக்களின் சுய கௌரவத்தை பாதுகாப்பதற்கான வெறுமனே ஒரு வாக்குமூலம். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும். 2012 மார்ச் 03ம் வாரத்தில் ஐ.நா மனித உரிமைப் பேரவை மேற்படி தீர்மானத்தை அங்கீகரித்த பின்பு இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் வொஷிங்டனுக்கு அழைக்கப்பட்டார் என கௌரவ அநுர திஸாநாயக்க பா.உ குறிப்பிட்டது முற்றிலும் தவறானது. 2012 ஜனவரி மாதம் இறுதி வாரத்திலேயே இத்தகைய ஓர் அழைப்பு விடுக்கப்பட்டது. அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை, கட்டளையே விடுக்கப்பட்டது என கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது முற்றிலும் தவ-றானது. இது ஏன் என்று எமக்குப் புரியவில்லை. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சருக்கு விடுத்த அழைப்பு பின்வருமாறு:

"எமது சிந்தனைகளுக்கு வழிகாட்டுமுகமாக நல்லிணக்கம், வகைப்பொறுப்புக்கூறல் வடமாகாணத்தின் தேர்தல்கள் என்பன பற்றியும் உங்களது திட்டங்களைப் பற்றி மேலும் கலந்துரையாடுவதற்காக 2012 மார்ச் மாதத்தில் வொஷிங்டன் வருமாறு அழைப்பு விடுக்க விரும்புகின்றேன். அறிஞர் குழாமையும் எமது காங்கிரஸ் சபை உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்வதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பமும் இப்பயணத்தின் போது உங்களுக்கு கிடைக்கும்."

இந்த சொற்பதங்கள் மூலம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் விடுத்தது கட்டளையா அல்லது ஒரு வேண்டுகோளா என்பது உங்களுக்குப் புரியும்.

கௌரவ உறுப்பினர் அறிவது போல அரசாங்கத்தின் பங்காளர்களாகிய ஏனைய கட்சிகளின் அவதானிப்புக்களை உறுதி செய்துகொள்வது அரசாங்கத்தின் பிரவேசமாகும். அமைச்சர் அவர்கள் வொஷிங்டனுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் எமது அரசின் பங்காளிக் கட்சிகளின் சகல நிலைப்பாடுகளையும் நாம் அறிந்திருக்கவில்லை. சில நிலைப்பாடுகள் தயாரித்த வண்ணம் இருந்தன. எனவே ஒரு நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய முழுமையான விடயங்களும் உள்ளடக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் அன்று இருக்கவில்லை. நடவடிக்கைத் திட்டம் உள்ளிட்ட அந்தரங்கமான ஓர் ஆவணம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்கு 2012 மே 18ம் திகதி நாம் சந்தித்த வேளையில் வழங்கப்பட்டிருந்தது எனக் கூறுவது முழுமையான புனைகதையாகும். கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அரசின் நடவடிக்கைத் திட்டங்களும் பற்றிய மிகவும் பிரபலமான கருத்துக்களை வெளிநாட்டு அமைச்சர் முன்வைத்தார்" என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்டி அம்மையார் தனது அறிக்கையில் குறிப்பிட்டதன் மூலம் இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அவர் பயன்படுத்திய சொற்பதங்கள் "பிரவேசம்" என்ற சொற்பதத்தையிட்டு இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். எனவே, நடவடிக்கைத் திட்டம் ஒன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் குறிப்பிடவில்லை. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்கு விளக்கும் போது 285 பரிந்துரைகளும் ஆலோசனைகளும்




ஜெனீவாவில் இலங்கை எதிர்கொண்ட எதிர்ப்பு அலைகளின் அளவை உற்று நோக்குகையில், இறுதிப் பெறுபேறுகள் மூலம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு முழுமையாக பிளவுபட்ட நிலையை கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதுவும் இலங்கைக்குச் சாதகமாகவே அமைந்தது. அது இலங்கை மக்களின் சுய கௌரவத்தை பாதுகாப்பதற்கான வெறுமனே ஒரு வாக்குமூலம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜெனீவாவில் இலங்கை எதிர்நோக்கிய எதிர்ப்புகளை கவனத்திற்கொண்டு பார்க்கையில் அதன் இறுதி விளைவாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் ஒரு பிரிவு ஏற்பட்டது. அதுவும் இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடிய முறையில் அமைந்தது. இலங்கையர்களின் சுய கௌரவத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதம் செய்வதற்கு இன்று ஒரு மேலதிக வாக்கினாலேயே இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது"


மேற்படி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை பற்றி நாம் எடுத்துக் கூறினோம். 285 பரிந்துரைகளில் 135 மிக முக்கியமான பரிந்துரைகளாகும். நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவானதாகவும், அதைத் தயாரிக்கக் கூடிய வகையிலும் பின்வருமாறு 4 பிரிவுகளாக இவற்றை உள்ளடக்க முடியும்.

- தேசிய கொள்கை பற்றிய பரிந்துரைகள்
- பிரச்சினையின் இறுதிக்கட்டமும் அதன் ஏற்புடைய பரிந்துரைகளும்
- மனித உரிமைகளும் பாதுகாப்பு விடயங்களும் பற்றிய பரிந்துரைகள்
- மீள் குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் மனித நேய விடயங்கள் பற்றிய பரிந்துரைகள்
- சில பரிந்துரைகள் பாராளுமன்றத்தின் விசேடத் தெரிவுக் குழுக்கள் மூலமும் சில பரிந்துரைகள் அவற்றிற்கு ஏற்ற நிறுவனங்கள் மூலமும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவு. அதே சமயம் மேதகு ஜனாதிபதியினதும் செயலாளரினதும் கண்காணிப்பின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினூடாகச் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளும் உண்டு. அதே சமயம் குறுகிய கால இடைக்கால நீண்டகால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பரிந்துரைகளும் உண்டு. அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முன்னுரிமைப்படுத்தல் ஊடாக கட்டமைப்பு ரீதியாக அவை செயற்படுத்தப்படும் எனவும். மேலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, பரிந்துரைகளை செயற்படுத்தும் போது இந்த நடைமுறையையே நாம் அனுசரிக்க வேண்டியுள்ளது.
- சர்வதேச சமூகம் ஆர்வத்தைக் காட்டும் ஏனைய உறுப்பினர்கள் தொடர்பாக நாம் பொதுவாகச் செய்வது போல இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இராஜாங்கச் செயலாளரை சந்தித்தது முதல் இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளையும் எமது வெளிநாட்டு அமைச்சர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் திருமதி. கிளின்டனுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.
- முன்னைய போராளிகளை சமூகமயமாக்கல், எஞ்சிய இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துதல், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், மிதி வெடிகளை அகற்றுதல், அவசரகாலச் சட்ட விதிகளை நீக்குதல், காணி உரிமைகளை மீளப் பெறுவது தொடர்பான நடவடிக்கைகள், வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துதல் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பன போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசியற் செயற்பாடுகள் என்ற விடயத்திற்குள் உள்ளடக்கப்படும்.

"ஜெனீவாவில் இலங்கை எதிர்நோக்கிய எதிர்ப்புகளை கவனத்திற்கொண்டு பார்க்கையில் அதன் இறுதி விளைவாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் ஒரு பிரிவு ஏற்பட்டது. அதுவும் இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடிய முறையில் அமைந்தது. இலங்கையர்களின் சுய கௌரவத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதம் செய்வதற்கு இன்று ஒரு மேலதிக வாக்கினாலேயே இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது"

"சில பரிந்துரைகள் பாராளுமன்றத்தின் விசேட தெரிவுக்குழுக்கள் மூலமும், சில பரிந்துரைகள் அவற்றிற்கே உரித்தான நிறுவனங்கள் மூலமும் செயற்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் மேதகு ஜனாதிபதியினதும், ஜனாதிபதிச் செயலாளரினதும் கண்காணிப்பின் கீழ் ஜனாதிபதிச் செயலகத்தால் அமுல்படுத்த வேண்டிய பரிந்துரைகளும் உண்டு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னாரில் LLRC ஆணைக்குழு சாட்சிகளைப் பதிவு செய்கிறது.

# இடைக்காலப் பரிந்துரைகளும் அதன் பின்னணியும்

> அரசு உட்பட அச்சு, மற்றும் இலக்ட்ரோனிக் ஊடகங்கள் இப்பரிந்துரைகள் பற்றி மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் செயற்படவில்லை. இன்றுவரை இறுதி அறிக்கையின் சிங்கள அல்லது தமிழ் மொழிபெயர்ப்புகள் இல்லாத ஒரு நிலையே இருக்கிறது. இது பற்றிய மிகத் துரதிர்ஷ்டவசமான நிலைமை என்னவென்றால் ஆணைக்குழுவின் இணைய தளம் கூட இப்பரிந்துரைகளை உள்ளடக்கவில்லை.



மஞ்சுள கஜநாயக்க

30 ஆண்டுகளாக இலங்கையின் தேசியப் பிரச்சினையின் ஓர் அங்கமாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு போர் நிகழ்ந்தது. இப்போர் 2009ம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்ததுடன் இனங்களுக்கிடையில் சக வாழ்வுடனான ஓர் இலங்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என LLRC ஆணைக்குழு இலங்கை அரசினால் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு நியமனம் பெற்று 6 மாதங்கள் கடந்த நிலையில் 2010 செப்டெம்பர் 13ம் திகதி இடைக்காலப் பரிந்துரைகள் (LLRC Interim Recommendations) வெளியிடப்பட்டன. இப்பரிந்துரைகள் ஐந்து முக்கிய விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருந்தது. அவையாவன:

1. தடுப்புக் காவலில் உள்ளோர்.
2. காணிப்பிரச்சினைகள்
3. சட்டமும் சமாதானமும்
4. நிர்வாக, மொழிப் பிரச்சினைகள்
5. சமூகப் பொருளாதார வாழ்வாதாரப் பிரச்சினைகள்

இடைக்காலப் பரிந்துரைகள் பற்றிய சாராம்சம்

- நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளை ஒவ்வொன்றாகத் தீர்ப்பதற்கு விசேட பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
- தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்
- மீண்டும் கைது செய்யப்படாமல் இருப்பதற்கு தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டோர் தொடர்பாக அவர்கள் விடுவிக்கப்பட்டமை பற்றிய சான்றிதழ் ஒன்று வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீதி விசாரணைகளில் ஏற்படும் தாமதங்களை நீக்க வேண்டும்
- தனியார் காணிப் பிணக்குகளை தீர்த்த பின் அரசு மீண்டும் அக்காணிகளை பயன்படுத்தாத வகையில் தெளிவான ஓர் கொள்கை பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.
- சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருக்கும் குழுக்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும். (இதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்)
- சாதாரண மக்கள் அதிகாரிகளோடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தமக்குப் புரியும் மொழியில் ஆவணங்களைப் பெறுவதற்கு துரிதமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- A9 பாதையில் சுதந்திரமாக நடமாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- சாதாரண சிவில் நிர்வாகத்திற்கான அரச பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரிடையே சரியான தொடர்பாடல் மற்றும் கூட்டிணைப்பு அமைதல் வேண்டும்.

**பொதுமக்களின் கவனம், அரசின் பிரதிபலிப்பு மற்றும் அதன் எதிர்காலம்**

இடைக்காலப் பரிந்துரைகளின் ஊடாக பரிந்துரை செய்யப்பட்ட விடயங்கள், அதன் பின்னர் வெளியான பூரண அறிக்கை (ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது) உரிய முறையில் செயற்படுத்துவதற்கான அடிப்படை பொறிமுறை அல்லது சுவிசேஷமான வாய்ப்புகளுக்கு ஏற்ப உரிய தரப்பினர் சரியாக அடையாளம் கண்டுள்ளனர். ஆணையாளர்களின் இந்நிலைப்பாடு அவ்வாறே இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. எனினும் பின்வரும் சுருக்கமான விடயங்கள் மூலம் இவ் இடைக்கால யோசனைகளுக்கு ஏற்பட்ட நிலைமை மற்றும் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது பற்றிய தாக்கங்கள் தொடர்பாக அனுமானிக்க முடியும்.

- இடைக்காலப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது பற்றியோ அவற்றிற்கு ஏற்புடைய பரிந்துரைகளை அமுல்படுத்தும் கால வரையரை பற்றியோ அரசு மௌனப் போக்கையே கடைப்பிடித்தது. (இறுதி அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் இடைக்காலப் பரிந்துரைகளை அரசு அமுல்படுத்தியிருக்க வேண்டும்.)
- அரசு உட்பட அச்சு, மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இப்பரிந்துரைகள் பற்றி மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் செயற்படவில்லை. இன்றுவரை இறுதி அறிக்கையின் சிங்கள அல்லது தமிழ் மொழிபெயர்ப்புகள் இல்லாத ஒரு நிலையே இருக்கிறது. இது பற்றிய மிகத் துரதிர்ஷ்டவசமான நிலைமை என்னவென்றால் ஆணைக்குழுவின் இணையத்தளம் (www. llrc.lk) கூட இப்பரிந்துரைகளை உள்ளடக்கவில்லை. இதற்கு ஏற்புடைய பின்னணி விடயங்களை உள்ளடக்கிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் Groundview இணையதளத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. (www. groundviews.org)
- சில பரிந்துரைகளை ஒரு சில நாட்களிலேயே அமுல்படுத்த முடியும். (உ- ம்) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியலை பகிரங்கப்படுத்துதல் இத்தகையதொன்றை அமுல்படுத்துவதற்குக் கூட தயார் இல்லாத நிலையையே அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.
- இப்பரிந்துரைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பினும் இதற்கு ஏற்புடைய பாராளுமன்ற விவாதத்தை நடத்துவதற்கு அரசாங்கமோ எதிர்க்கட்சியோ பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்பார்க்கும் ஆர்வத்திற்குப் பதிலாக அக்கறையின்மையே இங்கு காணக்கூடியதாக இருக்கிறது.
- LLRC அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அனைத்து நிறுவனங்களுக்குமான ஆலோசனை செயற்குழு ஒன்று முன்னைநாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிசின் தலைமையில் நியமிக்கப்பட்டது. ஆனால் அது வெளியிட்ட முன்னேற்ற அறிக்கை அனேக பங்காளர்களின் விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது.

**LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசியத் திட்டம்**

9.250 பொலிஸ் நிலையங்களில் இருமொழித்தேர்ச்சி கொண்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை பொலிஸ் நிலைய உரைபெயர்ப்பாளராக உபயோகிப்பதற்கான ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை இட்டு மீண்டும் கவனத்தை ஈர்க்க விரும்புகிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவினால் நியமிக்கப்பட்ட இலங்கையின் வகைப்பொறுப்பை ஆய்வு செய்வதற்கான அறிக்கை இடைக்காலப் பரிந்துரைகளினூடாக கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டிய எந்தவொரு விடயமும் இதில் உள்ளடக்கப்படவில்லை. ஒட்டுமொத்தமாக இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும்.

LLRC அறிக்கை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிபலிப்புக்கள் (பக்கம் 25) வடக்கு கிழக்கு மாகாணங்களில் இயல்பு நிலையை மீள உருவாக்குவதற்கு அவசியமான ஆகக் குறைந்த நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கூட அரசு தயாரில்லை என்பதை இவ் இடைக்காலப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசு பின்னிற்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ஓராண்டிற்கு முன்னர் தயாரித்த இவ்விடைக்காலப் பரிந்துரைகளை வேண்டுமென்றே புறக்கணித்தல் இறுதி அறிக்கைக்கு நடக்கவிருப்பது பற்றிய சிறந்த குறிகாட்டியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு தொடர்பாக**

# அரச அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள்

2012 பெப்ரவரி 19

**ஈ.வா. வனசுந்தர - சட்டமா அதிபர்**



கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு உண்மையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் ஆணைக்குழுவாகும். சத்தியம் செய்து வாக்களிப்பதன் மூலம் இவ்வாணைக்குழு முன்னே அவர்கள் சாட்சி கூறவில்லை. இவ்வறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் பொலிஸார் இவ்வறிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்து மேலதிக நடவடிக்கையின் பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையை ஆராய்ந்த பின்னர் அது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கையிடுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியிருந்தார். நாம் அவ்வறிக்கையை பகுப்பாய்வு செய்து ஜனாதிபதிக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தோம். அதனடிப்படையில் அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

"சண்டே டைம்ஸ்"

2012 பெப்ரவரி 06

**கோத்தாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர்**



வட மாகாணம் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரிக்கின்றார். படையினர் அத்தியாவசியமாகத் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகவே படையினர் அங்கு உள்ளனர். நாட்டின் ஏனைய 22 மாகாணங்களிலும் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார். இது கட்டாய கடமையாகும். தற்போது இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளது. படையினர் ஓய்வு பெற்றமையினால் ஏற்பட்ட வெற்றிடங்கள் கூட நிரப்பப்படவில்லை. போரை வெற்றிகண்ட பின்னர் மீண்டும் அவர்களை அப்பிரதேசங்களில் முழுமையாக ஈடுபடுத்த முடியாது. எவ்வாறாயினும் கடந்த கால வரலாறு மீள உருவாக்கப்படாமல் இருக்க அதனை உறுதிப்படுத்துவதற்கு போதிய படையினர் அப்பிரதேசங்களில் சேவையில் அமர்த்தப்பட வேண்டும்.

The Deccan Chronicle உடன் மேற்கொண்ட நேர்காணல் - The Island

2011 நவம்பர் 24

**மொஹான் பீரிஸ்**

முன்னைநாள் சட்டமா அதிபரும் தற்போதைய அமைச்சரவை விசேட ஆலோசகரும்



அரசாங்கம் பாரிய அளவில் உசிதமற்ற நடைமுறையையும் மரபுரிமைகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதென்பது நீதி, நல்லிணக்கம், வகைப்பொறுப்புடைமை பற்றிய சேவை ஆற்றுவதாகும் என கொ.ஃபீ அனான் அவர்களுடைய கூற்றை ஏற்பதாகும். கொ.ஃபீ அனான் அக்காலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக தேசிய ரீதியில் உருவாக்கிக் கொள்ளும் பொறிமுறையின் அவசியத்தை ஏற்றுக்கொண்டார். ஐக்கிய நாடுகள் தற்போது வகைப்பொறுப்பையும் நல்லிணக்கத்தையும் தேசிய ரீதியில் நெறிப்படுத்தும் உபாயங்களை எதிர்நோக்கியுள்ளது. இது அன்றைக்குப் பொருத்தமாக இருந்திருந்தால் இன்றைக்கும் அது பொருத்தமாகவே இருந்திருக்கும்.

நாம் ஆஜன்டீனாவிலும், தென் ஆபிரிக்காவிலும், கம்போடியாவிலும், சியராலியொன் தேசத்திலும் அனுபவங்களை பரிசீலனை செய்ய வேண்டும். வழக்குத் தொடர்வதன் மூலம் மாத்திரம் கடந்த காலக் காயங்களை குணப்படுத்த முடியாது என்பதை நாம் அறிவோம். நாடு இயல்பாகவே எதிர்நோக்கும் குற்றச்செயல்களை சமநிலைப்படுத்த வேண்டியுள்ளது. எனவே நிலைமாற்றத்திற்குரிய நீதியை நிறுவி நீதியையும் பயனுறுதிவாய்ந்த நீதியையும் ஒன்றிணைக்க வேண்டும்.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவோ அல்லது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாணையையும் ஒன்றிணைத்தல் வேண்டும். மக்கள் மத்தியில் சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கு என்னென்ன விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது என்பதையிட்டு நாம் எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். கடந்த காலத்தை நாம் நினைவுகூர வேண்டும். அண்மைக்கால வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

"Reconciliation: The way forward for post - conflict Sri Lnka" conference.

http: //www.dailymirror.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பற்றிய

# வெளிநாட்டுத் தலைவர்களின் கருத்துக்கள்



"இவ்வறிக்கை இலங்கையின் பாதுகாப்புப் படை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களிலிருந்து அவர்களை விடுவித்துள்ளது. ஊடகச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் மீறப்படுதல் போன்ற விடயங்களைப் பற்றி ஆணைக்குழுவின் நிலைப்பாட்டையும் பரிந்துரைகளையும் முன் வைத்துள்ளது. போர் இடம்பெற்ற போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் பற்றி பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிலவும் பிரச்சினைகளைப் பற்றி இலங்கையே நடவடிக்கை எடுத்தலும் முழுமையாக விடயங்களை எடுத்துக் கூறலும் சாலச் சிறந்தது."

**விக்டோரியா நூலண்ட்** - அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர்
மேற்கோள் 2011 டிசம்பர் 21 "மௌபிம" பத்திரிகை



"இவ்வறிக்கை இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான உதவுகரமாகும். இவ்வறிக்கையை வெளியிட்டமை குறித்து இந்திய அரசு தனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறது. பரிந்துரைகளைச் செயற்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள உறுதி மொழியையும் நாம் வரவேற்கின்றோம். இந்நடவடிக்கைகளின் போது ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இந்தியா தன்னை அர்ப்பணித்துள்ளது."

**இந்திய வெளிவிவகார அமைச்சு**
மேற்கோள் "டெய்லி நியூஸ்" 27-12-2011



"இலங்கை நீண்டகால நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக பயனுறுதிவாய்ந்த சாதகமான பரிந்துரைகளை கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. மேற்படி அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் துரிதமாக அமுலாக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்."

**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா**
2012-01-17 இல் இடம்பெற்ற இலங்கை விஜயத்தின் போது ஊடகவியலாளர்களுக்குக் கூறியது.
மேற்கோள் "தினமின" 18-01-2012



"இலங்கையின் மோதல் பற்றிய சகல துறைகளும் இவ்வறிக்கையில் பூரணமாக விளக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதாகும், சமாதானத்தை வலுப்படுத்துவதற்கும் இது ஏதுவாக அமையும் என நம்புகின்றோம். போருக்குப் பின்னரான சூழமைவில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் நாம் பாராட்டுகிறோம்"

**அலெக்ஸாண்டர் லூக்கர் செவிஷ**
சோவியத் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் மேற்கோள் "டெய்லி நிவ்ஸ்" 27-12-2011



"இலங்கை அரசாங்கம் தனது வகைப்பொறுப்புக் கூறும் செயற்பாட்டுடன் முன்னேறுகிறது என நாம் எதிர்பார்க்கின்றோம். இது நாட்டில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாகும். கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டமையையிட்டு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தனது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்."

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்**
மேற்கோள் ஜனாதிபதி இணையதளம் 18-12-2011



"இவ்வறிக்கையுடன் இலங்கை தனது நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். குறிப்பாக வகைப்பொறுப்புக் கூறும் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**கத்தரின் அஸ்ரன் - ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர்**
மேற்கோள் ஜனாதிபதி இணையதளம் 18-12-2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"இவ்வறிக்கை மூலம் இலங்கை அரசாங்கம் தனது வகைப்பொறுப்புக் கூறும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. அறிக்கை வெளிப்படைத் தன்மையாக அமைந்துள்ளதையிட்டு பாராட்டுகிறோம். இப்பரிந்துரைகளுக்கு அமைய நாட்டை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் உண்டு. இதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய பொதுநலவாய நாடுகள் தயாராக இருக்கின்றன."

**கமலேஷ் சர்மா** - பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம்
மேற்கோள் டெய்லி நிவுஸ் 22-12-2011



"இலங்கையின் பன்மைத்துவ மக்கள் மத்தியில் நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இவ்வறிக்கை உதவும். வடமாகாண மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முன்னைநாள் எல்.ரீ.ரீ. போராளிகளை சமூகமயமாக்கலுக்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை."

**இலங்கைக்கு விஜயம் செய்த கனேடிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு**
மேற்கோள் "டெய்லி நியூஸ்" 12-01-2012



"இவ்வறிக்கை இலங்கையை சரியான திசையில் வழிநடத்திய ஓர் நடவடிக்கையாகும். போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை விட உள்நாட்டு விசாரணை மிகவும் பொருத்தமானது. சர்வதேச விசாரணையின் மூலம் பிரச்சினை மேலும் உக்கிரமடையலாம். எனவே இவ்வறிக்கையை துரிதமாக செயற்படுத்த வேண்டும் என்பது எமது அபிலாஷையாகும்."

**ஸ்லோவேனியா அரசாங்கம் வெளியிட்டுள்ள ஓர் அறிவித்தல்**
மேற்கோள் தினமின 2012-01-14



"வகைப்பொறுப்புக் கூறுவதன் மூலமும் உண்மையான நல்லிணக்க செயற்பாட்டினூடாகவும் மாத்திரமே இலங்கையில் நிலைபேறான சமாதானத்தை அடைய முடியும். சர்வதேச சமூகம் இதற்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றது. அதே சமயம் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கும் இது ஓர் அடையாளச் சின்னமாகும். கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு பொறுப்புக் கூறுதல் இலங்கை அரசாங்கம் அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது."

**ஹிலரி கிளின்டன்** - அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் 22-03-2012
http://srilanka.usembassy.gov/st-22marchhtml



இத்தீர்மானம் கண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானம் அல்ல. உண்மையிலேயே இது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பங்களிப்பை ஏற்றுக்கொள்கிறது. ஆணைக்குழு பல்வேறு சாதகமான பரிந்துரைகளை இலங்கை அரசுக்கு முன் வைத்துள்ளது. எவ்வாறாயினும் மேற்படிப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நம்பகத் தன்மை வாய்ந்த நடவடிக்கைத் திட்டத்தை முன்வைக்கவில்லை. அதே சமயம் யுத்தத்தின் பெறுபேறுகளையிட்டு தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கிக்கொள்வதற்கு அவசியமான மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தேசிய நல்லிணக்கத்திற்கான அல்லது யுத்தத்தின் ஆரம்பம் முதல் தேசிய நல்லிணக்கத்தை சீராக்கிக்கொள்வதற்கு அவசியமான மேலதிக நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது எமது முடிவாகும். பல சர்வதேச தேசிய அவதானிப்பாளர்கள் இவ்வாறு கூறுகின்றனர். மனித உரிமைகள் பேரவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் நல்லிணக்கத்தையும் நிலைபேறான சமாதானத்தையும் மேம்படுத்த வேண்டும்."

**ஐலீன் செம்பர்லேன் டொனஹோ**
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமெரிக்கத் தூதுவர் 08-03-2012
http://geneva.usmission.gov/2012/03/09/action-by-hrc-can-help-promote-reconciliation-and-lasting-peace-in sri-lanka/



"அறிக்கை போருக்குப் பிந்திய நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு சிறந்த சாதகமான பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது என பிரித்தானிய அரசாங்கம் நம்புகிறது. இலங்கையின் முன்னேற்றத்தின் உண்மையான பரிசோதனை இப்பரிந்துரைகளை செயற்படுத்துவதாகும்... நாம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றோம். சில பரிந்துரைகளை ஒரு சில மாதங்களில் செயற்படுத்த முடியும். ஏனையவற்றை முழுமையாக அமுல்படுத்த சிறிது காலம் எடுக்கும். ஆனால் அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இறுதியில் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் வெற்றி அல்லது தோல்வி இப்பரிந்துரைகளை செயற்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

**அலிஸ்ரெயார் பர்ட்** - பிரித்தானியாவின் வெளிநாட்டு அமைச்சர்
http://www.fco.gov.uk/en/news/latest-news/?view=PressS&id=714679782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்தகால மனித உரிமை மீறல்கள் பற்றி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையுடன் கூடுதலாக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுக்கும் இலங்கை பற்றிய தீர்மானத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் பூரணமான ஒத்துழைப்பை வழங்குகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தொலைநோக்கு சட்டத்தின் ஆட்சியை மதிப்பதாகும். அதே சமயம் வகைப்பொறுப்புக்கும் தேசிய நல்லிணக்கத்திற்கும் நிலைபேறான சமாதானத்திற்கும் அத்தியாவசிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

**ஐரோப்பிய ஒன்றியம்** - 29-03-2012
http://www.eu-un.europa.eu/articles/en/article_12037_en.htm



மோதல்களைத் தீர்ப்பதற்கான சரியான மார்க்கம் சாதகமான கலந்துரையாடல்களாகும். ஐக்கிய அமெரிக்கா முன்வைத்த பிரேரணை மனித உரிமைகளை அரசியல் மயமாக்குவதாகும். இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் மனித உரிமைப் பேரவையின் பணிப்பாணைக்கு அப்பாற்பட்டவை. இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. தீர்மானத்தின் வரைபு இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்துள்ளது. அதே சமயம் ஐக்கிய நாடுகளின் கோட்பாடுகளை மீறியுள்ளது. சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு தேசிய நல்லிணக்க செயற்பாட்டை பூரணப்படுத்துவதற்கு போதிய கால அவகாசம் வழங்க வேண்டும். எனவே மேற்படி தீர்மானத்திற்கான வரைபை நிராகரிக்குமாறு மக்கள் சீனக் குடியரசு ஏனைய உறுப்பு நாடுகளிடம் கூறுகிறது.

**ஐக்கிய நாடுகளின் ஜெனீவா தூதுவர் குழுவின் சீனப் பிரதிநிதி,** 2012-03-22
http://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=12001&LangID=E



"மோதல்கள் இடம்பெற்று பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும் நிலைபேறான அபிவிருத்தியையும் நோக்கி திருப்திகரமானதான வளர்ச்சியை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை அணுகுவதற்கு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வழிமுறைக்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்வாறு சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் தாமாகவே மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். அதே சமயம் நாம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சிறப்பாகச் செயற்படுத்துவது எப்படி என்பது பற்றி எமது கவனத்தைச்செலுத்துகின்றோம். இம்முயற்சியை பாராட்டுகிறோம்."

**கலாநிதி சுரப்பொங் தொக்சக் தாயிகுல்**
தாய்லந்து நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் - 2012-02-27
http://www.thailandtoday.org/global-citizen/elibrary/speech/594



ஆணைக்குழு அறிக்கை பல்வேறு முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது... யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் குறிப்பாக சிவிலியன்களின் படுகொலை தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார் என்பதற்கான தெளிவான விடைகள் கிடைக்கவில்லை. இவ்விடயம் தொடர்பாக முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் நோர்வே கேட்டுக்கொள்கின்றது. ஆணைக்குழு அறிக்கையையிட்டு நோர்வே மகிழ்ச்சியடைகிறது.

**எரிக் சொல்ஹெயிம்**
நோர்வே நாட்டின் சுற்றாடல் சர்வதேச அபிவிருத்தி பற்றிய அமைச்சர்
http://www.norway.lk/News_and_events/News/Norway-pleased-to-see-that-Sri-Lanka-has-released-re-port/



விசேட பிரச்சினைகளையிட்டு மேலும் புலனாய்வு செய்ய வேண்டும் என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். வகைப்பொறுப்புக் கூறல் பற்றிய பிரச்சினைகளை பரந்துபட்ட முறையில் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்...

இத்தகைய குற்றச்சாட்டுக்களை விபரமாக அணுகுவதற்கு அறிக்கை தோல்வி கண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நாம் தொடர்ந்து இத்தகைய குற்றச்சாட்டுக்கள் பற்றி வெளிப்படைத் தன்மையுடனும் சுயாதீனமாகவும் புலனாய்வு செய்ய வேண்டும் என்று இலங்கைக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம்...

அதே சமயம் இலங்கை அரசாங்கம் தற்போது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையை ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான விளக்கமான நடவடிக்கைத் திட்டத்தையும் கால வரையறையையும் நிர்ணயம் செய்வது மிக முக்கியமாகும்.

**கெவின்**
அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் 2012-02-13
http://www.foreignminister.gov.au/release/2012/kr_mr_120213.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பகிரங்கப்படுத்தப்பட்ட இலங்கையின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மூலம் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றமையை அறிய முடிகிறது. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இறுதிக்கட்டத்தில் போர்க்குற்றங்களும் மனித இனத்திற்கு எதிராக ஏற்பட்ட குற்றச்செயல்களும் பற்றிய முழுமையான அணுகுமுறை குறைவாகவே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது...

அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டை எதுவித விமர்சனமும் இன்றி ஆணைக்குழு ஏற்றுள்ளமை இவ்வறிக்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக காணப்படும். பாரிய குறைபாடாகும்...

இவ்வாணைக்குழு அறிக்கை நடத்தை பற்றி விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமையே சுட்டிக்காட்டுகின்றது. அதே சமயம் சட்டத்தின் சிக்கல்களையும் எடுத்துக் கூறுகிறது. சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகளினதும் சர்வதேச சமூகத்தினதும் வளங்களையும் ஒத்துழைப்பையும் பூரணமாகப் பெற்று புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

**சர்வதேச மன்னிப்புச் சபை**
http://www.amnesty.org/en/for-media/press-releases/sri-lanka-report-falls-short-2011-12-16

சர்வதேச சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கான குழு (MRGI) இலங்கை அரசாங்கத்தின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை ஏற்றுக்கொள்கிறது. எனினும் 2009 இன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களுக்கு உரித்தான வகைப்பொறுப்புப் பற்றிய தீர்க்கமான பிரச்சினையையிட்டு அது தவறிவிட்டதை கண்டிக்கின்றோம்...

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் இது குறித்து விசாரணை செய்வதற்கு நியமித்த நிபுணர்கள் குழுவும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளையிட்டு உரிய முறையில் அக்கறை கொள்ளவில்லையென்றே MRGI கருதுகிறது. அதே சமயம் இவ்வறிக்கை அரசாங்க இராணுவம் மேற்கொண்ட சித்திரவதைகள், பாலியல் தொந்தரவுகள் உட்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களையும் கருத்திற்கொள்ளவில்லை... இச்சூழமைவில் சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளையிட்டு சர்வதேச சமூகம் கூடிய அக்கறை கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கின்றது.

**சிறுபான்மையினரின் உரிமைகளைப் பற்றிய சர்வதேச அமைப்பு** (MRGI)
http://www.minorityrights.org

மனித உரிமைகள் காவலர்கள் (Human Rights watch) இலங்கையின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை அரசாங்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளவில்லை. மரபு ரீதியான பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. இலங்கையின் சிவிலியன்களுக்கு எதிராக ஆயுதமேந்தியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக வகைப்பொறுப்புக் கூறத் தவறியுள்ளது...

2011-12-16ம் திகதி இலங்கை அரசாங்கத்தின் இணையதளத்தில் வெளியான 388 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் பாரதூரமான குறைபாடுகள் உண்டு. 2011 ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இம்மோதல் தொடர்பாக சர்வதேச புலனாய்வுப் பொறிமுறையும் அவசியம் சுட்டிக்காட்டப்படுகிறது.

**Human Rights watch** - 2011-12-16
http://www.hrw.org/news/2011/12/16/sri-lanka-report-fails-advance-accountability

International Crisis Group – (ICG) அறிக்கைக்கு அமைய இலங்கையில் பல தசாப்தங்களாக அரசியல் இம்சைகளுக்கும் சிவில் யுத்தத்திற்கும் ஏதுவான முக்கிய சம்பவங்கள் மற்றும் மனக்குறைகளை ஏற்றுக்கொள்வதோடு நிர்வாகம், காணிப்பிரச்சினை, அரசியல் தீர்வின் அவசியம் பற்றி கூருணர்வுடன் பரிந்துரைகளை முன்வைக்கிறது. ஆனால் அது ஒரு தீர்க்கமான கட்டத்தின் போது ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கையின் ஏனைய பங்காளர்கள் கோரியதற்கு அமைய சர்வதேச மனித நேயச் சட்டங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீனமான விசாரணையை மேற்கொள்ள அது தவறியுள்ளது. தற்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை ஊடாக 2012இல் சுயாதீனமான சர்வதேச விசாரணையை நடத்துதல் சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும். இத்தகைய விசாரணையை நடத்தாமல் சிவில் யுத்தத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களின் வகைப்பொறுப்பை அறிய முடியுமென நாம் எதிர்பார்க்க முடியாது. வகைப்பொறுப்பின்றி எல்லா இடங்களிலும் ஏற்பட்ட உரிமை மீறல்களின் இயல்பை முழுமையாக புரிந்துகொள்ளாவிட்டாலும் எதிர்காலத்தில் இத்தகைய மோதலுக்கான அடிப்படைகள் வளர்ச்சியடையலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாணை இருக்கவில்லை. ஆரம்பத்தில் 2002-02-21ம் திகதி முதல் 2009 மே 19ம் திகதி வரை நடைபெற்ற சம்பவங்களையிட்டு ஆட்சியாளர்கள் ஆணைக்குழுவை நெறிப்படுத்த முற்பட்டனர். ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை உத்தியோக பூர்வமான விபரங்களை எடுத்துக் கூறுகையில், ஆணைக்குழு முன் தோன்றிய "மேற்படி சாட்சிக்காரர்கள்" கூறியவாறு மிகக் கீழ்ப்படிந்த தன்மையுடன் அரசாங்கத்தின் கதையை மீள் சிருஷ்டித்துள்ளனர். பாதிப்புக்குள்ளான மக்கள் ஆணைக்குழு முன் வருகை தராமை ஒரு சுயாதீன அறிக்கையை முன்வைப்பதில் எதுவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. எனவே ஆணைக்குழு தொடர்பாக ஒட்டுமொத்த முயற்சி விசேடமாக ஐக்கிய நாடுகளின் முகவர் நிலையங்களும் வேறு வெளியார் நிறுவனங்களினதும் விமர்சனங்களுக்கு பதில் விமர்சனங்கள் கூறும் நகைச்சுவை நடிகர்களைப் போல அமைந்தது. எனவே இறுதி அறிக்கை நாம் எதிர்பார்த்தது போல் அமையவில்லை.

**International Crisis Group – (ICG)**
2011-12-22
http://www.crisisgroup.org
http://www.humanrights.asia

ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டிணைப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய சர்வதேச அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மிகத் தெளிவான பரிந்துரைகள் இலங்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இருக்கையில் இலங்கை அரசாங்கம் சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு எதிராக செயற்பட்டமை, ஊடகவியலாளர்களுக்கு எதிராக வன்முறை கலந்த சொற்பிரயோகங்களை உக்கிரமடையச் செய்வதை பல ஆண்டுகளாக நாம் காணக்கூடியதாக உள்ளது. தாம் அனுபவித்த கஷ்டங்களை வரையறுத்து சாதாரண நிலைமையை ஏற்படுத்தும் அவர்கள் அரசிடம் கூறுகின்றனர். அபிப்ராயங்களை கேள்விக்குட்படுத்தும் ஒரு சூழலை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அத்தகைய ஊடகங்கள் பற்றி LLRC அறிக்கை ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பையும் ஏனைய சர்வதேச அமைப்புக்களையும் ஊக்குவிக்கும்

2011-03-26
http://asiapacific.ifj.org/en/articles/sri-lankas-national-reconciliation-efforts-must-address-journalists-concerns


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பற்றிய

# அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள்

2012 பெப்ரவரி 04



**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ**

இப்பிரச்சினை தொடர்பாக அனைவரும் பொறுப்புக் கூற வேண்டுமென கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்பட்ட அனைவரும் இக்கூற்றையிட்டு சிந்திக்க வேண்டும். எனவே ஏற்கனவே இவ்வாணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நாம் அமுல்படுத்த ஆரம்பித்துள்ளோம். 2011 டிசம்பர் 17ம் திகதி நாம் இவ்வறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். அன்று முதல் இன்று வரை நாம் பல விடயங்களை அமுல்படுத்தியுள்ளோம்.
பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகளை கிராமிய மக்களுக்கு வழங்க வேண்டும்.

64வது சுதந்திர தின வைபவத்தின் போது அநுராதபுரியில் கூறியவை.

http://www.president.gov.lk/speech_New.php?Id=122

2012 பெப்ரவரி 10

**எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில்**



விக்கிரமசிங்க திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்ட காலவரையறையுடன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான விவரமான வரைபடம் ஒன்றை வெளியிடும் பாரதூரமான பொறுப்பு அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. அதே சமயம் ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்க ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு இதுவரை தோல்வி கண்டுள்ளமையை கவனத்திற்கொள்கிறது. எனவே எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அவற்றின் அவதானிப்புகள் மூலம் உடன்பட்டுள்ள அனைத்து பரிந்துரைகள் தொடர்பாக துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்த வேண்டும். அரசாங்கம் நாட்டின் ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் வலுப்படுத்த வேண்டும். அதே சமயம் அதிகாரத்தைப் பகிர்தல் சமத்துவம் மற்றும் அனைத்து பிரஜைகளின் உரிமைகள் தொடர்பான கௌரவத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சூழமைவை சிருஷ்டிப்பதற்கு முதல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாம் எல்லோரும் இது தொடர்பாக எமது கருத்துக்களை வெளிப்படுத்தும் அதேவேளை எம் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரம் உண்டு.

எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க 2012 பெப்ரவரி 10ம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்த கூற்று.

http://unp.lk/index.php?option=com

**தேசிய விடுதலை முன்னணி**



“ஆணைக்குழு அறிக்கை ஒன்றின் மூலம் கோரப்படும் அனைத்தையும் நாம் ஏற்க வேண்டும் என்பதல்ல அதே சமயம் மறுக்க வேண்டிய கடப்பாடும் இல்லை. நல்லவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தீங்கு விளைவிக்கும் விடயங்கள் இருப்பின் அவற்றை நாம் புறக்கணிக்க வேண்டும். சில ஆணைக்குழு அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவே இல்லை. LLRC அறிக்கையை ஜனாதிபதி பகிரங்கப்படுத்தியுள்ளார். அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பாகவும் இங்கு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த இந்த விடயங்கள் செய்யப்பட வேண்டும் என இங்கு பரிந்துரைகள் உள்ளன. சில பிரச்சினைகள் பற்றி எமக்கு உடன்பாடு இல்லை. சில விடயங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என பரிந்துரை கூறப்பட்டுள்ளது. சில விடயங்கள் தொடர்பாக நாங்கள் உடன்படவில்லை. ஆனால் ஒட்டுமொத்தமாக நாம் இவ் ஆணைக்குழு அறிக்கையை நிராகரிக்கவில்லை. சர்வதேச ரீதியாக எமது நட்பு நாடுகளுடன் உள்ள உறவுகளை உறுதிப்படுத்துவதும், நடுநிலை நாடுகளின் ஆதரவை வென்றெடுப்பதும் எமது எதிர்பார்ப்பாகும்”

நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு வசதிகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சர் **விமல் வீரவங்ச**

2011-12-18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வீ.பீ)**

30 ஆண்டுகள் நீடித்த பிரிவினைவாத யுத்தத்தில் ஏற்பட்ட சம்பவங்களை அல்லது பிரிவினைவாத போராட்டத்தினால் ஏற்பட்ட சமூக - பொருளாதார அரசியல் காரணிகளைக் கற்றறிந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நேர்மையான அபிலாஷைகள் கொண்டிராமல் யுத்தத்தின் இறுதியில் அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஏற்படும் அழுத்தத்திலிருந்து விடுபடும் நோக்கிலும் இது இடம்பெறுகிறது. 30 ஆண்டுகால யுத்தத்திற்கு பின்பும் தொடர்ந்து நிலவும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதோ குறிப்பிட்டதொரு படிப்பினையைப் பெறுவதற்கோ அல்லது தேசிய ஐக்கியத்தை அல்லது உடன்பாட்டை ஸ்தாபிப்பதோ அல்ல ஜனாதிபதியும் அரசாங்கமும் எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே இவ்வாணைக்குழுவாகும். ஏனைய சந்தர்ப்பங்களைப் போலவே பொது மக்களின் பணத்தையும் நேரத்தையும் விரயமாக்கும் நடவடிக்கையாகும். அதே சமயம் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களைப் போலவே தற்போதைய அரசாங்கமும் முதலாளித்துவ முறைமையின் கீழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அபிலாஷையுடன் அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் ஆற்றல் இல்லாத போது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது தீர்க்கும் திசையை நோக்கிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆற்றல் இல்லாத போது ஒரு பிரச்சினையை சரியாக புரிந்துகொள்ள முடியாது என்பது மீண்டும் சுட்டிக்காட்டப்படுகிறது"

"ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் ஸ்தாபித்தல் போன்ற அவசரப் பிரச்சினைகளை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தேவைப்படமாட்டாது.

ஜே.வீ.பீ.

http://www.jvpsrilanka.com

**ஜனநாயக இடதுசாரி முன்னணி**



"கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு இலங்கை என்ற தேசத்தை கட்டியெழுப்புவதற்கான கையேடாகும். யுத்த காலகட்டத்தையும் அதற்குப் பின்னணியாக அமைந்த தேசிய இனப்பிரச்சினையையும் அதனோடு இணைந்த ஏனைய பிரச்சினைகளையும் பற்றி இதுவரை தயாரிக்கப்பட்ட விபரமான அறிக்கையே LLRC அறிக்கையாகும். என்னைப் பொருத்தவரை இது மிகவும் வெற்றிகரமான ஓர் அறிக்கை இந்த அறிக்கையில் ஒரு சில குறைபாடுகள் இருப்பினும் நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை கட்டியெழுப்புவதற்கும் நாம் எடுக்கவேண்டிய சரியான பாதை இது என்பதையும் LLRC அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அறிக்கையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்."

**வாசுதேவ நாணயக்கார**

2012 ஜனவரி 13 தினமின பத்திரிகை

**ஜாத்திக்க ஹெல உருமய**

"இந்த பரிந்துரைகளில் இரண்டு விதமான குறைபாடுகள் உண்டு. இந்த ஆணைக்குழு தமக்கு வழங்கப்பட்ட பணிப்பாணைக்கு அப்பாற் சென்றுள்ளது. 2002 பெப்ரவரி 21ம் திகதி அல்லது போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதி முதல் 2009 மே 19ம் திகதி வரை அதாவது பிரபாகரன் உயிர்நீத்த திகதி வரையிலான காலகட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களை ஆராய்வதாகும். ஆனால் ஆணைக்குழு அதற்கு அப்பாலும் சென்றுள்ளது. தேசிய இனப்பிரச்சினை பற்றி உரையாடியவாறு அதிகாரத்தைப் பகிர்வதற்கு யோசனை வழங்கியுள்ளது. இது ஆணைக்குழுவிற்கு உரித்தான கடமையல்ல. அதிகாரத்தைப் பகிர்வதற்கு நாம் இடமளியோம்.



(மின்சக்தி வலு அமைச்சரும் ஜாதிக்க ஹெல உறுமயவைச் சார்ந்தவருமான **பாட்டலி சம்பிக்க ரணவக்க**

2012 ஜனவரி 01ம் திகதி லக்பிம ஞாயிறு வெளியீட்டிலும் 2011 டிசம்பர் 28 மௌபிம பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி**



"இந்த ஆணைக்குழ தனது அறிக்கையில் ஈ.பீ.டீ.பீ. கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பற்றி எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம். எமது ஸ்தாபனத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களையும் நாம் மறுக்கிறோம். கட்சித் தலைவர் ஆணைக்குழு முன்னர் சாட்சியளித்தபோது இத்தவறான தகவல்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை காரணமாக எமது கட்சியைப் பற்றிய தவறான அபிப்பிராயம் ஏற்படுகிறது. ஓர் உள்நோக்கத்தோடு இத்தகைய அடிப்படையற்ற விடயங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என நாம் சந்தேகிக்கின்றோம்."

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

த ஐலன்ட் 2011-12-30

**லங்கா சமசமாஜக் கட்சி**



நல்லிணக்கமும் தேசிய ஐக்கியமும் பற்றிய விடயங்களை சாதகமான அடிப்படை விடயங்களை முன்வைக்கின்றமை காரணமாக லங்கா சமசமாஜக் கட்சி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையை வரவேற்கிறது. இதன் மூலம் பாரதூரமானதும் விபரமானதுமான அறிக்கை கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு மூலம் வெளிப்படைத் தன்மையுடன் வெளியிடப்படுகிறது. இவ்வறிக்கை தயாரிக்கும் போது உரிய பிரகடனங்களையும் சகல தரவுகளையும் தனித்தனியாக இணைத்துள்ளனர். அவர்கள் முன் வைக்கும் முடிவுகள் நியாயமானவை. பரிந்துரைகள் கூருணர்வு கொண்டவை. அரசாங்கம் இயன்றளவு விரைவில் இதனை முழுமையாக அமுல்படுத்துமென எதிர்பார்க்கின்றோம்"

**திஸ்ஸ விதாரண** - லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் 2012-01-08 த ஐலன்ட்

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**



சில தீவிரவாதிகள் கூறும் விவரணங்களுக்கு முற்றிலும் மாறான நிலைப்பாட்டையே கம்யூனிஸ்ட் கட்சி கொண்டுள்ளது. ஆணைக்குழு எந்தவகையிலும் தனது பணிப்பாணையை மீறவில்லை. இவ்வாணைக்குழு மோதலை ஆய்வு செய்து தமிழ் மக்களின் மனக்குறைகளுக்கான அடிப்படைக் காரணங்களை அடையாளம் கண்டுள்ளதோடு விசேடமாக அவற்றிற்கு பரிகாரம் காணவும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இயன்றளவு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. ஆணைக்குழு பெற்ற பணிப்பாணையையிட்டு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணிப்பாணை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும்"

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்கமைய கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அதனுடைய தர்க்க முறை ஸ்தூல நிலைமை மற்றும் சாதகமான அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அதனுடைய பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்த வேண்டியுள்ளது. பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் சில குறுகிய காலத்திற்கு ஏற்றவை. இன்னும் சில நீண்டகாலத்திற்கு ஏற்றவை"

கம்யூனிஸ்ட் கட்சி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைகளை ஏற்று அங்கீகரிக்கிறது

2012 ஜனவரி 12 ஐலன்ட் பத்திரிகை

2012 ஜனவரி 19

**மேல் மாகாண மக்கள் முன்னணி**



கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு யுத்தத்திற்கு முன்னரும் யுத்தத்திற்குப் பின்னரும் யுத்த காலத்திலும் தமிழர்கள் பலவந்தமாக காணாமற் போகச் செய்தல், கடத்தப்படுதல், நீதிமன்றங்களுக்கு அப்பால் படுகொலை செய்தல் ஆகிய பிரச்சினைகளைப் பற்றி இவ்வாணைக்குழு ஆழமாக பரிசீலனை செய்யத் தவறிவிட்டது. இப்பரிந்துரைகளை அமுல்படுத்துவது பற்றி அரசாங்கமானது பாராளுமன்றத்தில் பரிந்துரைகளை செயற்படுத்துவது பற்றி வெளியிட்ட கூற்றில் ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் பாட்டலி சம்பிக்க ரணவக்க முன்வைத்த கூற்று நிராகரிக்கப்பட்டிருந்தாலும் ஏற்கனவே கூறப்பட்ட உறுதிமொழிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்துவது பற்றி திட்டவட்டமற்ற ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளது என திரு. மனோ கணேசன் கூறியுள்ளார்.

**மனோ கணேசன்**
2012-01-20 ஐலன்ட் பத்திரிகை

**இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்**



இப்போது அனைத்தும் மேசை மேல் வைக்கப்பட்டுள்ளன. எனவே கள்ளனும் பொலிஸும் விளையாட்டு விளையாட வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் சகல தரப்பினர்களும் குறிப்பாக சிறுபான்மையினங்களின் கருத்துக்களைப் பெற்று ஒவ்வொரு பரிந்துரையையும் அமுல்படுத்த வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவருக்கு பெரும்பான்மையினரின் ஆதரவு உண்டு. இதற்கு மேலதிகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் பரஸ்பரம் பேசியுள்ளதோடு ஒரு புரிந்துணர்வையும் ஏற்படுத்தியுள்ளன. எனவே இச்சந்தர்ப்பத்தை நாம் இழக்கக் கூடாது. "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த நடவடிக்கை என்ன?

**ஹசன் அலி**
2011-12-19 "நேஷன்"



கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆணைக்குழு எதுவித இடையீடும் இன்றி தமது கடமையை முடித்துள்ளது. அரசியல் ரீதியாகவோ வேறு வகையிலோ எதுவிதத் தலையீடும் இருக்கவில்லை. பெயர்போன பிரமுகர்கள் இவ்வாணைக்குழுவில் கடமையாற்றினார்கள். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். மறைப்பதற்கு ஒன்றுமில்லாத காரணத்தினால் புலனாய்வை மேற்கொள்ளுமாறு நானும் பல சந்தர்ப்பங்களில் புலனாய்வை ஊக்குவித்தேன். அனேக நாடுகள் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளன. யுத்தம் நடைபெற்ற காலத்தின் போது இலங்கையில் பல அழிவுகள் ஏற்பட்டன. அவை கிழக்கிற்கும் வடக்கிற்கும் மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. கொழும்பிலும் தென்னிலங்கையிலும் குண்டுகள் வெடித்தன.

**விநாயகமூர்த்தி முரளிதரன்**
மீள்குடியேற்றம் பற்றிய பிரதி அமைச்சர்.
http://www.dailynews.lk/2012/03/16/fea01.asp


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.srilankabrief.org

# கற்ற பாடங்களும் சித்தியடையாத பாடங்களும்

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு தொடர்பாக தமிழர் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் உள்ளடங்கிய ஒரு பிரசுரம் அண்மையில் வெளியிடப்பட்டது. அப்பிரசுரத்தின் நிறைவேற்றுச் சாராம்சத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு**

1. இலங்கையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமேயாயின் உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை உறுதிப்படுத்தும் நம்பத்தகுந்த பொறுப்புடமை செயற்பாடு ஒன்று தேவை என்ற கருத்தை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அதிகப்படியான மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தொடர்ச்சியாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு கருத்துத் தெரிவித்து வந்தது. 2010 மே 15ம் திகதி ஜனாதிபதி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு என்ற பெயரில் ஒரு விசாரணைக்குழுவை நியமித்ததோடு மேற்படி ஆணைக்குழு வகைப்பொறுப்புடைமை தொடர்பான பிரச்சினைகளையிட்டு நடவடிக்கை எடுக்கும் என்று சர்வதேச சமூகத்திற்குக் கூறினார்.

2. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் செயல்முறையும் அனுபவமும் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கத் தவறியது. வகைப்பொறுப்புடைமை வழிமுறை தொடர்பான சர்வதேச நியமங்களை கடைப்பிடிக்கவும் இவ்வாணைக்குழு தவறியது.

3. ஆணைக்குழு உறுப்பினர்களின் இனத்துவ சமபலமின்மை, அவர்களின் கடப்பாடுகள் தொடர்பான முரண் நிலை மற்றும் மேலோட்டமான உறுப்பினர்களின் சுயாதீனமற்ற தன்மை, பொதுவாக சர்வதேச மனித நேயச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் பற்றிய ஆணைக்குழு உறுப்பினர்களின் தேர்ச்சி குறைவாகக் காணப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளுடன் அல்லது பரந்துபட்ட முறையில் தமிழ் மக்களுடன் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாணை என்பன தொடர்பில் எந்தவித கலந்தாலோசனையும் மேற்கொள்ளாமை காரணமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவின் சுயாதீனம் பற்றிய உண்மை நிலை தொடர்பாக பாரதூரமான சந்தேகம் நிலவியது.

4. மேலும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் செயல்முறை பாதிக்கப்பட்டவர்களின் கண்ணோட்டத்தில் ஒப்பு நோக்கில் மிகக் குறைந்த முக்கியத்துவமே வழங்கப்பட்டது. உதாரணமாக கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களில் சாட்சி சேகரிப்பதற்காக கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு ஒதுக்கிய நேரத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒதுக்கிய நேரத்தோடு ஒப்பிடுகையில் போதியளவு நேரத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களில் செலவிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். கொழும்பில் சாட்சிகளை பதிவுசெய்வதற்காக 45 நாட்கள் ஒதுக்கப்பட்டன. அதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாட்சிகளைப் பதிவு செய்வதற்கு 22 நாட்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டன. போதிய நேரம் இல்லாமையையே ஆணைக்குழு இது விடயமாக காரணமாக சுட்டிக்காட்டியது.

5. ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி கூறுவோரின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகள் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவிற்கு இருக்கவில்லை. சாட்சி பதிவு செய்பவர்களின் பாதுகாப்புக் குறித்து திருப்திகரமான ஒரு திட்டம் இன்மையால் நிலமை மேலும் மோசமாகியது. அதேசமயம் ஆணைக்குழு உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக போதிய அக்கறை காட்டவும் இல்லை. நடைமுறையில் சாட்சி பதிவு செய்வோரில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு பாரதூரமான குறைபாடுகள் காணப்பட்டன. சித்திரவதைக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் பாலியல் தொந்தரவுக்கு ஆளாதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முறைப்பாடு செய்த கல்முனை பிரதேசத்தில் ஒரு பெண்மணி சாட்சி பதிவு செய்யப்பட்ட பின்னர் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் 4ம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இது ஒரு உதாரணமாகும். குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் இலங்கையில் நிலவும் பகைமைச் சூழ்நிலையில் அரச சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் அத்தகைய சாட்சிகளைப் பதியும் சாட்சிக்காரர்களிடம் பழி வாங்கப்படமாட்டாது என்பதற்கு எதுவித உத்தரவாதமும் கிடையாது. சாட்சி பதிவு செய்பவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே ஓர் நம்பிக்கை கட்டியெழுப்பப்படாவிடில் எந்தவொரு வகைப்பொறுப்புப் பொறிமுறையும் பயனற்றதாக மாறிவிடும். மேலும் இன்றும் வெளிநாடுகளில் உயிருடன் வாழும் பல சாட்சிக்காரர்களின் வீடியோப் பதிவுகளை ஏற்க மறுத்தமையும், இலங்கையைப் பற்றி அச்சத்தோடு வாழ்ந்தவர்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

6. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட உரிமை மீறல்கள் பற்றி ஒரு நேர்மையான வகைப்பொறுப்பு வழிமுறையோ போதிய வளங்களோ போதிய பணிக்குழுவினரோ LLRC ஆணைக்குழுவிற்கு இருக்கவில்லை. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாட்சிகளிடமிருந்து சாட்சிகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கிய நேரம் போதியதாக அமையவில்லை. அனேகமான சந்தர்ப்பங்களில் சாட்சி கூற முன்வந்தவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அத்தகையோர் தமது கருத்துக்களை ஆணைக்குழுவிற்கு எழுதி அனுப்பலாம் என LLRC ஆணைக்குழு அறிவித்தது.

7. சுமார் ஓர் ஆண்டு காலத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட LLRC யின் இடைக்கால அறிக்கை அமுல்படுத்தப்படவில்லை. இவ்விடைக்காலப் பரிந்துரைகள் அமுல்படுத்துவதை உறுதி செய்வதற்கு உருவாக்கப்பட்ட நிறுவன ஆலோசனைச் செயற்குழு வெளியிட்ட முன்னேற்ற அறிக்கையின் படி உண்மையான முன்னேற்றம் காணப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த இடைக்காலப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்தால் முடியாத காரணத்தினால் அல்லது அரசாங்கத்திடம் போதிய அர்ப்பணிப்பு இல்லை என்பதையே சுட்டிக்காட்டியது.

8. சட்டம் தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல விடயங்களையிட்டு நடவடிக்கை எடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 2011-12-16ம் திகதி பாராளுமன்றத்தின் ஊடாக LLRC ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது ஆனால் போர்க்குற்றங்கள் மனித குலத்திற்கெதிரான குற்றச்சாட்டுக்கள் என்பவற்றை உறுதி செய்யும் சர்வதேச மனித நேயச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை LLRC வேண்டுமென்றே அல்லது குறைத்து மதிப்பிட்டுள்ளது. யுத்த சூன்ய வலயங்களில் வாழ்ந்த சிவிலியன்கள் வேண்டுமென்றே அல்லது கவனயீனமாக ஆபத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

மருத்துவமனைகள் உட்பட சிவிலியன்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துதல், சரணடைந்தோரை கொலை செய்தல் அல்லது காணாமற் போகச் செய்தல் போன்ற குற்றங்களும் இவற்றுள் உள்ளடங்கும்.

9. மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது பற்றி LLRC ஆணைக்குழுவின் பிரவேசமும் வழிமுறையும் இரண்டு காரணங்களினால் தவறானவை.

1. தெரிவுசெய்யப்பட்ட சாட்சிகளை மாத்திரம் ஈடுபடுத்துதல்
2. குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தாமை.

10. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணியாற்றிய அரச வைத்தியர்களின் சாட்சிகள் மேற்கோள் காட்டப்படும் போது குறிப்பிட்ட வைத்தியர்கள் சாட்சியளிக்கையில் எதிர்நோக்கிய சூழமையை கருத்திற்கொள்ளாமல் LLRC கிழக்கில் செயற்பட்டது. போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற நிலமைக்கு முன்பு அவர்கள் முன்வைத்த கூற்றுக்கள் பகிரங்கமாகப் புறக்கணிக்கப்பட்டன. பின்னர் இவ்வைத்தியர்கள் கைது செய்யப்பட்டனர். எனவே இவ்வைத்தியர்கள் LLRC ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சிகளைப் பற்றிய நம்பகத் தன்மை உண்மையிலேயே கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியதாகும். அதே சமயம் விமானிகளற்ற விமானங்கள் மூலமாகப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப் படங்கள் போன்ற தீர்க்கமான சாட்சிகளை அழைப்பதற்கு LLRC தவறிவிட்டது. குறிப்பாக சகல தாக்குதல்களும் வீடியோவில் பதிவுசெய்யப்பட்டது என்பதும் கட்டளைத் தளபதிகளின் அங்கீகாரத்துடன் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த சாட்சிக்காரர்கள் சாட்சியமளித்து பதிவுசெய்தனர். விமானத் தாக்குதல்கள் பற்றிய வீடியோப் பதிவுகளும் இராணுவ லொக் குறிப்புகளும் சாட்சிகளாக அழைக்கப்படவில்லை. முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திருமதி. இமெல்டா சுகுமார் வழங்கிய சனத்தொகைப் பரம்பல் பற்றிய மதிப்பீடுகளோ அல்லது சர்வதேசப் பிரதிநிதிகளிடம் உணவு வழங்க வேண்டாம் என்று கோரி உதவி அரசாங்க அதிபர்களிடம் அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் வெளியிட்ட கடிதங்களின் உண்மை தன்மை பற்றியும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு போதிய கவனம் செலுத்தவில்லை. அதே சமயம் 2009 பெப்ரவரி நடுப்பகுதியில் வன்னியின் சனத்தொகை மிகக் குறைந்த அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிவித்தல் பற்றியும் ஆணைக்குழு கருத்திற்கொள்ளவில்லை. இத்தகைய அறிவித்தல்கள் மூலம் வன்னியில் பசியின் காரணமாக துன்பப்பட்ட மக்களுக்கு உணவு கிடைப்பதைத் தடுக்கும் வகையில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

11 அதே சமயம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு சரியான முறையில் சட்டத்தை ஏற்புடமையாகக்கொள்வதற்கும் தவறிவிட்டது. சர்வதேச மனித நேயச் சட்டங்கள் மீறப்படுகையில் ஏற்படக்கூடிய விபரீதங்களை ஆழமாகக் கலந்துரையாடத் தவறியுள்ளது. நம்பக்கூடிய வகையில் சர்வதேசக் குற்றவியல் சட்டங்கள் மீறப்பட்டிருக்கையில் அதுபற்றி கவனம் செலுத்தவும் ஆணைக்குழு தவறியுள்ளது. சர்வதேச மனித நேயச் சட்டத்தின் கீழ் ஓர் குடிமகனும் குடிமக்களும் பற்றிய வரைவிலக்கணம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என ஆணைக்குழு தவறாக சுட்டிக்காட்டுகிறது. LLRC ஆணைக்குழு பகை நடவடிக்கைகளின் போது நேரடியான, தொடர்ச்சியான பங்களிப்பு அமுல்படுத்தப்படும் வழிமுறையை பரிசீலனை செய்வதன் மூலம் சர்வதேச மனிதநேயச் சட்டத்தை வரைவிலக்கணம் செய்திருக்க முடியும். அது மாத்திரமல்லாமல் பகைமை நடவடிக்கைகளின் போது நேரடியான பங்குபற்றாத நபர் ஒரு சிவிலியனாகக் கருதப்படுவார் என மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது, இப்படியான சிவிலியன்களை இலக்கு வைக்கக்கூடாது என சர்வதேச மனித நேயச் சட்டம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. சட்டம் தொடர்பான கவனத்தை ஏற்பதற்குப் பதிலாக LLRC ஆணைக்குழு இலங்கையின் அனுபவங்களை இதற்கு முன்னர் கண்டிராத வகையில் எடுத்துக்கூறுவதற்கு முயற்சி செய்கின்றது. அவ்வாறாயினும் பகைமை நடவடிக்கைகளில் நேரடியாக பங்குபற்றவில்லை என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்து இலங்கையின் நிலைமைகளுக்கு அது ஏற்புடையதாகாதா என்பது பற்றிய காரணிகளை எடுத்துக்கூறவில்லை. அது மாத்திரமல்ல சிவில் குடிமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் முழுமையாக மனிதநேயச் சட்டங்களுக்கு முரணானவை அது மாத்திரமல்லாமல் அது பூரணமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சிவில் குடிமக்களிடையே வரைவிலக்கணத்திற்கு அப்பாற்பட்ட போராளிகள் செயற்படும் போது சிவில் குடிமக்களின் அந்தஸ்து மாறமாட்டாது என்பதை யுகோஸ்லேவியா தொடர்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டது.

12 யுத்த சூனியப் பிரதேசங்களில் தங்கிவாழ்ந்த சிவில் குடிமக்கள் வேண்டும் என்றே அரச படைகளினால் இலக்கு வைக்கப்படவில்லை என LLRC ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. யுத்த சூனியப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் சாதாரண குடிமக்களுடன் இரண்டறக் கலந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்ற நிலைமையை LLRC ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. அரச பாதுகாப்புத் துறை வெறுமனே யுத்த சூனியப் பிரதேசத்திலிருந்து இலக்கு வைத்த தாக்குதல்கள் அரச படைகளுக்கு எதிரான தாக்குதல்களை எதிர்நோக்கியதாகவே அமைந்தது.

13 முதலில் குறிப்பிட்டதொரு தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக இராணுவ ரீதியான நிலைப்பாடு காரணமாக நீதிக்குப் புறம்பான சிவில் மக்கள் ஆகிய இரண்டும் ஒரே இலக்காக மாறியபோது அது நியாயமானதாக கருதப்படவில்லை. ஏனெனில் சர்வதேச மனித நேயச் சட்டங்கள் அமுல்படுத்தப்படாமை இதிலிருந்து புலனாகியது.

14 இரண்டாவதாக மோதலினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பிரிவினர் முன்வைக்கும் விடயங்கள் குறிப்பாக யுத்த சூனிய வலயங்களில் சுதந்திரபுரம் சந்தியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய நிலையத்தை நோக்கி தாக்குதல் நடத்துவது இது பற்றி LLRC ஆணைக்குழு கூடிய அக்கறை காட்டவில்லை. அதேசமயம் LLRC ஆணைக்குழு விடுதலைப் புலிகளுடைய தாக்குதலுக்கு பிரதித் தாக்குதல்கள் நடத்துவது அநீதியானவை எனவே அதை பொதுமைப்படுத்துவது முக்கியமாகும்.

15 மூன்றாவதாக பாதுகாப்புப் படையினரின் செயற்பாடு விகிதாசார முறையில் பார்க்கும் போது அந்தக் கோட்பாடுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது என ஆணைக்குழு தவறான ஒரு முடிவுக்கு வருகிறது. LLRC ஆணைக்குழு தாக்குதல்கள் விகிதாசார ரீதியாக இடம்பெற்றமையால் இம்முடிவுக்கு வந்தது என தவறாகக் கூறலாம். இராணுவம் சாதகமான முறையில் சிவில் குடிமக்களின் மரணங்கள் பற்றி ஒவ்வொரு தாக்குதல்களின் பின்னர் சிவில் குடிமக்களின் எண்ணிக்கை பற்றி நியாயமான மதிப்பீடு இன்றி இவ் ஆய்வை நடைமுறைப்படுத்த முடியாது. மேலும் விசேடமாக இரண்டாவது மூன்றாவது யுத்த சூனியப் பிரதேசங்களில் சிவில் குடிமக்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களைக் குறைப்பதற்காக பாரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. பாதுகாப்புப் படையினருக்கு வேறு மாற்றீடு இருக்கவில்லை. ஆணைக்குழு இதுபற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாகச் சிந்திக்கிறது. முதலீட்டுப் பிணக்குகளை தீர்க்கும் சர்வதேச மத்திய நிலையங்கள் 1990 வரை கிடைத்த ஏற்புடையதாகாத முன்னுதாரணங்களை மேற்கோள்காட்டி யுத்தம் இடம்பெற்ற அனைத்து நிலைமைகளையும் மீழுருவாக்க முடியாது என்ற முடிவிற்கு வந்துள்ளது. ஆனால் இலக்கு தாக்குதல் நடத்துவதற்கு முன்பு எதிர்பார்க்கும் பெறு பேறுகளையும் நேரடியான இராணுவ வெற்றிகளையும் விகிதாசார முறைப்படி அதன் பிரதிபலிப்பாக கணக்கிட வேண்டும். ஒரு பாரிய தாக்குதலை நடத்துவதற்கு முன்பாக சிவில் குடிமக்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைப் பற்றி ஓர் படையணித் தலைவர் இரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

16 இது விடயமாக கட்டளைத் தளபதிகள் யுகோஸ்லேவியா தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்படி தீர்மானத்தை வழங்கியுள்ளமையை மேற்கோள் காட்டுவதற்கு மேலும் இரண்டாம் மூன்றாம் யுத்த சூனியப் பிரதேசங்களில் ஒரு தரப்பினரின் கருத்துக்களை மாத்திரம் கவனத்திற்கொள்ள முடியாது. இந்த விடயத்திலும் ஆணைக்குழு தோல்வி கண்டுள்ளது. முதலாவது யுத்த சூனியப் பிராந்தியத்தின் அனுபவங்களை சிவில் சமூகமும் மறுபுறம் விடுதலைப்புலிகளின் உபாயங்களின் அனுபவங்களையும் சிவில் சமூகம் பாரதூரமான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளமையையும் அரசு இரண்டாம் மூன்றாம் யுத்த சூனியப் பிரதேசங்களை நன்கு அறிந்திருந்தது என சுலபமாக அனுமானிக்க முடியும். யுத்த சூனியப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்தமையால் அவை தாக்கப்பட முடியும் என அறிவித்து மீண்டும் மீண்டும் யுத்த சூனியப்பிரதேசங்களை அரசு பிரகடனப்படுத்தியது. இதன் மூலம் சிவிலியன்கள் ஆபத்துக்கு உட்படுத்தக்கூடிய குற்றச்சாட்டை அனுமானிக்க முடியும்.

17 அரசுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுக்கள் பற்றி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பகுப்பாய்வுக்கு அமைய பல முரண் நிலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஒரு புறம் பாதுகாப்புப் படையினர் தமது சகல தாக்குதல்களையும் மிகக் கவனமாகத் திட்டமிட்டு செய்தது என்றும் மறுபுறம் சிவிலியன்கள் தங்கியிருக்கும் இடங்களைப் பற்றி அறிவதற்கு நவீன விஞ்ஞான உபகரணங்களை பயன்படுத்தியது என்றும் LLRC ஆணைக்குழு ஏற்றக்கொள்கிறது. அதேசமயம் சிவிலியன்களின் மரணங்கள் தவிர்க்க முடியாத வகையில் இடம்பெற்றது என்றும் கூறப்படுகிறது. அரசுக்கு வேறு மாற்றீடு இருக்கவில்லை என்றும் LLRC கூறுகிறது. விடுதலைப் புலிகளின் சுடுகலன்களின் தாக்குதலை எதிர்ப்பதற்கு அந்தந்த இடங்களில் களத்திலே கட்டளைத் தளபதிகளாகச் செயற்பட்டவர்கள் ஆலோசனை வழங்கினர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. எதுவித எதிர் தர்க்கமும் இன்றி இவ் ஆய்வு மேற்கோள் காட்டப்படுவதன் மூலம் தர்க்க ரீதியற்ற இந்த ஆய்வின் மூலம் அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறைந்த பட்சம் நேர்மையாக ஆய்வு செய்வதற்கு LLRC தவறியுள்ளது.

18 பாதுகாப்புப் படையினர் வேண்டுமென்றே வைத்தியசாலைகளை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தினர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக LLRC யின் பகுப்பாய்வு பற்றியும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகள் ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளானதை ஏற்றுக்கொள்ளும் LLRC இது தொடர்பாக LLRC க்கு எதிரான விமர்சனங்களையும் காணக்கூடியதாக உள்ளது. மருத்துவமனைகள் ஷெல் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டது என்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கிறது. ஆரம்ப சான்றாதாரங்கள் இல்லை என்ற காரணங்களை முன்வைத்து ஷெல் தாக்குதல்களை இத்தரப்பினர் மேற்கொண்டனர் என திட்டவட்டமாகக் கூற முடியாது எனவும் LLRC முடிவு செய்கிறது. சிவிலியன்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கு பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளாகக் கருத்திற்கொண்டு நோக்குகையில் அந்த நிலைப்பாட்டை ஏற்க முடியாது. சிவிலியன்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகளை குறைப்பதற்கு இச்சம்பவங்களை அவதானிக்கக்கூடியவாறு இன்றைய மோதல் பிராந்தியத்தை அவதானிக்கக்கூடிய கண்காணிக்கும் இயந்திரங்கள் படையினருக்கு இருந்ததாக LLRC ஏற்றுக்கொள்கிறது. அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அவதானிப்புகளையோ சாட்சிகளாக அவற்றை முன்வைப்பதற்கோ மருத்துவ மனைகளுக்கு எதிரான ஷெல் தாக்குதல்கள் பற்றி ஆய்வு செய்யவோ ஆணைக்குழுவினால் முடியாதுள்ளது.

19 பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் அல்லது சரணடைந்த பின்னர் ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் LLRC ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்தகைய முறையில் பலவந்தமாக காணாமற் போதலுக்கு ஆளான முறைப்பாடுகள் பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கமைய மேற்படி காணாமற் போதல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தவோ ஏற்புடைய குற்றவியல் வழக்குகளைத் தொடர்வதற்கான ஆவணங்களை சட்டமா அதிபருக்கு முன்வைக்கவோ அல்லது விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்கவோ இது தொடர்பாக விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்குமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது. எவ்வாறாயினும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு ஒரு சிறு எண்ணிக்கையிலான காணாமற் போதல்களே இவை என கூறுகிறது. உண்மையில் புத்தளத்தில் இடம்பெற்ற விசாரணை அமர்வின் போது LLRC ஆணைக்குழு தவிசாளர் விசாரணை மேற்கொள்ளும் ஓர் நடவடிக்கையை மேற்கொள்வதை புறக்கணித்தார். இத்தகைய விசாரணை மேற்கொள்ளும் ஆற்றல் இவ்வாறாக புறக்கணிக்கப்பட்ட நிலையில் 2009 மே 17 க்கும் 20 க்கும் இடைப்பட்ட காலத்தில் திட்டவட்டமான தீர்மானத்தை மேற்கொள்கிறது. இவ்வாறு தவறுதலாக விடயங்கள் முன்வைக்கப்பட்டதனால் எதிர்கால விசாரணைகளுக்கு ஒருதலைப்பட்சமான விசாரணைகள் மேற்கொள்ள இடமுண்டு. பலவந்தமான காணாமற் போதல்கள், சரணடைந்தோரை படுகொலை செய்வதற்கான திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்ற அபாயங்கள் இவை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மனித குளத்திற்கெதிரான குற்றச்சாட்டுக்கள் என்பன பற்றி துலங்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 LLRC ஆணைக்குழு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் குடிமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் பற்றி அடிப்படை கவனம் செலுத்த வேண்டும். அதுபற்றி தமக்கு பணிப்பாணை வழங்கப்பட்டுள்ளது என ஏற்றுக்கொண்டாலும் மேற்படி இழப்பீடுகளின் அளவையிட்டு, எண்ணிக்கையையிட்டு தனது கவனத்தைச் செலுத்தவில்லை. யுத்தசூனியப் பிரதேசத்தில் சிக்குண்டிருந்த சிவிலியன்கள் பற்றி முக்கிய இரண்டு தகவல் மூலங்கள் LLRC முன் சமர்ப்பிக்கப்பட்டன. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், அதேசமயம் முல்லைத்தீவு உப அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திருமதி. இமெல்டா சுகுமார் இத்தகவல்களை வழங்கியிருந்தனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய கச்சேரிகளின் புள்ளிவிபரங்களுக்கு அமைய 2008 ஒக்டோபர் மாதம் வன்னியில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 429,059 என மன்னார் ஆயர் குறிப்பிட்டிருந்த அதே வேளை முல்லைத்தீவு உப அரசாங்க அதிபர் சாட்சியளித்த போது தனது அறிவுக்கு எட்டிய வகையில் 2009 ஜனவரி மாதத்தில் புதுமாத்தளன் யுத்த சூனியப் பிராந்தியத்தில் தங்கியிருந்த சிவிலியன்களின் எண்ணிக்கை 360,000 ஆகும். வன்னியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த சிவிலியன்களின் எண்ணிக்கை 282,380 ஆகையால் 75,000 இற்கும் 146,679 இற்கும் இடையிலான எண்ணிக்கையினர் பற்றி எதுவிதத் தகவலும் இல்லை. இத்தகைய முக்கிய சான்றாதாரங்கள் தம் முன் வைக்கப்பட்ட போதிலும் சிவில் பிரஜைகள் பற்றி ஒரு திட்டவட்டமான தகவல்கள் இல்லாமையால் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அவர்கள் இறந்திருப்பார்கள் என்று LLRC ஆணையாளர்கள் குறிப்பிடவில்லை.

21 காணாமற் போகச் செய்தல், கடத்துதல், தடுத்து வைக்கப்பட்டோர் மீதான கவனிப்பு, சட்டவிரோதமான ஆயுதக் குழுக்கள், சிறுவர்களை பலவந்தமாகப் படைகளில் சேர்த்தல் அபாயவாய்ப்புக்கு உட்பட்ட குழுக்கள் இடம்பெயர்ந்தோர், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர். வடக்கு கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம் சமூகங்கள் கருத்துச் சுதந்திரம், தகவல்களை அறியும் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் நடமாடும் சுதந்திரம் மனித உரிமைகள் மீறல் போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு LLRC ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இவ்வாணைக்குழு, சில சிக்கலான விடயங்களுக்குக் கவனம் செலுத்தத் தவறிவிட்டது. இவ்வாணைக்குழுவின் பிரவேசத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. உதாரணமாக மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இனிய பாரதி தொடர்பாக ஆணைக்குழுவின் அறிக்கை, மனித உரிமை மீறல்கள் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிடவில்லை. கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற காணாமல் போதல்கள் பற்றி இங்கு குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக நல்லிணக்கம் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிடப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட காணாமற் போதல்கள் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பதிலாக நல்லிணக்கம் பற்றிய அத்தியாயத்தில் இனிய பாரதி தொடர்பாக விளக்கமற்ற சில விடயங்களை கூறியுள்ளது. இந்நபர் பற்றி முன்வைக்கப்பட்ட சான்றாதாரங்களோ அல்லது TMVP மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் அவருக்கிருக்கும் உறவுகளைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேலதிகமான தகவல்களை ஆய்வு செய்வதற்கு ஆணைக்குழு முயற்சி எடுத்துள்ளது.

22 இந்நிலமைகளின் கீழ் LLRC தனது நடுநிலையையும் நம்பிக்கையையும் குறைத்துக் கொண்டுள்ளதோடு குற்றம் புரிந்தோருக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நிலைப்பாட்டை வலுவூட்டியுள்ளது.

23 LLRC ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆய்வு செய்வதாக பாதிக்கப்பட்ட சாட்சியளித்தோருக்கு உறுதிமொழி கூறியது. இவ்வுறுதி மொழி மூலம் காணாமற் போதல், தடுத்து வைக்கப்படுதல், காணி அபகரிப்பு, தாக்குதல்கள், தொந்தரவுகள், பலவந்தமாக பணம் கோருதல் (கப்பம், மரணங்களை விளைவித்தல் போன்ற சம்பவங்களையிட்டு தனித்தனியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதாக கூறியது. எவ்வாறாயினும் பரிந்துரை அறிக்கையில் மேலும் இவை பற்றி ஆய்வு செய்வதாக சுருக்கமான புள்ளிவிபரங்களையும் ஆய்வுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால் சாட்சியளித்தோருக்கு நடைமுறையில் எதுவித நன்மையும் கிட்டவில்லை. ஆணைக்குழு தான் கண்டறிந்த திட்டவட்டமான தகவல்களை குறிப்பிட்ட சாட்சிக்காரர்களிடம் எவ்வாறு தொடர்பாடல் செய்யப் போகின்றது என்பது பற்றி எதுவிதமான தெளிவான கருத்தும் முன்வைக்கப்படவில்லை. பகிரங்க விசாரணைகளின் போது உறுதியளித்தவாறு ஆணைக்குழு சாட்சியளித்தோருக்கு வழங்குவதாகக் கூறிய விடைகள் ஒன்றும் இந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

24 பால்நிலை சம்பந்தமான சிக்கல்களைப் பற்றி செயற்படுகையில் தமது இயலாமையை மதிப்பீடு செய்வதற்கு ஆணைக்குழு தோல்வி கண்டுள்ளது. ஆணைக்குழுவின் உருவாக்கத்தைப் பொறுத்து உண்மையை வெளிப்படுத்தும் வகையில் பெண்களுக்குப் பாரிய தடைகள் ஏற்பட்டன. அதுமாத்திரமல்லாமல் LLRC ஆணைக்குழு பெண் சாட்சியளிப்போரைப் பொறுத்தவரை அவர்களுடைய அபிமானத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் அகௌரவத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடந்துகொண்டதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. சாட்சியளித்த பெண்கள் தமது துன்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அழுது புலம்பியபோது அவர்கள் கண்டிக்கப்பட்டனர், எழுத்து மூலம் அவர்களது சாட்சிகளை பதிவு செய்து தருமாறு ஆணைக்குழு கட்டளையிட்டது. இதற்கமைய ஆணைக்குழு முன்னர் தமது அனுபவங்களை எடுத்துக்கூறிய பெண்களை கருணையற்ற நடத்துகைக்கு உட்படுத்தப்பட்டனர்.

25 மனித உரிமைகள் மீதான LLRC யின் பரிந்துரைகளில் அனேகமானவை நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு உட்பட்ட பல நிறுவனங்களின் சுயாதீன-மான தன்மை இதற்கமைய அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 18வது திருத்தம் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துகையில் வெற்றிகொள்ள முடியாத சவாலாக அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 வகைப்பொறுப்புக் கூறுவது தொடர்பாக நேரடியாகப் பொருத்தமுடைய பல்வேறு விடயங்களைப் பற்றி LLRC ஆணைக் குழுபரிந்துரைகளைச் செய்துள்ளது. இப்பரிந்துரைகளில் சாதகமான அம்சங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டணி அதனை வரவேற்பதுடன் பூரண ஒத்துழைப்பையும் வழங்கும். எவ்வாறாயினும் வகைப்பொறுப்பு தொடர்பான பிரச்சினைகளையிட்டு தீர்வு காண்பதாயின் இப்பரிந்துரைகளை தவறாகப் புரிந்துகொள்ளவேண்டும். இப்பரிந்துரைகளில் சாதகமான அம்சங்களும் உண்டு. இவை அமுலாக்கப்படுமேயாயின் தமிழர் தேசியக் கூட்டமைப்பு அதை ஆதரித்து வரவேற்கும். அதே சமயம் இப்பரிந்துரைகளின் அமுலாக்கம் தொடர்பாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு கண்காணிக்கும். எவ்வாறாயினும் வகைப்பொறுப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு இப்பரிந்துரைகள் தீர்வாக அமையமாட்டாது.

27 வகைப்பொறுப்புடன் தொடர்பில்லாத LLRC பரிந்துரைகளுக்கிடையே அதிகாரப் பகிர்வு தொடர்பான பரிந்துரைகளை குறிப்பிட வேண்டும். அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு அரசியல் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும் ஜனநாயக நிறுவனங்கள் எதிர்நோக்கும் ஏனைய பாரதூரமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையாக அமையும் என ஆணைக்குழு வலியுறுத்திக் கூறுகிறது. அடிமட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் மாகாண சபை முறைகளில் காணப்படும் குறைபாடுகள் அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்கிறது. ஆனால் இதன் உண்மையான மாதிரியை எடுப்போமாயின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு முன்வைத்துள்ள நிரந்தரமான யோசனை மாகாண மட்டத்திலுள்ள அரசியல் தலைமைகள் மக்கள் மத்தியில் நம்பகத் தன்மை வாய்ந்த முறையில் உணர்வு பூர்வமாக செயற்படுவதாகும். அதே சமயம் மாகாணப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டாம் சபை உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. அதிகாரப் பகிர்வு சம்பந்தமான இக்கருத்துக்கள் வெறுமனே அலங்கார வார்த்தைகளாகும். 2005ம் ஆண்டில் ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகளின் செயற்குழுவின் பெரும்பான்மை அறிக்கை உட்பட முன்வைக்கப்பட்ட கடந்தகால யோசனைகளுடன் ஒப்பு நோக்கிப் பார்ப்பதில்லை. அவ்வாறாயினும் அண்மையில் 13வது அரசியல் அமைப்பிற்கான திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி முன்வைத்த கருத்துக்களை நோக்குகையில் LLRC ஆணைக்குழுவின் குறைந்தபட்ச யோசனைகள் செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகமே. இக்கருத்து தற்போதைய அரசு அர்த்தபுஷ்டியுள்ள அரசியல் தீர்வுக்குத் தயாரில்லை என்பதை எடுத்துக் கூறுவதோடு தமிழ் மக்களின் அச்சத்தையும் பீதியையும் மேலும் அதிகரித்துள்ளது.

28 ஒரு வகையில் LLRC ஆணைக்குழு வடபகுதியில் இராணுவப் பிரசன்னத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்விடயத்தை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது. இயன்றளவு விரைவில் பாதுகாப்புப் படையினர் நீக்கப்பட்டு சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. தமிழர் தேசியக்கூட்டமைப்பு இப்பரிந்துரை தொடர்பாக தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற அதே வேளை எதிர்வரும் ஒரு சில மாதங்களில் இதன் அமுலாக்கத்தை அவதானித்து பொது மக்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

29 இத்தகைய சாதகமான பரிந்துரைகளுக்கு மேலதிகமாக உண்மை, நீதி, நியாயம், பழிவாங்காமை, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பேணுதல் போன்ற சர்வதேச பிரமானங்களுக்கு ஏற்புடைய வகையில் வகைப்பொறுப்புக் கூறும் வழிமுறை துரிதமாக அவசியப்படுகிறது. இத்தகைய ஒரு செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அரசு தவறியுள்ளமையால் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் விசேட நிபுணர்களின் செயற்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இலங்கையின் வகைப்பொறுப்புடமையை முன்னெடுத்துச் செல்லவும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தைக் கூறுகின்றது.

ராவய பத்திரிகையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்செயற்பாட்டின் போது நாம் மனிதர்களின் கருத்துக்களை ஆராய்வோம்.
அவற்றை வெறுமனே அலுவலகக் கதிரைகளில் அமர்ந்துகொண்டு நடைமுறைப்படுத்த முடியாது.
நான் சரளமான டீஷேட்டையும் இறப்பர் செருப்புக்களையும் அணிந்துகொண்டு
கிராமம் கிராமமாகச் சென்று மக்களோடு உரையாடுவேன்.
நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இவ்வேலைத்திட்டம்
சொல்லால் அல்ல செயலால் நிறைவேற்றப்பட வேண்டும்.
இந்நிகழ்ச்சித்திட்டம் சேரிகளில் வாழும் மக்கள் மத்தியில் மாத்திரமல்லாது
நகரிலும் கிராமங்களிலும் வாழும் மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல வேண்டும்.
நாம் இதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்.

---

2011 இல் நோபல் சமாதானப் பரிசை வென்ற லைபீரிய சமாதானச் செயற்பாட்டாளரான
திருமதி. லேமா க்போவி

ISSN 955-1800-0061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org